# வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

(1987 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனத்தை அல்லது அரசுக்குடமையான வியாபார முயற்சிகளை அரசாங்க கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் கீழ் 1992.06.01 ஆம் திகதியிலிருந்து கம்பனியொன்றாக மாற்றப்பட்டது)





# ஆண்டறிக்கை
# 2020/2021

இலங்கையின் தேசிய சரக்கனுப்பல் நிறுவனம்

## வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
2020 / 2021 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

உள்ளடக்கம் பக்கங்கள்


| | |
|---|---|
| உள்ளடக்கப் பக்கம் | 1 |
| தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு கூற்று | 2 |
| ஆவண இணைப்புக் கடிதம் | 3 |
| பணிப்பாளர் சபை | 4 - 6 |
| முகாமைத்துவக் குழு | 7 - 9 |
| தலைவரின் மீளாய்வு | 10 - 14 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 15 – 17 |
| நிலைத்துநிற்கும்தன்மை பற்றிய அறிக்கை | 18 -23 |
| கணக்காய்வுக் குழு அறிக்கை | 24 - 28 |
| நன்றியுரைத்தலும் அலுவலர் குழாத்திற்கு நன்றியும் | 29 |
| சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை | 30 - 52 |
| முழுமொத்த வருமானக் கூற்று | 53 - 54 |
| நிதி நிலமைக் கூற்று | 55 - 57 |
| உரிமைமுதல் மாற்றக் கூற்று | 58 - 59 |
| காசுப் பாய்ச்சற் கூற்று | 60 - 61 |
| நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 62 - 123 |
| நிர்வாகச் செலவுகள் | 124 - 125 |

**தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு கூற்று**

# தொலைநோக்கு

இந்நாட்டிற்காக நம்பகரமானதும் பயனுறுதி வாய்ந்ததுமான தேசிய கப்பல் தொகுதியொன்றை அபிவிருத்தி செய்தல்.

# பணிநோக்கு

தேசிய சரக்கனுப்பல் நிறுவனத்தின் உதவி தேவைப்படும், இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் உள்நாட்டுக் கரையோர வர்த்தகம் ஆகியவற்றின் கடல் போக்குவரத்து தேவைகளைச் சமாளித்தல்.

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**
**2020 / 2021 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்**

ஆவண இணைப்புக் கடிதம்

மாண்புமிகு. துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு
இல. 19, சைத்திய வீதி
கொழும்பு 01.

அன்புடைய ஐயா,

1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனங்களையும் அரசுக்குடமையான வியாபார முயற்சிகளையும் அரசாங்க கம்பனிகளாக மாற்றும் சட்டத்தினதும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க, 2020.04.01 ஆம் திகதி தொடக்கம் 2021.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதி சார்பில் இக்கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பிலான ஆண்டறிக்கையையும் நிதிக் கூற்றுக்களையும் முன்னளிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தங்களின் உண்மையுள்ள,
**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**

**டபிள்யு.எஸ். வீரமன்**
**தலைவர்**

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
இல. 27, MICH கட்டடம்
சேர் ராஷிக் பரீட் மாவத்தை
கொழும்பு 01.

**திகதி: 30.09.2022**

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**
**2020 / 2021 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்**

**பணிப்பாளர் சபை**

**<u>2020.04.01 ஆம் திகதி தொடக்கம் 2021.03.31 ஆம் திகதி வரை</u>**

திருவாளர். டபிள்யு.எஸ். வீரமன்
தலைவர்
2019.12.20 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

திருவாளர். திமுத் ஜகோடாராச்சி
நிறைவேற்றுப் பணிப்பாளர்
2020.10.08 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

திருமதி. டி.எச்.எஸ். புள்ளபெரும
பணிப்பாளர் / திறைசேரிப் பிரதிநிதி
2020.01.11 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

கலாநிதி. ஐ.டி.எம். ரத்நாயக்க
பணிப்பாளர்
2019.12.20 ஆம் திகதி தொடக்கம் 2020.10.08 ஆம் திகதி வரை

கலாநிதி. ஜி.ஏ.ஜே. சஞ்ஜீவ பண்டார
பணிப்பாளர்
2019.12.20 ஆம் திகதி தொடக்கம் 2020.10.08 ஆம் திகதி வரை

திருவாளர். ஜே.எம். ஜயதிலக
பணிப்பாளர்
2019.12.20 ஆம் திகதி தொடக்கம் 2020.10.08 ஆம் திகதி வரை

திருவாளர். பி.என்.ஜி. தர்ஷன சில்வா
பணிப்பாளர்
2019.12.30 ஆம் திகதி தொடக்கம் 2020.10.07 ஆம் திகதி வரை

திருமதி. ஷெஹாரா ஜயவர்த்தன
பணிப்பாளர்
2020.10.07 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

திருவாளர். பாட்டியா உடுமலகல
பணிப்பாளர்
2020.10.08 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

திருவாளர். ரங்கா குணவர்த்தன
பணிப்பாளர்
2020.10.07 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

திருவாளர். மேவன் பீரிஸ்
பணிப்பாளர்
2020.10.08 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

**கம்பனிச் செயலாளர்**

திருமதி. மல்காந்தி குணசேகர
பட்டய கூட்டாண்மைச் செயலாளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் (ACCS)
தொழில் உறவுகள் மற்றும் மனிதவள முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா
கொழும்பு பல்கலைக்கழகம்

**சபைச் செயலாளர் 2020.09.28 ஆம் திகதி வரை**

திருவாளர். பி. சமரநாயக்க
சட்டத்தரணி
பீ.எஸ்சி (விசேட) பட்டம்

**சபைச் செயலாளர் 2020.09.28 ஆம் திகதி தொடக்கம்**

திருவாளர். வை.ரி. பிரபூதித்த
சட்டத்தரணி, BASL இன் ஆயுட்கால உறுப்புரிமை
பீ.எஸ்சி பட்டம்

**வங்கியாளர்கள்**

மக்கள் வங்கியின் கூட்டாண்மை வங்கிப் பிரிவு
இலங்கை வங்கி
கொமர்ஷியல் பாங் ஒவ் சிலோன் பிஎல்சி

**கணக்காய்வாளர்கள்**

கணக்காய்வாளர் அதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம், இல.306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்ல

**சபைக் கூட்டங்கள்**

பதினொரு (11) சபைக் கூட்டங்கள் மீளாய்வின் கீழான ஆண்டின் போது நடாத்தப்பட்டன.

**பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்**

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
இல. 27, MICH கட்டடம்,
சேர் ராஷிக் பரீட் மாவத்தை,
கொழும்பு 01,
இலங்கை.
தொலைபேசி : +94 11 2328772/3
தொலைநகல் : +94 11 2449486
மின்னஞ்சல் : cscl@cscl.lk
இணையம் : www.cscl.lk

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**
**2020 / 2021 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்**

***முகாமைத்துவக் குழு***

**பதில் பொது முகாமையாளர் 2021/01/07 ஆம் திகதி வரை**
**பொது முகாமையாளர் 2021/01/08 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை**
*திருமதி. சி. ஜயசிங்ஹ*
*FICS, MILT – UK, சர்வதேச கப்பற்றுறையில் எம்.எஸ்சி. – ஐக்கிய இராச்சியம்*
*கப்பற்றுறையில் டிப்ளோமா (ஒஸ்லோ)*

***பதில் பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம் மற்றும் காப்புறுதி / மனித வளங்கள்)***
**2021/02/23 ஆம் திகதி வரை**
*திருவாளர். பி. சமரநாயக்க*
*சட்டத்தரணி*
*பீ.எஸ்சி. (விசேட) பட்டம்*

***பிரதிப் பொது முகாமையாளர் (வாணிபம்)***
*திருமதி. வை.எஸ். வெத்தசிங்ஹ*
*பீ.எஸ்சி. (பொது) பட்டம்*
*கப்பற்றுறையில் எம்.எஸ்சி. பட்டம் - WMU, (மல்மோ - சுவீடன்)*
*MILT – UK*

***பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம் மற்றும் காப்புறுதி / மனித வளங்கள்)***
*திருமதி. எஸ்.ஏ.எஸ்.கே. ஜயசேக்கர*
*பீ.எஸ்சி. பட்டம், சட்டத்தரணி*
*சர்வதேச வியாபாரம் மற்றும் வர்த்தகச் சட்டத்தில் எம்.எஸ்சி. பட்டம் – வெஸ்ற் லண்டன் (West London) பல்கலைக்கழகம்*

***உதவிப் பொது முகாமையாளர் (நிதி)***
*திருவாளர். ஜீ.எம். விக்கும் பிரதீப*
*பீ.கொம். (விசேட) கௌரவப் பட்டம், LICA*
*கப்பற்றுறை முகாமைத்துவத்தில் எம்.எஸ்சி. பட்டம் WMU (மல்மோ - சுவீடன்)*

***குறித்துரைக்கப்பட்ட கரையோர பணிநிலை உத்தியோகத்தர்***

*கப்டன். நிஷ் விஜயகுலதிலக*

*கடலியல் வல்லுநர், எம்.பீ.ஏ. (கொழும்பு), CMILT, AFNI (ஐக்கிய இராச்சியம்)*

*IMO கடல்சார் தூதுவர், UNA உறுப்பினர்*

***தொழில்நுட்ப அத்தியட்சகர் 2021/03/05 ஆம் திகதி வரை***

*திருவாளர். லீல் செனெவிரத்ன*

*வகுப்பு 1 கடல்சார் பொறியியல் உத்தியோகத்தர்*

*ISM மற்றும் ISPS உள்ளகக் கணக்காய்வாளர்*

*ஐக்கிய இராச்சியத்தின் (யு.கே) கடல்சார் பொறியியலாளர் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் (IMAREST) உறுப்பினர்*

*இலங்கை பிரதம பொறியியலாளர் சங்கத்தின் (SOCEM) உறுப்பினர்*

*இலங்கை தொழில்வல்லுநர் சங்க நிறுவனத்தின் (OPA) உறுப்பினர்*

***தொழில்நுட்ப அத்தியட்சகர் 2021/03/01 ஆம் திகதி தொடக்கம்***

*திருவாளர். சாரக்க விக்ரமநாயக்க*

*பட்டயப் பொறியியலாளர் - UK*

*பட்டய கடல்சார் பொறியியலாளர் - UK*

*கூட்டிணைந்த பொறியியலாளர் - SL*

*பிரதம பொறியியலாளர் அலுவலராக தகுதிச் சான்றிதழ் (CoC வகுப்பு 1 - மட்டுப்படுத்தப்படாதது)*

*ஐக்கிய இராச்சியத்தின் (யு.கே) கடல்சார் பொறியியலாளர் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் (IMAREST) உறுப்பினர்*

*கடல்சார் நிறுவனத்தின் இணை உத்தியோகத்தர் (Associate Fellow) – UK - AFNI*

*கப்பல் வடிவமைப்பாளர்கள் பற்றிய அரச நிறுவனத்தின் இணை உறுப்பினர் – AMRINA*

*இலங்கை கூட்டிணைந்த பொறியியலாளர் நிறுவனத்தின் உறுப்பினர் - MIIESL*

***உள்ளகக் கணக்காய்வாளர்***

*திருவாளர். வை. பொன்னம்பெரும*

*LICA, FMAAT,*

*கப்பற்றுறை முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா (ஒஸ்லோ)*

***முகாமையாளர் – வாடகைக்கமர்த்தல் மற்றும் முகவராண்மை***

*திருவாளர். ஐ. தந்தநாராயண*

*பொது முகாமைத்துவத்தில் பீ.எஸ்சி. (விசேட) கௌரவப் பட்டம்*

*கடல்சார் அலுவல்களில் எம்.எஸ்சி. பட்டம், WMU (மல்மோ - சுவீடன்)*

*MILT – UK, LICA*

***முகாமையாளர் (ஆவணப்படுத்தல்)***

*திருவாளர். கே.எல்.எம். மதுராஜா*

*பீ.கொம். (விசேட) கௌரவப் பட்டம்*

*கப்பல் முகாமைத்துவத்தில் எம்.எஸ்சி. பட்டம் - WMU, (மல்மோ - சுவீடன்)*

***முகாமையாளர் (முறைவழிக் கப்பல், சரக்குக் கையாள்கை, NVOCC)***

*திருவாளர். என்.பி. கல்பகே*

*பீ.ஏ. (விசேட) பட்டம்*

*கப்பல் முகாமைத்துவத்தில் எம்.எஸ்சி. பட்டம் - WMU, (மல்மோ - சுவீடன்)*

***பதில் முகாமையாளர் (மனித வளங்கள்)***

*திருமதி. மல்காந்தி குணசேகர*

*பட்டய கூட்டாண்மைச் செயலாளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் (ACCS)*

*தொழில் உறவுகள் மற்றும் மனிதவள முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா*
*கொழும்பு பல்கலைக்கழகம்*

***நிர்வாகத் தலைவர்***

*திருவாளர். எச்.ஆர்.எல்.பி.பி. குணரத்ன*

*முகாமைத்துவ டிப்ளோமா – திறந்த பல்கலைக்கழகம்*

*வியாபாரத் தகவல் டிப்ளோமா*

## வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
## 2020 / 2021 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

**தலைவரின் மீளாய்வு**

இலங்கையின் தேசிய கடல்சார் சரக்கனுப்பல் நிறுவனமான வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை சார்பில், இ.க. கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் பற்றிய மேற்பார்வையினை வழங்கி 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையையும் இக் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் சமர்ப்பிப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கொவிட் – 19 உலகளாவிய தொற்றுநோயினை உலகம் கையாண்டமையினால் 2020/021 ஆண்டானது மற்றுமொரு விசேடமான நிதியாண்டாக காணப்பட்டது. இக்கடினமான காலங்களில் இ.க. கூட்டுத்தாபனமானது சகல துறைகளிலும் அதன் நடவடிக்கைகளைத் தொடரக்கூடியதாக இருந்ததுடன் அதன் சகல கடப்பாடுகளையும் பூர்த்திசெய்தது என்பதை அறிக்கையிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

<u>உலர் மொத்தச்சரக்கு கப்பற் சந்தை</u>

கிளாக்சன் ஆராய்ச்சி சேவைகள் (Clarkson Research Services) நிறுவனத்தின் கூற்றுக்கிணங்க, கடைசி ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் உலர் மொத்தசரக்கு வர்த்தகத்திற்கான எதிர்பார்ப்பானது நலிவுற்றது. கொரோனா வைரஸ் பரவலானது கப்பல் கட்டும் கைத்தொழிலின் மீது குறிப்பிடத்தக்க தாக்கமொன்றினைக் கொண்டிருந்தமையினை 2020 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்கான கிளாக்சன் இலக்கங்களும் சுட்டிக்காட்டின.

இ.க. கூட்டுத்தாபனத்தின் கப்பல்களினாலும் அனுபவிக்கப்பட்ட சராசரி வாடகைக்கமர்த்தல் வீதங்களானவை ஒப்பீட்டு ரீதியில் கடந்த நிதியாண்டினை விடக் குறைவாக காணப்பட்டன.

<u>கப்பல்களை ஈடுபடுத்தல்</u>

ஏப்பிறல் மாதத்திலிருந்து செப்டெம்பர் மாதம் நடுப்பகுதி வரையான தென்மேற்குப் பருவக்காற்றுக் காலப்பகுதியின் போது, வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எம்வீ சிலோன் பிறீஸ் மற்றும் எம்வீ சிலோன் பிறின்சஸ் ஆகிய இரு கப்பல்கள் சிங்கப்பூர் நாட்டை அடித்தளமாகக் கொண்ட வாணிப

முகாமைக் கம்பனியின் கீழ் சர்வதேச வாடகைக்கமர்த்தல் சந்தையில் வெற்றிகரமாக ஈடுபடுத்தப்பட்டதுடன் நிதியாண்டு 2020/21 இன் போது ஆகக்கூடிய கப்பல் பயன்பாட்டைப் பதிவுசெய்தன.

பருவக்காற்று சாராத காலப்பகுதியின் போது, தேசிய மின்சார உருவாக்கத்திற்குப் பங்களிப்பும் செய்யும் லக்விஜய மின்நிலையத்திற்கான நிலக்கரியை இடநகர்த்துவதற்காக தென்னாபிரிக்காவின் RBCT இற்கும் புத்தளத்திற்கும் இடையில் நிலக்கரிப் போக்குவரத்தில் இக்கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டன.

<u>அரசாங்கத் துறை இறக்குமதிகள்</u>

415 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் கீழ் அரசாங்கத் துறை சார்ந்த கப்பற் சரக்குகளை காவிச்செல்வதற்கு இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டது. அதற்கிணங்க, உலகம் முழுவதிலிருந்தும் இடம்சார் வாடகைக்கமர்த்தல் (space charter) மற்றும் கடற்பயண வாடகைக்கமர்த்தல் அடிப்படையில் மூன்றாம் தரப்பு கப்பல்களில் கொள்கலன்களில் அடைக்கப்பட்ட சரக்குகள், வாகனங்கள், தனித்தனியாக ஏற்றப்படவேண்டிய சரக்குகள், மற்றும் பாரமிகு சரக்குகள் போன்ற பொதுச் சரக்குகளை இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் கையாண்டது.

**நிதிச் செயற்றிறன்**

சொத்துக்களின் பெறுமதியிழப்பினைக் கருத்திற்கொள்ளாமல் 2020/21 ஆம் ஆண்டில் 1.06 பில்லியன் ரூபாவாக கொண்ட செயற்பாட்டு இலாபமொன்றை இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் பதிவுசெய்துள்ளது. 161.70 மில்லியன் ரூபா தொகையினைக் கொண்ட சொத்துக்களின் பெறுமதியிழப்புக் கணிப்பீட்டின் பின்னர், செயற்பாடுகளிலிருந்தான இலாபம் 2020/21 ஆம் ஆண்டில் 903.96 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது. 2019/20 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், செயற்பாடுகளிலிருந்தான இலாபமானது அண்ணளவாக 7% இனால் அதிகரிக்கப்பட்டது. எனினும், நிதிச் செலவுகளின் (மக்கள் வங்கிக் கடன் வட்டியும் இக்கடனின் செலாவணி நட்டமும்) சீராக்கத்தின் பின்னர், வரிக்குப் பின்னரான நட்டமானது 2020/21 ஆம் ஆண்டில் 527.12 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது. 2019/20 ஆம் ஆண்டில் 1.09 பில்லியன் ரூபா கொண்ட வரிக்குப் பின்னரான நட்டத்துடன் ஒப்பிடும் போது இது அண்ணளவாக (51%) குறைவாகும்.

2020/21 ஆம் ஆண்டின் போது, 3.09 பில்லியன் ரூபா கொண்ட மொத்த வருமானத்தை இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினால் அடையக்கூடியதாகவிருந்தது. ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையினைக் கருத்திற்கொண்டு முன்னைய நிதியாண்டு 2019/20 உடன்

ஒப்பிடும் போது, இது அண்ணளவாக (20%) குறைவாகும். நேரடிச் செயற்பாட்டுச் செலவுகள் 2020/21 ஆம் ஆண்டில் 2.04 பில்லியன் ரூபாவாகவும் 2019/20 ஆம் ஆண்டில் 2.64 பில்லியன் ரூபாவாகவும் அறிக்கையிடப்பட்டது. ஆகவே, நேரடிச் செயற்பாட்டுச் செலவுகளும் 2020/21 ஆம் ஆண்டில் அண்ணளவாக (23%) இனால் குறைவடைந்தன. உலகளாவிய கொவிட் – 19 தொற்றுநோய் நிலைமையும் 2020/21 ஆம் ஆண்டில் வருமானக் குறைவை ஏற்படுத்தியது.

<u>இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் கப்பல் நடவடிக்கையிலான வருமானம்</u>

விலைமனுச் செய்முறைக்கூடாகத் தெரிவுசெய்யப்பட்ட எதிர்கால வாடகைக்கமர்த்துநர் ஒருவருடன் செய்யப்பட்ட வாணிப முகாமைத்துவ உடன்படிக்கையொன்றின் கீழ் தென்மேற்குப் பருவக்காற்றுக் காலப்பகுதியின் போது சர்வதேச வாடகைக்கமர்த்தல் சந்தையில் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இரு கப்பல்களையும் ஈடுபடுத்தியமை தொடர்பில் கடைசி 2019/20 நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 2020/21 ஆம் ஆண்டில் அண்ணளவாக (0.8 %) வருமானம் குறைவடைந்தமை கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கப்பல்களினால் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் 587 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது.

இவ்விரு கப்பல்களினதும் சராசரி வாடகைக்கமர்த்தல் வீதமானது 2019/20 ஆம் ஆண்டில் காணப்பட்ட, நாளொன்றுக்கு 10,941.67 ஐ.அ.டொலருக்கு எதிராக 2020/21 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 7,283 ஐ.அ.டொலராக அமைந்தது.

மறுபுறத்தே, சொந்தக் கப்பல்கள் இரண்டின் மூலமும் நிலக்கரியை காவிச்சென்றதிலிருந்து கிடைத்த சரக்கு வருமானமும் முன்னைய ஆண்டுக்கு எதிராக 2020/21 ஆம் ஆண்டில் (13%) இனால் குறைக்கப்பட்டது. Lanka Coal Company Pvt. Ltd., (LCC) நிறுவனத்திற்கு / இலங்கை மின்சார சபைக்கு (CEB) ஒப்படைப்புச் செய்யப்பட்ட 2.229 மில்லியன் மெற்றிக் தொன் கொண்ட வருடாந்த அளவில் 0.552 மில்லியன் மெற்றிக் தொன் கொண்ட நிலக்கரி அளவானது எமது சொந்தக் கப்பல்கள் மூலம் காவிச்செல்லப்பட்டதுடன் 2020/21 ஆம் ஆண்டில் 1.42 பில்லியன் ரூபா சரக்கு வருமானம் ஈட்டப்பட்து.

மூன்றாம் தரப்புக் கப்பல்களில் நிலக்கரித் தொழிற்பாட்டிலிருந்தான முகவராண்மைத் தரகு மற்றும் கப்பலை வாடகைக்கமர்த்துவோர்களுக்கான தரகு என்பவற்றிலிருந்தும் சரக்கிறக்கல் நடவடிக்கையிலிருந்தும் உருவாக்கப்பட்ட வருமானமானது 2020/21 ஆம் ஆண்டில் (12%) இனால் குறைக்கப்பட்டிருந்தது.

சொந்தக் கப்பல் நடவடிக்கைகளிலிருந்தான வருமானமானது இக்கம்பனியின் மொத்த வருமானத்தில் 65% ஆக பதிவுசெய்யப்பட்டது.

<u>கப்பல் சாராமல் தொழிற்படும் பொது சரக்கனுப்புநர் (NVOCC) சேவையிலான வருமானம்</u>

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020/21 ஆம் ஆண்டில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான விசேட கப்பற் சரக்கனுப்பல்களைக் கையாண்டதன் காரணமாக கப்பல் சாராமல் தொழிற்படும் பொது சரக்கனுப்புநர் (NVOCC) நடவடிக்கைகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட வருமானமானது 1.06 பில்லியன் ரூபாவிலிருந்து 597.83 மில்லியன் ரூபாவாக குறைவடைந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது (43%) ஆன குறைவாகும். அத்துடன், 2020/21 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் நிலவிய தொற்றுநோய் நிலமையானது சில துறைமுகங்கள் மூடப்பட்டமை, சில துறைமுகங்களில் நெருக்குவாரத்தை ஏற்படுத்தி குறைக்கப்பட்ட வினைத்திறனுடன் துறைமுக பணியாட்டொகுதியினரின் குறைப்பு, கொள்கலன்களின் தட்டுப்பாடு, வீட்டுக்கு வீடுசென்று வசதியளிக்கும் சேவைகளை இலகுவாக்குவதற்கான உள்நாட்டுப் போக்குவரத்து முறைகளில் பற்றாக்குறை என்பன காரணமாக நடவடிக்கைகளிலான வருமானத்தில் குறைவினை உருவாக்கியது.

<u>நாணய மதிப்பிறக்கம்</u>

ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கமானது இக்கம்பனியை எதிர்மறையாகப் பாதித்துள்ளது. 2020/21 ஆம் ஆண்டில், செலாவணி வீதமானது அண்ணளவாக 5% இனால் மதிப்பிறங்கியது. ஆனால் 2015/2016 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மக்கள் வங்கிக் கப்பல் கடனுடன் இதனை ஒப்பிட்ட போது, செலாவணி வீதமானது 2020/21 ஆம் ஆண்டில் 38% இனால் மதிப்பிறங்கியிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வருடாந்தக் கணக்குகளில் கட்டாய ஏற்பாடொன்றாகவுள்ள 684.46 மில்லியன் ரூபா தொகையான கப்பல் கடன்களின் செலாவணி நட்டத்தை அதிகரிப்பதற்கு இது நேரடியாக பாதிப்பைச் செய்திருந்தது.

எவ்வாறாயினும், 2020/21 ஆம் ஆண்டில் 756.81 மில்லியன் ரூபா தொகையான கப்பல் கடனின் வட்டித் தவணைக்கட்டணத்தின் முழுத்தொகையையும் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினால் தீர்ப்பனவு செய்ய இயலுமாகவிருந்தது.

மேலும், குறிப்பிடத்தக்க செலாவணி நட்டம் மற்றும் கடன் வட்டிக் கொடுப்பனவு காரணமாக, 2020/21 ஆம் ஆண்டில் 813.32 மில்லியன் ரூபா வருடாந்த நட்டமொன்று பதிவு செய்யப்பட்டது. 2019/20 ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்நட்டமானது (30%) இனால் குறைக்கப்பட்டது.

ஊழியர்கள்

2021.03.31 ஆம் திகதியிலுள்ளவாறு இக்கம்பனியின் மொத்த ஊழியர் எண்ணிக்கை 122 ஆக காணப்பட்டதுடன் சம்பளம் மற்றும் கூலிகளுக்கான செலவுகள் 2020/21 ஆம் ஆண்டில் 129.15 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது. 2020/21 ஆம் ஆண்டில் நிர்வாகச் செலவுகள் 215.88 மில்லியன் ரூபாவாக காணப்பட்டதுடன் 2019/20 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அண்ணளவாக (0.4%) ஆன குறைவினைக் காட்டியது.

தொழில் நிபுணத்துவ ரீதியிலும் கப்பல் துறையில் தொழில்நுட்ப அபிவிருத்திகளுக்கு ஒத்திசைவாகவும் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு நன்கு அனுபவம்வாய்ந்த / பயிற்றப்பட்ட அத்துடன் நன்கு தகைமைபெற்ற அலுவலர் குழாத்தினரைக் கொண்டிருக்கும் தேவைப்பாடு இனங்காணப்பட்டுள்ளது.

ஆதலால் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது அலுவலர் குழாத்துப் பயிற்சி நோக்கங்களுக்காக வருடாந்தம் 2 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதுடன் பல்வேறுபட்ட கப்பல்சார் மற்றும் நிதி நிகழ்ச்சித்திட்டங்களில் 15 அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கு 2020/2021 ஆம் ஆண்டில் 227,775 ரூபா செலவிடப்பட்டது.

## வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
## 2020 / 2021 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

### கம்பனியின் அலுவல்கள் தொடர்பில்
### பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்களானோர், அதன் விசேட பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவதன் பொருட்டு, 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இக் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் சேர்த்து அவர்களின் அறிக்கையினை சமர்ப்பிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றனர்.

<u>ஆண்டின் மீளாய்வு</u>

முன்நோக்கியுள்ள சவால்கள் உள்ளடங்கலாக நிகழ்கால நிதியாண்டின் போதும் இவ் அறிக்கையின் திகதி வரையிலுமுள்ள கம்பனியின் அலுவல்களானவை 10 தொடக்கம் 14 வரையான பக்கங்களில் தலைவரின் மீளாய்வில் விபரிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுடன் சேர்ந்த இவ் அறிக்கையானது இக் கம்பனியின் அலுவல்களின் நிலையினைப் பிரதிபலிக்கின்றது.

<u>பிரதான செயற்பாடுகள் / முக்கியமான வியாபாரங்கள்</u>

சரக்குகளை கடல் மார்க்கமாக எடுத்துச் செல்லுதல், சரக்குகளை இறுதி அமைவிடத்திற்கு வழங்குதல் மற்றும் கொண்டு செல்லல், இலங்கை இராஜதந்திர பணியாட்டொகுதியினரின் வீட்டுப் பொருட்கள் மற்றும் தனிப்பட்ட உடமைகளை சர்வதேச ரீதியில் நகர்த்துதல், சுங்க அலுவலக முகவராண்மைச் செயற்பாடுகள், கப்பல் முகவராண்மைச் சேவைகள், கப்பல் உரிமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள், கப்பல் வாடகைக்கமர்த்துநர்கள் போன்ற வியாபாரங்கள் இக் கம்பனியின் பிரதான செயற்பாடுகளாகும்.

கொள்கலன்களில் அடைக்கப்பட்டவை, தனித்தனியாக ஏற்றப்படவேண்டிய சரக்குகள், மொத்தச் சரக்குகள் (நிலக்கரி), வாகனங்கள், மீகன உபகரணச் சரக்கு, பார சரக்குகள் போன்ற வடிவத்தில், சகல வகையான சரக்குகளையும் இடநகர்த்துவதில் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது.

## நிதிக் கூற்றுக்கள்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணக்கமுற்று தயாரிக்கப்பட்ட இவ் ஆண்டறிக்கையில் 53 தொடக்கம் 123 வரையான பக்கங்களில் நிதிக் கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.

## சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை

நிதிக் கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் அறிக்கையானது இவ் அறிக்கையின் 30 தொடக்கம் 52 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

## கணக்கீட்டுக் கொள்கைகளும் விளக்கக் குறிப்புகளும்

மீளாய்வின் கீழான நிதியாண்டின் போது இக் கம்பனியினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் எதுவித மாற்றங்களும் இல்லை. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளும் விளக்கக் குறிப்புகளும் 62 தொடக்கம் 123 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## நிதிப் பெறுபேறுகள் / இலாபம் மற்றும் பகிர்வுகள்

முழுமொத்த வருமானக் கூற்றானது 53 தொடக்கம் 54 ஆம் பக்கத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

மீளாய்வின் கீழான ஆண்டின் போது இக் கம்பனியானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றில் 1,750 மில்லியன் ரூபாவை முதலிட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 10 ஆனது இவ் ஆண்டின் போது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றிலான அசைவு தொடர்பிலான தகவல்களை தருகின்றது.

முதலீடுகள்

91 தொடக்கம் 97 வரையான பக்கங்களிலுள்ள நிதிக் கூற்றுக்கான குறிப்புகள் 13, 14, 15 மற்றும் 16 ஆகியன 2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இக் கம்பனி வைத்துள்ள நீண்டகால முதலீடுகள் பற்றிய விபரங்களை வெளிப்படுத்துகின்றன.

பங்கிலாபம்

2021 மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த நிதியாண்டுக்காக பங்கிலாப கொடுப்பனவை பணிப்பாளர்கள் பரிந்துரைக்கவில்லை.

கூறப்பட்ட மூலதனம்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் நியதிகளுக்கு அமைவாக, இக் கம்பனியின் கூறப்பட்ட மூலதனமானது 2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 50,000,000 ரூபாவாகும். இவ் விபரங்களானவை 102 ஆம் பக்கத்திலுள்ள நிதிக் கூற்றுக்கான குறிப்பு 23 இல் தரப்பட்டுள்ளன.

தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

இக் கம்பனியின் வியாபாரத் திட்டங்களை பணிப்பாளர்கள் மீளாய்வு செய்துள்ளதுடன் முன்னுணரக்கூடிய எதிர்காலத்திற்கு தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவொன்றாக தொடர்வதற்குப் போதுமான வளங்களை இக் கம்பனி கொண்டுள்ளது என்று திருப்தியடைந்துள்ளனர்.

ஆதலால், நிதிக் கூற்றானது அவ் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
## 2020 / 2021 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

**நிலைத்துநிற்கும்தன்மை பற்றிய அறிக்கை**

50 வருட நீண்ட பயணத்தின் பின்னர் இலங்கையின் தேசிய சரக்கனுப்பல் நிறுவனமாக விளங்கும் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது சுற்றாடல், சமூக மற்றும் ஆட்சி விடயங்கள் தொடர்பில் பல்வேறுபட்ட முன்னெடுப்புகளை அபிவிருத்திசெய்து, பராமரித்து விரிவாக்கியுள்ளது.

2015 ஆம் ஆண்டில், 193 நாடுகளானவை நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சிநிரலையும் அதன் 17 நிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களையும் ("SDGs") பின்பற்றின. நிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களானவை தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு மிக ஆரோக்கியமான கிரகமொன்றையும் மிக நீதியான உலகொன்றையும் நோக்கிய மாற்றமொன்றுக்கான திட்டமொன்றை வழங்குகின்றன. சுற்றாடல் சீரழிவிலிருந்து எமது கிரகத்தைப் பாதுகாக்கும் அதேவேளை வறுமை மற்றும் பசியினைத் தீர்த்தல், சுகாதாரம், கல்வி, நீதி மற்றும் தொழில்களுக்கான அணுக்கத்தினை விரிவாக்குதல் மற்றும் அனைத்தும் அடங்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்தல் என்பவற்றை இக்குறிக்கோள்கள் இலக்காகக் கொண்டுள்ளன.

உலர் மொத்தச்சரக்கு கப்பல் பற்றிய எமது முக்கிய வியாபாரமானது, இக்கிரகத்தின் உணவு, வலுசக்தி மற்றும் நிர்மாணப் பொருட்களின் கேள்விகளைப் பூர்த்திசெய்வதற்கு இன்றியமையாத பல்வேறுபட்ட மொத்தப் பண்டங்கள் அனைத்தையும் காவிச்செல்வதை உள்ளடக்குகின்றது. அரசுக்குடமையான சிலோன் பிறீஸ் மற்றும் சிலோன் பிறின்செஸ் எனும் மொத்தச்சரக்கு கப்பல்கள் இரண்டினதும் உரிமையாளர்களாக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது, சுற்றாடல்சார் நிலைத்துநிற்கும்தன்மை, சமூக நிலைத்துநிற்கும்தன்மை மற்றும் பொருளாதார நிலைத்துநிற்கும்தன்மை என்பவற்றில் பிரதானமாக கவனத்தைக் குவித்துவருகின்ற நிலைத்துநிற்கும்தன்மைக் கட்டமைப்புக்கிணங்க கப்பல்களைத் தொழிற்படுத்துவதிலும் வியாபாரத்தை ஆற்றுவதிலும் எப்போதுமே கவனத்தைச் செலுத்திவருகின்றது.

**சுற்றாடல்சார் நிலைத்துநிற்கும்தன்மை**

கடல்சார் போக்குவரத்துடன் இணைந்த சுற்றுச்சூழல் இடர்களானவை இடர் விளைவிக்கக்கூடிய இரசாயனங்கள் மற்றும் பொருட்களின் உமிழ்வுடன் தொடர்புற்றுள்ளன. எமது கப்பல்களின் தொழிற்பாட்டை நிர்வகிக்கும் எண்ணிறைந்த சர்வதேச உடன்படிக்கைகள், துறைமுகத்துக்குரிய அரசு மற்றும் கொடிக்குரிய அரசு (flag state) தேவைப்பாடுகளுடன் மிகவும் ஒழுங்குறுத்தப்பட்ட கைத்தொழில் ஒன்றே கப்பல் தொழிற்றுறை ஆகும். உதாரணமாக, ஐக்கிய அமெரிக்க (US) கடலில் தொழிற்படும் போது, 1990 ஆம் ஆண்டின் ஐக்கிய அமெரிக்க எண்ணை மாசுபாட்டுச் சட்டம், முழுமையான

சுற்றாடல் செயற்துலங்கல், நட்டஈடு மற்றும் பொறுப்புச் சட்டம் மற்றும் கப்பலின் சமநிலைப்படுத்தல் நீர் மற்றும் படிவுகளின் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவத்துக்கான சர்வதேச உடன்படிக்கை - இடர் விளைவிக்கக்கூடிய விடுவிப்பு மற்றும் சாத்தியமான எண்ணை சிந்துதல்களுக்கான சகல ஒழுங்குவிதிகளும் என்பவற்றுக்கு CSCL கப்பல்கள் உட்பட்டுள்ளன. நாம் பயணிக்கும் கடல்களிலும் உலகம் பூராகவும் நாம் பயன்படுத்தும் துறைமுகங்களிலும் சர்வதேச மற்றும் உள்நாட்டு மட்டங்களில் இதையொத்த முறைமைகள் அமுலில் உள்ளன. எமது கப்பல் தொகுதிகளானவை 2020-21 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் எவ்வித எண்ணை சிந்துதல்களையும் அனுபவிக்கவில்லை.

கப்பல்களிலிருந்தான மாசுபாட்டைத் தடுப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையின் (“MARPOL உடன்படிக்கை”) VI ஆம் இணைப்பின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டவாறு, வளியின் தரத்தை மேம்படுத்துவதற்கும் சுற்றாடலைப் பாதுகாப்பதற்குமென, கப்பல்களிலிருந்து விடுவிக்கப்படும் கந்தகம் (சல்பர்) உள்ளடங்கிய வாயுக்களின் (SOX) குறைப்பு தொடர்பான சர்வதேச கடல்சார் நிறுவனத்தின் (IMO) ஒழுங்குவிதிகளானவை 2005 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக இறுக்கமடைந்துள்ளன. 2020 சனவரி 1 ஆம் திகதியிலிருந்து, உமிழ்வுக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு (“ECAs”) வெளியே தொழிற்படும் கப்பல்களினால் பயன்படுத்தப்படும் எரிபொருள் எண்ணையிலுள்ள கந்தகத்திற்கான எல்லையானது 3.50% இலிருந்து 0.50% ஆக குறைக்கப்பட்டது. கப்பல்களிலிருந்து விடுவிக்கப்படும் கந்தகம் (சல்பர்) உள்ளடங்கிய வாயுக்களின் (SOX) இச்சடுதியான குறைப்பின் மூலம் உலகம் பூராகவும், குறிப்பாக கரையோர மக்களுக்கும் துறைமுகங்களுக்கு அருகாமையில் வசிப்பவர்களுக்கும் குறிப்பிடத்தக்க சுகாதார மற்றும் சுற்றாடல் நன்மைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டின் கந்தக எல்லையின் அறிமுகத்துடன், இவ்விரு கப்பல்களும் 0.5% ஆன மிகக் குறைவான கந்தக எரிபொருள் எண்ணைக்கு (VLSFO) வெற்றிகரமாக மாற்றமடைந்தன. தீங்கு விளைவிக்கக்கூடிய SOX உமிழ்வு மட்டங்களைக் குறைக்கும் IMO இலக்குகளை அடைவதற்கு இது உதவுகின்றது.

தீங்கு விளைவிக்கக்கூடிய NOx உமிழ்வுகளைக் குறைக்கும் பொருட்டு அதிநவீன கட்டுப்பாட்டுப் படிமுறைத் தீர்வுகளுடன் சேர்த்து உள்ளார்ந்தமாக கட்டியெழுப்பப்பட்ட இலத்திரன் ரீதியில் கட்டுப்படுத்தப்படும் பிரதான இயந்திரங்கள் எமது இரு கப்பல்களுக்கும் நிறுவப்பட்டுள்ளன.

பெரிய சரக்குக் கப்பல்களானவை கடற்பயணம் ஒன்றின் போது அவற்றின் எடையினை சமநிலைப்படுத்துவதற்கும் அவற்றை உறுதியாக வைத்திருப்பதற்கும் கப்பலைச் சமப்படுத்தும் நீரை (ballast water) பயன்படுத்துகின்றன. கப்பலின் பாதுகாப்பிற்கு இது அத்தியாவசியமான போதிலும், கப்பலைச் சமப்படுத்தும் நீரின் வெளியேற்றமானது சாத்தியமான ஆக்கிரமிக்கும் உயிரினங்களை புதிய கடல்சார் சுற்றாடல் ஒன்றுக்குள் விடுவிக்க முடியும் என்பதால் அது கடல்சார் சுற்றாடலுக்கு தீங்கு விளைவிப்பதாக இருக்க முடியும். எமது இரு கப்பல்களுக்கும் கப்பலைச் சமப்படுத்தும் நீர் சுத்திகரிப்பு முறைமை

பொருத்தப்பட்டுள்ளதுடன் சர்வதேச நியமங்களைப் பூர்த்திசெய்வதற்கான நிர்வகிப்பு ஒழுங்குவிதிகளுக்கிணங்க அவை தொழிற்படுகின்றன.

அங்கீகரிக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமொன்றினை கப்பலானது தொழிற்பாட்டில் கொண்டிருக்கும் போதான நிலமை அல்லது மிக அண்மித்த நிலப்பகுதியிலிருந்து மூன்றுக்கு மேற்பட்ட கடல்மைல் தொலைவில் அங்கீகரிக்கப்பட்ட முறைமையொன்றினைப் பயன்படுத்தி நுண்துகள்களாக்கப்பட்ட மற்றும் தொற்றுநீக்கப்பட்ட கழிவுநீரை கப்பலானது வெளியேற்றும் போதான நிலமை தவிர, கடலுக்குள் கழிவுநீரை விடுவித்தலானது தடைசெய்யப்பட்டுள்ளது. கப்பல் பயணிக்கும் இடைவழியில் அத்துடன் 4 இற்குக் குறையாத கடல்மைல் வேகத்தில் சென்றுகொண்டிருக்கும் போது மிக அண்மித்த நிலப்பகுதியிலிருந்து 12 இற்கு மேற்பட்ட கடல்மைல் தொலைவில் நுண்துகள்களாக்கப்படாத அல்லது தொற்றுநீக்கப்படாத கழிவுநீர் விடுவிக்கப்படலாம், அத்துடன் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரின் விடுவிப்பு வீதமானது நிர்வாகத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். CSCL இன் இரு கப்பல்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்க முறையாக திட்டமிடப்பட்ட பராமரிப்புக்கூடாக உத்தமமான தொழிற்படும் நிலையில் அவை எப்போதும் பேணப்படுகின்றன.

இயந்திர சாதன இடைவெளிகளில் திரளும் சகடு (sludge) மற்றும் அழுக்கு என்பவற்றை கரையில் வைத்து அகற்றுவதனூடாக, சுற்றாடல் மீதான எதிர்மறைத் தாக்கங்களை நாம் குறைத்துவருகின்றோம். இவை பின்னர் கைத்தொழில் கொதிகலன்கள் போன்வற்றில் சுத்திகரிக்கப்பட்டு மீளப்பயன்படுத்தப்படுகின்றன.

கைத்தொழில்கள் அல்லது வேறு மனிதச் செயற்பாடுகளிலிருந்து வெளியேறும் வாயு வடிவிலான புரோமின் அல்லது குளோரினை உள்ளடக்கும் இரசாயனச் சேர்வைகளின் விடுவிப்புக் காரணமாக விளைவிக்கப்படும், மேல் வளிமண்டலத்திலுள்ள பூமியின் ஓசோன் படையின் படிப்படியான அடர்த்திக் குறைவே ஓசோன் படை குன்றுதல் ஆகும். எமது கப்பல்களில் குறைவான ஓசோன் படை குன்றுதல் ஆற்றலுடன்கூடிய குளிர்பதனூட்டி வாயுக்களை நாம் பயன்படுத்துகின்றோம்.

**<u>சமூக நிலைத்துநிற்கும்தன்மை</u>**

உலகளாவிய தொற்றுநோய் ஆதிக்கம் செலுத்திய ஆண்டொன்றில், முதலாவதாக சாத்தியப்படக்கூடிய அளவிற்கு எமது வேலைத்தளத்தில் வைரஸ் நுழைவதைத் தடுப்பதற்கு எம்மால் செய்யக்கூடியதை செய்வதன் மூலமும், அத்துடன் இரண்டாவதாக கப்பல்கள் உள்ளடங்கலாக எமது மனையிடங்களுக்குள் அதன் பரவலைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், எமது ஊழியர்கள் அனைவருக்கும் பாதுகாப்பான வேலைத்தளமொன்றை பேணுவதற்கு நாம் பாடுபட்டமையினால் சுகாதாரமும் பாதுகாப்பும் மிகப் பெருமளவு முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன.

2020 ஆம் ஆண்டில் கொவிட்-19 கட்டுப்பாடுகளானவை அக்கறைதாரர் நேருக்குநேர் சந்திப்பதை மட்டுப்படுத்திய அதேவேளை பல்வேறுபட்ட கைத்தொழில் அமைப்புக்கள், அரசாங்கங்கள் மற்றும் ஒழுங்குறுத்துநர்கள், சமுதாய பிரதிநிதிகள் மற்றும் குடிசார் (சிவில்) சமூகம் என்பவற்றுடன் நாம் தொடர்ந்தும் ஈடுபாட்டைக் கொண்டிருந்தோம்.

2006 ஆம் ஆண்டில் சர்வதேச தொழில் நிறுவனத்தினால் (ILO) பின்பற்றப்பட்ட கடல்சார் தொழில் உடன்படிக்கையுடன் நாம் இணக்கமுறுகின்றோம். இந்த உடன்படிக்கையானது கடலோடிகள் பணியாற்றுவதற்கான குறைந்தபட்சத் தேவைப்பாடுகள், கப்பல் மீதுள்ள வசதிகள், அத்துடன் சுகாதாரம் மற்றும் நலனோம்பல் பாதுகாப்பு என்பவற்றை பொழிப்பாகத் தருகின்றது. சர்வதேச வர்த்தகத்தில் 500 மொத்த தொன்களுக்கு மேற்பட்ட சகல கப்பல்களும் கடல்சார் தொழில் சான்றிதழொன்றையும் கடல்சார் தொழில் இணக்கப்பாட்டுப் பிரகடனமொன்றையும் கொண்டிருப்பதை இந்த உடன்படிக்கை தேவைப்படுத்துகின்றது. எமது சகல கப்பல்களும் கப்பற் பணியாளர்களும் இந்த உடன்படிக்கையுடன் இணக்கமுற்றுள்ளதுடன் அதற்கிணங்க நாம் அவற்றைப் பேணுவதற்கு உத்தேசிக்கின்றோம்.

எமது கப்பற் பணியாளர்களின் ஆரோக்கியத்தையும் எமது கப்பல்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் பொருட்டு பாதுகாப்பான பணிச்சூழலொன்றை வழங்குவதற்கும் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பேணுவதற்கும் நாம் தொடர்ச்சியாகப் பாடுபடுகின்றோம். எமது தொழிற்பாடுகளில் விபத்து இடரினைக் குறைக்கும் பொருட்டு, எமது கொடிக்குரிய நாட்டின் பாதுகாப்பு ஆளணியிடல் தேவைப்பாட்டினால் தேவைப்படுத்தப்பட்டதைக் காட்டிலும் கூடுதலான கப்பற் பணியாளர் உறுப்பினர்களைக் கொண்டு நாம் எமது கப்பல்களுக்கு ஆளணியிடுகின்றோம். எமது செயற்பாடுகளை பாதுகாப்பாகத் தொழிற்படுத்தி மேற்கொள்வதும், அத்துடன் எமது ஆட்களின் சுகாதாரத்தையும் நலனையும் அத்துடன் தாக்கத்திற்குள்ளாகும் அக்கறைதாரர்களையும் பாதுகாப்பதுமே எப்போதும் எமது இலக்காக உள்ளது. தரவுகளின் மேம்பட்ட துல்லியத்தன்மையானது இக்கப்பல் தொகுதியிலுள்ள சகல பாதுகாப்பு அம்சங்களையும் பற்றிய தொடர்ச்சியான மேம்பாட்டுக்கான சிறந்த பகுப்பாய்வினை இக்கம்பனிக்குத் தருவதால் மயிரிழையில் தவறிய விபத்துக்கள் அனைத்தையும் அறிக்கையிடுவதை நாம் தொடர்ந்து வலியுறுத்துகின்றோம்.

முக்கியமான பணி எதனையும் திட்டமிடுவதற்கு முன்னர் எமது கப்பல் குழுவினர்களானோர் முறையான இடர் மதிப்பீடுகளினூடாக பாதுகாப்பு, சுற்றாடல், சமூகம் மற்றும் வியாபாரம் என்பவற்றுக்கான தாக்கத்தை எப்போதுமே மதிப்பிடுகின்றனர். உள்வாங்கப்படும் இடர்களைத் தணிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதுடன் அத்தகைய மேலதிக நடவடிக்கைகளின் அமுலாக்கமானது வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திலுள்ள (CSCL இலுள்ள) கரையிலுள்ள குழுவினால் எப்போதும் ஒருங்கிணைக்கப்பட்டு அதற்கு உதவியளிக்கப்படுகின்றது.

எமது சமூகப் பொறுப்புக் கட்டமைப்பானது ஏற்புடைய அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனும் இணக்கமுறுவதையும் அத்துடன் அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க எமது வியாபார நன்நடத்தை விதிக்கோவைக்கு ஊழியர்கள் இணங்கியொழுகுவதையும் உள்ளடக்குகின்றது. மனித உரிமைகளை மீறுவதை நாம் எப்போதும் தவிர்ப்பதுடன், நிகழக்கூடிய தீங்குகளை கையாள்வதுடன் தொழிற்படுவதற்கான சமூக உரிமத்தினைப் பெற்றுப் பேணுகின்றோம்.

எமது நிலைத்துநிற்கும்தன்மைக் கட்டமைப்பின் பகுதியாக, நேர்மை, சம வாய்ப்பு மற்றும் ஒருவருக்கொருவர் பரஸ்பர மரியாதை என்பவற்றை மேம்படுத்தும் பணிச் சூழலொன்றில் மிகச்சிறந்த ஆட்களைக் கவர்ந்திழுத்து, அபிவிருத்திசெய்து மற்றும் தக்கவைப்பதற்கு எம்மால் இயலுமாகவிருந்தது. இன்றைய நவீன மற்றும் தொழில்நுட்ப ரீதியில் உயர்நயப் பண்புடன்கூடிய (sophisticated) கப்பல்களைப் பாதுகாப்பாக இயக்கும் மிக முக்கியமான கூறுகளில் ஒன்றாக விளங்குபவர்கள் கடலோடிகளே. CSCL ஆனது மனித மூலதனத்தின் முக்கியத்துவத்தை மிக நன்றாக இனங்கண்டுவருவதுடன் கப்பல்களிலும் கரையிலும் இடம்பெறும் திட்டவட்டமான தொழிற்பாடுகளுக்கு சரியான ஆட்களை உள்ளீர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்தது.

<u>பொருளாதார நிலைத்துநிற்கும்தன்மை</u>

ஊழலானது, தண்டனைகள் மற்றும் கறைநிரற் பட்டியற்படுத்தல் என்பவற்றுக்கூடாக நன்மதிப்பு, சட்டம் மற்றும் நிதி சார்ந்த இடர்களுக்கு கம்பனிகளை வெளிக்காட்டுவது மாத்திரமன்றி அதன் எதிர்மறையான விளைவுகளை முதலீட்டாளர்கள் மற்றும் வியாபாரப் பங்காளர்களுக்கும் நீட்டிக்கின்றது. பொருளாதார வினைத்திறனையும் இது குறைப்பதுடன், இணக்கமுறும் கம்பனிகளுக்கு பிரதிகூலத்தை விளைவிக்கின்றது அத்துடன் பங்குதாரர் பெறுமதிக்கு பாதகமாக அமைகின்றது. ஊழலானது மனித உரிமை மீறல்கள் மற்றும் சுற்றாடல் இடர் போன்ற ஏனைய இடர்களுக்கு அடிப்படையாக விளங்குகின்றது. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமாக நாம், அரசாங்க விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களுக்கிணங்க வியாபாரத்தை நடாத்திவருவதுடன் எமது செய்முறைகளானவை உள்ளகக் கணக்காய்வாளரினாலும் இறுதியாக அரசாங்கக் கணக்காய்வாளர்களினாலும் கணக்காய்வு செய்யப்படுகின்றன. மேலதிகமாக, எமது ஆட்சிக் கட்டமைப்பானது பல்வகைப்பட்ட கூட்டாண்மை நடைமுறைகளையும் அதேபோன்று கம்பனியின் கொள்கைகள், நியமங்கள், கணக்காய்வு மற்றும் இணக்கப்பாடு என்பவற்றையும் உள்ளடக்குகின்றது.

கடல்சார் வர்த்தகமானது நவீன உலகளாவிய பொருளாதாரத்தின் உயிர்நாடியாக இருந்துள்ளதுடன், இலங்கையானது பிரதான கிழக்கு மேற்கு வர்த்தக வரிசைக்கோட்டுக்கு மிக அருகாமையில் அதன் இருப்புடன், அதன் புவியியல் ரீதியான அமைவிடத்திலிருந்து அளப்பரிய நன்மையடைந்துள்ளது. இதனை அடைந்துகொள்ளும் முக்கியமான தெரிவுகளில் ஒன்றாக விளங்குவது கடலோடிகளை மென்மேலும் பயிற்றுவித்தல் ஆகும், அது அத்தகைய பயிற்றப்பட்ட கடல்சார் தொழில்வல்லுநர்கள் சார்பில் உலக கப்பல் வர்த்தகத்தில் எப்போதுமே அதிகரித்துவரும் கேள்வியினை இலக்காகக் கொண்டுள்ளது.

எமது கப்பல்களானவை வர்த்தகம் மற்றும் பயிற்சிக் கோட்பாட்டுடன் கட்டப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு கப்பலிலும் 26 பயிற்சி அறைகள் (berths) கிடைக்கத்தக்கதாக உள்ளன. கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோய் காரணமாக காணப்பட்ட பல தடைகளுக்கு மத்தியிலும், எமது இரு கப்பல்களும் உள்நாட்டு நிறுவனங்களிலிருந்து பொறியியல் மற்றும் கப்பற்றள (deck) பயிலிளவல் உத்தியோகத்தர்களை பயிற்றுவித்து முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன.

எமது செயற்பாடுகளானவை பொருளாதார மற்றும் சமூக நலன்களை உருவாக்குவதுடன் உள்நாட்டு சமுதாயங்களிலும் தேசிய பொருளாதாரங்களிலும் அபிவிருத்தியைத் தூண்டுகின்றன. நாம் தொழில்வாய்ப்பினை உருவாக்கி, திறன்களை விருத்திசெய்து, உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்பி அத்துடன் உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து கொள்முதல் செய்கின்றோம். தேசிய சரக்கனுப்பல் நிறுவனமான நாம், எம்முடன் பதிவுசெய்வதற்கு பல உள்நாட்டு வர்த்தகர்களுக்கு வழியினைத் திறந்துள்ளதுடன் அரசாங்க பெறுகை நடைமுறைகளுக்கு கடுமையாக இணங்கியொழுகும் அத்தகைய ஒவ்வொரு வர்த்தகருக்கும் சம வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. அரசாங்க நிறுவனம் ஒன்றாக இருந்த போதிலும் நாம், கடுமையான சரிபார்த்தல் செய்முறைகளுக்கூடாக ஏற்படும் காலதாமதங்களை விட, காலதாமதம் எதுவுமின்றி உரிய நேரத்தில் சகல கொடுப்பனவுகளையும் ஒழுங்குசெய்தல் பற்றிய நிலையான கொள்கையினைப் பேணுகின்றோம். இதனூடாக, உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகர்களான இருசாராரினதும் நம்பிக்கையினை ஈட்டி, தேசிய சரக்கனுப்பல் நிறுவனமாக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் வரலாற்றின் 50 வருட காலம் முழுவதும் பெற்றுக்கொண்ட நன்மதிப்பினைப் பேணுவதற்கு எம்மால் இயலுமாகவிருந்துள்ளது.

# கணக்காய்வுக் குழு அறிக்கை

**கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்க கட்டமைப்பு:**

**இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின்** (CSC) பணிப்பாளர் சபையினால் கணக்காய்வுக் குழு நியமிக்கப்படுவதுடன் இச் சபைக்கு அது நேரடியாக அறிக்கையிடுகின்றது. இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுக் குழுவானது நிதியாண்டின் போது சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள் மூவரை உள்ளடக்கியது:

திருமதி. டி.எச்.எஸ். புள்ளபெரும – தலைவர்

கலாநிதி. ஐ.டி.எம். ரத்நாயக்க – உறுப்பினர் (2020/10/08 ஆம் திகதிவரை)

கலாநிதி. ஜி.ஏ.ஜே.எஸ். பண்டார – உறுப்பினர் (2020/10/08 ஆம் திகதிவரை)

திருமதி. ஷெஹாரா டி சில்வா – உறுப்பினர் (2020/10/08 ஆம் திகதி முதல்)

திருவாளர். பீ.ஏ. உடுமலகல – உறுப்பினர் (2020/10/08 ஆம் திகதி முதல்)

**கணக்காய்வுக் குழுவின் வகிபாகம்:**

இக் கம்பனியின் நிதி அலுவல்கள் சம்பந்தமான சகல விடயங்களையும் பரிசீலிப்பதற்கு இக் கணக்காய்வுக் குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் சபை அதன் கடமைகளை பயனுறுதி வாய்ந்த விதத்தில் ஆற்றுவதற்கு இக் குழு உதவுகின்றது. வெளிப்படுத்துகையின் தயாரிப்பு, முன்வைப்பு மற்றும் போதுமான தன்மை என்பவற்றை இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS/LKAS) இக் கணக்காய்வுக் குழு பரிசீலிப்பதுடன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கும் அத்துடன் உரிய ஏனைய நிதி அறிக்கையிடல் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகளுக்கும் இணங்க நிதி அறிக்கையிடல் தேவைப்பாடுகள் உள்ளனவா என்பது பற்றியும் பரிசீலிக்கின்றது.

சபையின் இறுதி அங்கீகாரத்திற்கு முன்னர் வருடாந்த நிதிக் கூற்றுக்களை இக் கணக்காய்வுக் குழு மீளாய்வுசெய்து அங்கீகரித்தது.

இக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களானவை இக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் பற்றிய நிலைப்பாட்டையும் அது தொடர்புபடும் காலப்பகுதிக்கான பெறுபேறுகளையும் துல்லியமாகப் பிரதிபலிக்கின்றன எனும் நியாயமான உறுதிப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு இக் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் போதுமானதன்மை மற்றும் முறையான தொடர்ச்சியான தொழிற்பாடு என்பவற்றையும் இக் கணக்காய்வுக் குழு மீளாய்வுசெய்தது. தேவைப்படும் போது சுயாதீனமான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படுவதுடன், இக்

கூட்டுத்தாபனத்திற்குள் உள்ளகக் கட்டுப்பாட்டுச் சுற்றாடலை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு முகாமையுடன் கலந்துரையாடப்பட்டுள்ளன. இக் கம்பனியின் பிரதான வியாபார மற்றும் கட்டுப்பாட்டு இடர்களையும் இக் கணக்காய்வுக் குழு மதிப்பீடு செய்தது.

**கூட்டங்கள்**

நான்கு கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் 2020/1 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்டன. பணிப்பாளர்களின் / உறுப்பினர்களின் கணக்காய்வுக் குழுக் கூட்ட வருகை பின்வருமாறு.

திருமதி. டி.எச்.எஸ். புள்ளபெரும (4/4)

கலாநிதி. ஐ.டி.எம். ரத்நாயக்க (2/4)

கலாநிதி. ஜி.ஏ.ஜே.எஸ். பண்டார (2/4)

திருமதி. ஷெஹாரா டி சில்வா (1/4)

திருவாளர். பீ.ஏ. உடுமலகல (2/4)

திரு. எம்.டி.பி. திலக்சிறி - அழைப்பின் பேரில் (4/4)

கூட்டமொன்றுக்கு சமுகமளிப்பதற்கு பணிப்பாளர்களுக்கு இயலாதிருப்பின் நிகழ்ச்சிநிரலிலுள்ள ஏதேனும் விடயங்கள் தொடர்பில் முன்கூட்டியே குழுத் தலைவருடன் கலந்துரையாடி காரணமொன்றுக்காக கோரிக்கையிடுவதற்கான சந்தர்ப்பத்தை அவர்கள் கொண்டுள்ளனர்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்திலிருந்தான பிரதிநிதி, வரிசை அமைச்சின் பிரதம கணக்காளர், பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்கள் ஆகியோரும் இக் கணக்காய்வுக் குழுவின் அழைப்பின் பேரில் இக் கூட்டத்திற்கு சமுகமளித்தனர். இக் குழுவின் கூட்ட அழைப்பாளராக உள்ளகக் கணக்காய்வாளர் தொழிற்படுகின்றார்.

**மீளாய்வுகள்:**

சம்பந்தப்பட்ட ஆண்டு சார்பில் பின்வருவனவற்றை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்தது.

1. **ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் : (2016/17, 2017/18, 2018/19, 2019/20)**

   ***பரிந்துரை:***

   - ✓ தாமதமான ஆண்டறிக்கைகளை நியாயமான காலப்பகுதி ஒன்றுக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது. அத்துடன், இது குறித்து வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படுமாறும் பரிந்துரைக்கப்பட்டது.

2. **செயற்பாட்டுத் திட்டம்:**

*பரிந்துரை:*

அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளுக்கு இணங்கியொழுகுமாறு கணக்காய்வுக் குழு பரிந்துரைத்தது.

3. **கணக்காய்வு ஐயவினாக்கள் இல. POS/B/CSC/:/19/68 மற்றும் POS/B/CSCL/19/AQ-82:**

*பரிந்துரை:*

கணக்காய்வு ஐயவினாக்களானவை அவற்றின் மீளாய்வுக்காக கணக்காய்வுக் குழுவிடம் முன்னளிக்கப்பட வேண்டும் என்பதுடன் கணக்காய்வு ஐயவினாக்களின் தீர்ப்பனவும் கொடுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செய்யப்பட வேண்டும்.

4. **உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் மீளாய்வு – உரிமைக்கோரிக்கையிடப்படாத வாகனக் காப்புறுதி உரிமைக்கோரிக்கைகள்:**

*பரிந்துரை:*

வாகன விபத்துச் சேதங்களை உரிய காலப்பகுதிக்குள் உரிமைக்கோரிக்கையிடுமாறும் அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் அந்த நட்டங்களை நிதி ஒழுங்குவிதிகளுக்கிணங்க பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து / உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்பட்டது.

5. **உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் மீளாய்வு – CSC இற்குச் சொந்தமான கோப்புறைகளை (file covers) அச்சிடுதல்:**

*பரிந்துரை:*

தற்போதுள்ள கேள்விச் செய்முறையின் கீழ் CSC இற்குச் சொந்தமான கோப்புறைகளை (file covers) அச்சிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல்.

6. **உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் மீளாய்வு – எழுதுபொருள், காகிதாதிகள் களஞ்சியத்திலுள்ள அசையாத பொருட்களை அகற்றுதல்:**

*பரிந்துரை:*

குழுவொன்றை நியமிக்குமாறும் அக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக அகற்றலினை ஒழுங்குசெய்யுமாறும் பரிந்துரைக்கப்பட்டது.

7. **அந்நியச் செலாவணிக் கொடுப்பனவுகள்:**

*பரிந்துரை:*

சகல அந்நியச் செலாவணிக் கொடுப்பனவுகளும் சார்பில் மத்திய வங்கிச் செலாவணி வீதத்திற்கு விண்ணப்பிக்குமாறு கணக்காய்வுக் குழு பரிந்துரைத்தது.

## 8. கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருள் தொகுப்பு (Accounting Package):

***பரிந்துரை:***

முன்னேற்ற அறிக்கையொன்றைச் சபைக்குச் சமர்ப்பிப்பதே குழுவின் பரிந்துரையாக இருந்தது.

## 9. முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் கடிதம் (DMA/AMC/M/2020/5-4):

***பரிந்துரை:***

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடிதத்திற்கிணங்க செயற்படுமாறு குழு பரிந்துரைத்தது.

## 10. நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்கள்:

***பரிந்துரை:***

அடுத்த கணக்காய்வுக் குழுக் கூட்டத்திற்கு முன்னராக அனைத்து வெற்றிடங்களும் நிரப்பப்பட வேண்டும்.

## 11. இருப்புப் பொருட்கள் தொடர்பான அறிக்கை:

***பரிந்துரை:***

மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பதுடன், இவ்விடயம் பற்றி மீளாய்வுசெய்து அவர்களின் பரிந்துரைகளை சபையிடம் சமர்ப்பிக்குமாறு அவர்களிடம் கோரிக்கையிடுவதே குழுவின் பரிந்துரையாக இருந்தது.

## 12. கணக்காய்வு அத்தியட்சகரினால் பிரேரிக்கப்பட்ட விசேட கணக்காய்வு:

***பரிந்துரை:***

அறிக்கையினைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்க கணக்காய்வுப் பிரிவுக்கு உதவுமாறு பரிந்துரைக்கப்பட்டது.

## 13. தவணை கடந்த முற்பணங்கள் / வருமதிகள்:

***பரிந்துரை:***

நிலுவைகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் அத்துடன் நிலுவைகளைப் பதிவழிப்பதற்கு கணக்காய்வுக் குழுவுக்கு எந்தவொரு அதிகாரமுமில்லை என்பதை குழு நினைவூட்டியது.

## 14. கடன் தீர்க்கும் திறன் சோதனை:

***பரிந்துரை:***

கடன் அறவீட்டுச் செய்முறையை விருத்திசெய்யுமாறு பரிந்துரைக்கப்பட்டது. அத்துடன், விரிவான அறிக்கையொன்றைச் சபையிடம் முன்னளிக்குமாறும் பரிந்துரைக்கப்பட்டது.

**15. உள்ளக கணக்காய்வுத் திட்டம் 2020/21:**

*பரிந்துரை:*

CSC இன் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டத்தை அங்கீகாரத்தின் பொருட்டு அடுத்த சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டது.

அத்துடன், உயர் இடர் கொண்ட துறைக்கு கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்பட்டது.

**16. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை:**

*பரிந்துரை:*

CSC இன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை அங்கீகாரத்தின் பொருட்டு சபைக்குச் சமர்ப்பிப்பதே குழுவின் பரிந்துரையாக இருந்தது.

**17. சொந்தக் கப்பல்களுக்கான வழங்கல்கள்:**

*பரிந்துரை:*

கொடுப்பனவுப் பண உறுதிச்சீட்டுடன் (voucher) இணைக்கப்பட்ட பொருள் பெறுவனவுக் குறிப்புக்கு (GRN) உட்பட்டு வழங்குநர் விலைப்பட்டியல்களைத் தீர்க்குமாறு பரிந்துரைக்கப்பட்டது.

**18. உரிமைக்கோரிக்கையிடப்படாத கொள்கலன் வைப்புக்கள்:**

*பரிந்துரை:*

தவணைகடந்த காலப்பகுதியுடன் விரிவான அறிக்கையொன்றை குழுவுக்கு / சபைக்கு முன்னளிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டது.

**முடிவுரை:**

இக் கணக்காய்வுக் குழுவின் நிகழ்ச்சிக் குறிப்புக்களும் ஏனைய அறிக்கைகளும் பணிப்பாளர் சபைக்கு அதன் உசாவுதல் மற்றும் அவசியமான நடவடிக்கைகளின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்களின் பிரதிகளானவை அமைச்சின் செயலாளருக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குழுவின் சார்பில்

**டி.எச்.எஸ். புள்ளபெரும (திருமதி.)**

தலைவர் - கணக்காய்வுக் குழு

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**

**2020 / 2021 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்**

***நன்றியுரைத்தல்***

*மாண்புமிகு. துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரானவர் அவரின் முழுமையான ஆதரவையும், ஆலோசனையையும் மற்றும் ஊக்குவிப்பையும் இக் கூட்டுத்தாபனத்திற்கு தொடர்ந்து வழங்கியுள்ளார், அதற்கு இக்கூட்டுத்தாபனம் நன்றியுடையது.*

*இக் கூட்டுத்தாபனத்தின் அபிலாசைகளை நிறைவேற்றுவதில் தமது ஒத்துழைப்பினையும் உதவியினையும் வழங்கியமைக்காக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இக்கூட்டுத்தாபனம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது.*

*இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, இலங்கை சுங்கம் மற்றும் வெளிநாட்டு முகவர்கள் சகல நேரங்களிலும் வழங்கிய உதவி மற்றும் ஒத்துழைப்பிற்காக அவர்களுக்கு இக்கூட்டுத்தாபனம் நன்றிகூற விரும்புகின்றது.*

*இக்கூட்டுத்தாபனத்தின் சேவைகளின் பயன்பாட்டைக் கொண்டுள்ள இதன் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அத்துடன் அவர்களிடமிருந்து இக் கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்ட அனைத்திற்கும் இக்கூட்டுத்தாபனம் நன்றிக்கடன்பட்டுள்ளது.*

***அலுவலர் குழாத்திற்கு நன்றி***

*பொதுவாக உளங்கனிந்த மற்றும் ஒத்துழைப்புமிக்க மனப்பான்மையை தருவித்து, அலுவலர் குழாத்துடன் மீளாய்வின் கீழான ஆண்டின் போது முகாமைத்துவ / ஊழியர் உறவுகள் தொடர்ந்து மேம்பட்டன. சங்கங்களானவை முகாமையுடனான அவற்றின் தொடர்பு கையாள்கையில் மிகவும் பொறுப்புடையதாகவும் துலங்கல் மிக்கதாகவும் காணப்பட்டன.*

*கப்பல் தொழிற்றுறை முகங்கொடுக்கும் தீவிரமான பின்னடைவுக்கு இக் கூட்டுத்தாபனம் தாக்குப்பிடிப்பதற்கு இயலுமைப்படுத்திய, கடல் மற்றும் தரை இரண்டிலுமுள்ள சகல ஊழியர்களினாலும் வழங்கப்பட்ட அர்ப்பணிப்புடையதும், கடமையுணர்வு மற்றும் விசுவாசம் பொருந்தியதுமான சேவைகளை முகாமையானது பதிவுசெய்ய வேண்டும்.*

මගේ අංකය
எனது இல.
My No. PAS/B/CSCL/01/20-21/02

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 21 September 2022

Chairman

Ceylon Shipping Corporation Limited

**Report of the Auditor General on the Financial Statements and Other Legal and Regulatory Requirements of the Ceylon Shipping Corporation Limited for the year ended 31 March 2021 in terms of Section 12 of the National Audit Act, No. 19 of 2018.**

---

## 1. Financial Statements

### 1.1. Qualified Opinion

The audit of the financial statements of the Ceylon Shipping Corporation Limited ("Company") for the year ended 31 March 2021 comprising the statement of financial position as at 31 March 2021 and the statement of comprehensive income, statement of changes in equity and cash flow statement for the year then ended, and notes to the financial statements, including a summary of significant accounting policies, was carried out under my direction in pursuance of provisions in Article 154(1) of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka read in conjunction with provisions of the National Audit Act No. 19 of 2018. My report to Parliament in pursuance of provisions in Article 154 (6) of the Constitution will be tabled in due course.

In my opinion, except for the effects of the matters described in the basis for Qualified Opinion section of my report, the accompanying financial statements give a true and fair view of the financial position of the Company as at 31 March 2021, and of its financial performance and its cash flows for the year then ended in accordance with Sri Lanka Accounting Standards.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

### 1.2. Basis for Qualified Opinion

(a) As per the financial statements, loss for the year under review was Rs. 813,320,485 and the cumulative loss as at 31 March 2021 was Rs. 3,419,789,062. Further, net assets/equity of the company as at 31 March 2021 was a negative value of Rs. 2,041,613,494 and it was observed that these were the clear indication of material uncertainties that indicates the going concern uncertainties of the company. The main reason for the loss for the year under review was exchange loss amounting to Rs. 684,460,190 arising from converting USD loan balance to rupee value as at 31st March 2021. To overcome this situation the company had proposed some mitigating measures in the EGM on 3rd July 2021. Even though, in this meeting management was given the consent to convert the USD loan to LKR loan and rescheduling the loan with favorable terms and condition including reduce the interest rate from 7.88 percent to 2 – 4 percent as the ship building industry normal practice. However consent had not been granted by the Central Bank and loan could not convert to LKR. Loan had rescheduled by the bank by increasing the repayment period from 15 year to 20 years. But the interest rate had not reduced as expected up to 2 - 4 percent and only 0.25 percent from 5.25 percent +6 month LIBO had been deducted. Therefore, the main loss mitigating factor based on cash flows generating before and after converting the loan from USD to LKR as per the board resolution No: 259/2021/151 had not been succeeded even by 2 June 2022.

Further, refinancing process of loan as per the cabinet decision on 17 November 2020 company searched for new lender through calling Request for Proposals (RFP), based on the submitted one proposal and technical committee directed the management to clarify the tender in High commission of Sri Lanka – London, Central bank and Attorney Generals Department. However the process had not been completed even by 02 June 2022. Other proposals for diversification the business as a business strategies in achieving long-term growth as promoting Sri Lanka flag registry, operating a floating bunker storage, building a boat for the transportation of passenger and cargo at Norachcholai, operating a feeder service between Colombo and Bangladesh in coordination with Bangladesh shipping corporation and hiring a tanker Vessel in time

or bareboat charter basis to enter for the sea transportation of crude oil, have not been implemented.

(b) As per paragraph 51 of the Sri Lanka Accounting Standard (LKAS ) 16 on "Property, Plant and Equipment" the residual value and the useful life of an asset shall be reviewed at least at each financial year end and if expectation differ from previous estimate, the change(s) shall be accounted for as a change in an accounting estimate in accordance with LKAS 8 Accounting Policies, Changes in Accounting Estimate and Errors. Contrary to that it was observed that the company is using fully depreciated assets at a cost of Rs. 34,479,817 as at 31 March 2021. However action had not been taken to revalue the assets and make necessary adjustments as required.

(c) As per paragraph 6 of the LKAS 7 – Statement of Cash Flows, definition for cash comprises cash on hand and demand deposits. And as per the accounting policy of the company, Cash and cash equivalents include cash in hand, demand deposits and other short-term highly liquid investments with original maturities of three months or less. Contrary to that cash float (cash imprest) that the company had given to Captains of two vessels for their day-to-day operations amounting to Rs. 1,003,766 had not been considered as cash and cash equivalent and had included under other receivables. Therefore, cash and cash equivalent as at 31 March 2021 in the financial position statement and cash flow has been understated by that amount.

(d) As per paragraph 35 of LKAS 01 on Presentation of Financial Statements, foreign exchange gains and losses on transaction and if they are material, Company shall presents such gains and losses separately. However, contrary to that the Company had offset Rs. 67,155,002 exchange gain earned, against the direct expenses of Rs. 2,109,976,010.

Further, as per paragraph 32 of the same standard, Company shall not offset assets against liabilities unless permitted by the standards. However, contrary to that the company had offset Rs. 888,948 debit balances against trade payables and Rs.3,402,124 debit balances against other payable. As a result, trade payables and other payable had understated and debit balances had understated by Rs. 4,291,042 as at the end of the year under review.

(e) Company had not translated the balance payable Rs. of 114,247,992 (USD 745,246) which is the deposit made by the ship building company, as a warranty of two vessels. Hence guaranty repair deposit (liability) had been understated by Rs.36,321,510. Moreover, foreign creditors (Shipping agents) aggregating to Rs. 270,987,706 which were in different foreign currencies had not been translated at closing rate prevailing at the date of financial statements.

(f) It was observed that bunker stock (Fuel Stock) account of two vessels had not been maintain accurately by the company. Therefore, accuracy of the bunker stock as at 31st March 2021 amounting to Rs.195,148,355 could not be confirmed to audit. In a sample audit test, relevant to vessel MV Ceylon Breeze, it was revealed that differences between the ledger balance of bunker stock at the chartering first term, amounting to Rs. 17,310,005 and a loss of price and quantity differences when transmitting the vessel among charters during the year under review amounting to Rs. 1,160,926 and omission of the bunker stock consumption in the month of July amounting to Rs. 43,759,166 had not been adjusted to bunker stock account and Profit & Loss account.

(g) Accuracy and existence of Debtors aggregating to Rs. 73,809,918 from 22 debtors and Trade payable aggregating to Rs. 26,750,981 from 13 creditors could not be ascertained in audit due to lack of sufficient, appropriate evidence including confirmations.

I conducted my audit in accordance with Sri Lanka Auditing Standards (SLAuSs). My responsibilities, under those standards are further described in the Auditor's Responsibilities for the Audit of the Financial Statements section of my report. I believe that the audit evidence I have obtained is sufficient and appropriate to provide a basis for my qualified opinion.

### 1.3 Other information included in the Company's 2020/21 Annual Report.

The other information comprises the information included in the Company's 2020/21 Annual Report but does not include the financial statements and my auditor's report thereon, which is expected to be made available to me after the date of this auditor's report. Management is responsible for the other information.

My opinion on the financial statements does not cover the other information and I do not express any form of assurance conclusion thereon.

In connection with my audit of the financial statements, my responsibility is to read the other information identified above when it becomes available and, in doing so, consider whether the other information is materially inconsistent with the financial statements or my knowledge obtained in the audit or otherwise appears to be materially misstated.

When I read the Company's 2020/21 Annual Report, if I conclude that there are material misstatements therein, I am required to communicate that matter to those charged with governance for correction. If further material uncorrected misstatements are existed those will be included in my report to Parliament in pursuance of provisions in Article 154 (6) of the Constitution that will be tabled in due course.

### 1.4 Responsibilities of Management and Those Charged with Governance for the Financial Statements

Management is responsible for the preparation of financial statements that give a true and fair view in accordance with Sri Lanka Accounting Standards and for such internal control as management determine is necessary to enable the preparation of financial statements that are free from material misstatement, whether due to fraud or error.

In preparing the financial statements, management is responsible for assessing the Company's ability to continue as a going concern, disclosing, as applicable, matters related to going concern and using the going concern basis of accounting unless management either intends to liquidate the Company or to cease operations, or has no realistic alternative but to do so.

Those charged with governance are responsible for overseeing the Company's financial reporting process.

As per Section 16 (1) of the National Audit Act No. 19 of 2018, the Company is required to maintain proper books and records of all its income, expenditure, assets and liabilities, to enable annual and periodic financial statements to be prepared of the Company.

### 1.5 Auditor's Responsibilities for the Audit of the Financial Statements

My objective is to obtain reasonable assurance about whether the financial statements as a whole are free from material misstatement, whether due to fraud or error, and to issue an auditor's report that includes my opinion. Reasonable assurance is a high level of assurance, but is not a guarantee that an audit conducted in accordance with Sri Lanka Auditing Standards will always detect a material misstatement when it exists. Misstatements can arise from fraud or error and are considered material if, individually or in the aggregate, they could reasonably be expected to influence the economic decisions of users taken on the basis of these financial statements.

As part of an audit in accordance with Sri Lanka Auditing Standards, I exercise professional judgment and maintain professional skepticism throughout the audit. I also:

- Identify and assess the risks of material misstatement of the financial statements, whether due to fraud or error, design and perform audit procedures responsive to those risks, and obtain audit evidence that is sufficient and appropriate to provide a basis for my opinion. The risk of not detecting a material misstatement resulting from fraud is higher than for one resulting from error, as fraud may involve collusion, forgery, intentional omissions, misrepresentations, or the override of internal control.

- Obtain an understanding of internal control relevant to the audit in order to design audit procedures that are appropriate in the circumstances, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the Company's internal control.

- Evaluate the appropriateness of accounting policies used and the reasonableness of accounting estimates and related disclosures made by the management.

- Conclude on the appropriateness of the management's use of the going concern basis of accounting and based on the audit evidence obtained, whether a material uncertainty exists related to events or conditions that may cast significant doubt on the Company's ability to continue as a going concern. If I conclude that a material uncertainty exists, I am required to draw attention in my auditor's report to the related disclosures in the financial statements or, if such disclosures are inadequate, to modify my opinion. My conclusions are based on the audit evidence obtained up to the date

of my auditor's report. However, future events or conditions may cause the Company to cease to continue as a going concern.

- Evaluate the overall presentation, structure and content of the financial statements, including the disclosures, and whether the financial statements represent the underlying transactions and events in a manner that achieves fair presentation.

I communicate with those charged with governance regarding, among other matters, significant audit findings, including any significant deficiencies in internal control that I identify during my audit.

## 2 Report on Other Legal and Regulatory Requirements

2.1 National Audit Act, No. 19 of 2018 and Companies Act, No. 7 of 2007 include specific provisions for following requirements.

2.1.1 Except for the effect of the matters described in the Basis for Qualified Opinion paragraph, I have obtained all the information and explanation that required for the audit and as far as appears from my examination, proper accounting records have been kept by the Company as per the requirement of section 163 (2) (d) of the Companies Act, No. 7 of 2007 and section 12 (a) of the National Audit Act, No. 19 of 2018.

2.1.2 The financial statements of the Company comply with the requirement of section 151 of the Companies Act, No. 07 of 2007.

2.1.3 The financial statements presented is consistent with the preceding year as per the requirement of section 6 (1) (d) (iii) of the National Audit Act, No. 19 of 2018.

2.1.4 The financial statements presented includes all the recommendations made by me in the previous year as per the requirement of section 6 (1) (d) (iv) of the National Audit Act, No. 19 of 2018.

2.2 Based on the procedures performed and evidence obtained which limited to matters that are material, nothing has come to my attention;

2.2.1 to state that any member of the governing body of the Company has any direct or indirect interest in any contract entered into by the Company which are out of the

normal course of business as per the requirement of section 12 (d) of the National Audit Act, No. 19 of 2018.

2.2.2 to state that the Company has not complied with any applicable written law, general and special directions issued by the governing body of the Company as per the requirement of section 12 (f) of the National Audit Act, No. 19 of 2018 except for;

| | Reference to Law/Direction | Description |
|---|---|---|
| (a) | Paragraph No.7.4.5 of the public enterprises circular No: PED 12 dated 02 June 2003 | Annual board of survey should be carried out by verification of fixed assets and inventories. Contrary to that physical verification had not been carried out as at 31 March 2021 for inventories valued Rs. 260,130,072 lying in the two vessels. |
| (b) | Management Services Department Circulars No. 2017/05 dated 25 October 2017. | The professional allowance is entitled only to the officers who are not entitled to the allowance, mention in the circular. Contrary to this company paid professional allowance for 11 employees amounting to Rs. 856,638 who received Attendance allowance, Secretary allowance, vehicle allowance, attendance allowance, additional allowance and retention allowance during the year under review. Further, Company had paid same allowance aggregating to Rs.1,109,085 for 13 employees in 2019/20. |

2.2.3 to state that the Company has not performed according to its powers, functions and duties as per the requirement of section 12 (g) of the National Audit Act, No. 19 of 2018.

2.2.4 to state that the resources of the Company had not been procured and utilized economically, efficiently and effectively within the time frames and in compliance with the applicable laws as per the requirement of section 12 (h) of the National Audit Act, No. 19 of 2018.

### 3. Other Matters

(a) Total outstanding trade receivable balance as at 31 March 2021 were amounting Rs.1,829,796,029 and provision for impairment as at that date was Rs.1,010,026,050. Out of the total debtors, 59 percent amounting to Rs.1,095,930,525 had remained over one year without being recovered. Further, it was observed that 95 percent of debtors of Freight clearance, Government Container deposit and Other Debtors aggregating to Rs. 91,139,337 had remained over 03 years without being recovered.

Further, Agency commission receivable from 18 agents amounting to Rs. 3,120,768 had remained without being recovered for over 03 years and 17 agents are not in operation and their aggregate balance, as at the end of the year under review was Rs.2,004,609. It was observed that debt collection procedures are not implemented efficiently.

(b) Company had maintained two separate ledger accounts (Ledger account no: 16160 and Ledger account no 16120) for one bank account number (Bank of Ceylon 5935658) in the IFS accounting system maintained by the company.

(c) The Company is liable to pay Value Added Tax (VAT) based on the cash basis according to the Inland Revenue department direction provided on 3 September 2003 by letter No: VAT/Gen/04. Therefore, amount of Rs. 66,419,287 had been existed as VAT payable due to fail to collect the VAT from the Lanka Coal Company (Pvt) Ltd for the period of 19 November 2012 to 16 January 2018, relevant to 20 invoices. Further, Inland Revenue Department had issued clarification on 17 January 2018 under letter no: ACT 17/9 regarding the dispute between Lanka Coal company Ltd

and the company relevant to the lightering that to consider declaration as zero rated from 17 January 2018, accordingly deemed that Lanka Coal company (Pvt) Ltd requires to pay the default VAT to the company. This dispute had not been resolved for long time and action had not been taken to recover the default VAT from Lanka Coal Company (Pvt) Ltd and remit to Inland Revenue Department.

**W.P.C. Wickramaratne**
Auditor General

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. PAS/B/CSCL/01/20-21/02 திகதி: 2022 செப்டெம்பர் 21

தலைவர்

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கேற்ப வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் அத்துடன் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் சம்பந்தமான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியான அபிப்பிராயம்

2021 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிதிநிலமைக்கூற்று மற்றும் அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான முழுமொத்த வருமானக்கூற்று, உரிமைமுதல் மாற்றக்கூற்று அத்துடன் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய பொழிப்பொன்று உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்கி 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் ("இக்கம்பனி") நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைந்து வாசிக்கப்பட்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி எனது வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி பாராளுமன்றத்திற்கு எனது அறிக்கை உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அபிப்பிராயத்தில், எனது அறிக்கையின் முனைப்பழியான அபிப்பிராய பிரிவிற்கான அடிப்படை எனும் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவுகளுக்கானவற்றைத்

தவிர, இக்கம்பனியின் 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிதிநிலமையினதும் அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயற்றிறன் மற்றும் அதன் காசுப் பாய்ச்சல்கள் என்பவற்றினதும் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தொன்றை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைந்துள்ள நிதிக்கூற்றுக்கள் தருகின்றன.

## 1.2 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நிதிக்கூற்றுக்களுக்கு அமைவாக, மீளாய்வின் கீழான ஆண்டுக்கான நட்டம் 813,320,485 ரூபாவாக இருந்ததுடன் 2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு திரண்ட நட்டம் 3,419,789,062 ரூபாவாக இருந்தது. மேலும், 2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு கம்பனியின் தேறிய சொத்துக்கள் / உரிமைமுதல் 2,041,613,494 ரூபா கொண்ட எதிர்மறைப் பெறுமதியொன்றாக இருந்ததுடன் இவை கம்பனியின் தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு சார்ந்த நிச்சயமற்றதன்மைகளைச் சுட்டிக்காட்டுகின்ற பொருண்மையான நிச்சயமற்றதன்மைகளின் தெளிவான சான்றாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வின் கீழான ஆண்டுக்கான நட்டத்திற்கான பிரதான காரணம், 2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு ஐ.அ. டொலர் கடன் மீதியை ரூபாய் பெறுமதிக்கு மாற்றியமையால் எழுந்த 684,460,190 ரூபா தொகையான செலாவணி நட்டமாகும். இந்நிலமையினை வெற்றிகொள்வதற்கு, கம்பனியானது 2021 யூலை 3 ஆம் திகதியன்று இடம்பெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் சில தணிப்பு நடவடிக்கைகளைப் பிரேரித்திருந்தது. இருப்பினும், இக்கூட்டத்தில், ஐ.அ. டொலர் கடனை இலங்கை ரூபாய் கடனாக மாற்றுவதற்கும், கப்பல் கட்டும் கைத்தொழிலின் சாதாரண நடைமுறையாக வட்டி வீதத்தை 7.88 சதவீதத்திலிருந்து 2-4 சதவீதமாக குறைப்பது அடங்கலாக சாதகமான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இக்கடனை மீள அட்டவணைப்படுத்துவதற்கும் முகாமைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. எனினும், மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் கடனை இலங்கை ரூபாவாக மாற்ற முடியவில்லை. மீள்கொடுப்பனவுக் காலப்பகுதியை 15 வருடங்களிலிருந்து 20 வருடங்களாக அதிகரித்து கடனானது வங்கியினால் மீள அட்டவணைப்படுத்தப்பட்டது. ஆனால் 2-4 சதவீதம் வரை எதிர்பார்க்கப்பட்டவாறு வட்டிவீதம் குறைக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 5.25 சதவீதம் + 6 மாத LIBO இலிருந்து 0.25 சதவீதம் மாத்திரமே கழிக்கப்பட்டிருந்தது. ஆதலால், 259/2021/151 ஆம் இலக்க சபைத் தீர்மானத்திற்கு அமைவாக ஐ.அ. டொலரிலிருந்து இலங்கை

ரூபாவாக கடனை மாற்றுவதற்கு முன்னரும் பின்னரும் பிறப்பிக்கப்படும் காசுப் பாய்ச்சல்களின் அடிப்படையில் பிரதான நட்டத் தணிப்புக் காரணியானது 2022 யூன் 2 ஆம் திகதியளவிற்கூட வெற்றியளித்திருக்கவில்லை.

மேலும், 2020 நவம்பர் 17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக கடனின் மீள்நிதியீட்டச் செய்முறை தொடர்பில் கம்பனியானது பிரேரிப்புகளுக்கான கோரிக்கையினை (RFP) கோருவதனூடாக புதிய கடன் வழங்குநரை தேடியது அத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு பிரேரிப்பின் அடிப்படையில், இலண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திலும், மத்திய வங்கியிலும் அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்திலும் இக்கேள்வியினை தெளிவுபடுத்துமாறு தொழில்நுட்பக் குழு முகாமைக்குப் பணிப்பு விடுத்தது. எனினும், இச்செய்முறையானது 2022 யூன் 02 ஆம் திகதியளவிற்கூட நிறைவுசெய்திருக்கப்படவில்லை. இலங்கை கொடிப் பதிவகத்தை மேம்படுத்தல், மிதக்கும் கப்பல் எரிபொருள் அறைக் களஞ்சியமொன்றை செயற்படுத்துதல், நுரைச்சோலையில் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்திற்காக படகு ஒன்றினைக் கட்டுதல், பங்களாதேஷ் கப்பற் கூட்டுத்தாபனத்துடன் ஒருங்கிணைந்து கொழும்புக்கும் பங்களாதேஷிற்கும் இடையில் கொள்கலன் வழங்கற் சேவையொன்றை செயற்படுத்துதல் மற்றும் மசகு எண்ணையின் கடல் மார்க்கமான போக்குவரத்தினை ஆரம்பிப்பதற்கு கால அல்லது வெற்றுக்கப்பல் வாடகைக்கமர்த்தல் அடிப்படையில் தாங்கிக் கப்பலொன்றை வாடகைக்கமர்த்தல் என நீண்டகால வளர்ச்சியினை அடைந்துகொள்ளும் வியாபாரத் தந்திரோபாயமாக வியாபாரத்தைப் பன்முகப்படுத்துவதற்கான ஏனைய பிரேரிப்புகளானவை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) “ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்” தொடர்பிலான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS-16) 51 ஆம் பந்திக்கு அமைவாக, சொத்தொன்றின் எஞ்சிய பெறுமதியும் பயனுள்ள ஆயுட்காலமும் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டும் மீளாய்வுசெய்யப்பட வேண்டும் என்பதுடன் முன்னைய மதிப்பீட்டிலிருந்து எதிர்பார்க்கை வேறுபடுமாயின், அம்மாற்றமானது (மாற்றங்களானவை) கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டிலான மாற்றங்கள் மற்றும் தவறுகள் தொடர்பிலான LKAS 8 இற்கிணங்க, கணக்கீட்டு மதிப்பீடொன்றில் உள்ள மாற்றமாக கணக்கிடப்பட வேண்டும். அதற்கு முரணாக, 2021 மார்ச் 31 இலுள்ளவாறு 34,479,817 ரூபா கிரயத்தில் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களை கம்பனி பயன்படுத்திவருகின்றமை அவதானிக்கப்பட்டது. எனினும், சொத்துக்களை மறுபடி விலைமதிப்பதற்கும்

தேவைப்படுத்தப்பட்டவாறு அவசியமான சீராக்கங்களைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) LKAS 7 – காசுப் பாய்ச்சல் கூற்று என்பதன் 6 ஆம் பந்திக்கு அமைவாக, காசுக்கான வரைவிலக்கணமானது கையிலுள்ள காசையும் கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது. அத்துடன் கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைக்கு அமைவாக, கையிலுள்ள காசு, கேள்வி வைப்புக்கள் மற்றும் மூன்று அல்லது அதற்குக் குறைவான மாதங்களைக் கொண்ட ஆரம்ப முதிர்வுக்காலத்துடன்கூடிய குறுங்கால உயர்வான திரவத்தன்மை கொண்ட ஏனைய முதலீடுகள் என்பவற்றை காசும் காசுக்குச் சமமானவையும் உள்ளடக்குகின்றன. அதற்கு முரணாக, கம்பனியானது இவ்விரு கப்பல்களினதும் கப்பற் தலைவர்களுக்கு அவர்களின் நாளாந்த செயற்பாடுகள் கருதி வழங்கியிருந்த 1,003,766 ரூபா தொகையான காசுத் தொகையானது (காசுக் கட்டுநிதியானது) காசும் காசுக்குச் சமமானவையுமாக கருதப்பட்டிருக்கவில்லை என்பதுடன் ஏனைய வருமதிகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. நிதிநிலமைக் கூற்றிலும் காசுப் பாய்ச்சலிலும் உள்ள 2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறான காசும் காசுக்குச் சமமானவையும் அத்தொகையினால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக் கூற்றுக்களின் முன்வைப்பு தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (LKAS 01) 35 ஆம் பந்திக்கு அமைவாக, கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான அந்நியச் செலாவணி இலாபங்களும் நட்டங்களும், அவை பொருண்மையானதாக இருப்பின், கம்பனியானது அத்தகைய இலாபங்களையும் நட்டங்களையும் வெவ்வேறாக முன்வைக்க வேண்டும். எனினும், அதற்கு முரணாக, கம்பனியானது உழைக்கப்பட்ட 67,155,002 ரூபா செலாவணி இலாபத்தை 2,109,976,010 ரூபா நேரடிச் செலவினங்களுக்கு எதிராக ஈடாக்கியிருந்தது.

மேலும், அதே நியமத்தின் 32 ஆம் பந்திக்கு அமைவாக, அந்நியமங்களினால் அனுமதிக்கப்பட்டாலொழிய கம்பனியானது சொத்துக்களை பொறுப்புக்களுக்கு எதிராக ஈடாக்குதலாகாது. எனினும், அதற்கு முரணாக, இக் கம்பனியானது வியாபார சென்மதிகளுக்கு எதிராக 888,948 ரூபா வரவு மீதிகளையும் ஏனைய சென்மதிக்கு எதிராக 3,402,124 ரூபா வரவு மீதிகளையும் ஈடாக்கியிருந்தது. அதன் விளைவாக, மீளாய்வின் கீழான ஆண்டு முடிவிலுள்ளவாறு வியாபார சென்மதிகளும் ஏனைய சென்மதியும் குறைத்துக் கூறப்பட்டிருந்ததுடன் வரவு மீதிகளானவை 4,291,042 ரூபாவினால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(உ) இக் கம்பனியானது இரு கப்பல்களினதும் உத்தரவாதம் ஒன்றாக, கப்பல் கட்டும் கம்பனியினால் செய்யப்பட்ட வைப்பாகவுள்ள, 114,247,992 ரூபா (ஐ.அ.டொ. 745,246) சென்மதி மீதியை மாற்றியிருக்கவில்லை. ஆதலால், உத்தரவாத திருத்த வைப்பு (பொறுப்பு) 36,321,510 ரூபாவினால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. மேலும், வெவ்வேறுபட்ட வெளிநாட்டு நாணயங்களில் காணப்பட்ட 270,987,706 ரூபா மொத்தத் தொகையான வெளிநாட்டுக் கடன்கொடுநர்கள் (கப்பல் முகவர்கள்), நிதிக்கூற்றுக்களின் திகதியில் நிலவிய முடிவு வீதத்தில் மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இரு கப்பல்களினதும் கப்பல் எரிபொருள் அறை இருப்பு (எரிபொருள் இருப்பு) கணக்கானது கம்பனியினால் துல்லியமாகப் பேணப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. ஆதலால், 195,148,355 ரூபா தொகையான 2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறான கப்பல் எரிபொருள் அறை இருப்பின் துல்லியத்தன்மையினை கணக்காய்வுக்கு உறுதிப்படுத்த முடியவில்லை. எம்வீ சிலோன் பிறீஸ் கப்பலுக்குரிய மாதிரிக் கணக்காய்வுச் சோதனையொன்றில், 17,310,005 ரூபா தொகையான, முதல் தவணைக்கால வாடகைக்கமர்த்தலில் எரிபொருள் அறை இருப்பின் பேரேட்டு மீதிக்கும் விலை நட்டத்திற்கும் இடையிலான வேறுபாடுகள், மீளாய்வின் கீழான ஆண்டின் போது வாடகைக்கமர்த்துநர்களுக்கிடையில் கப்பலினை மாற்றும் போது 1,160,926 ரூபா தொகையான அளவு வேறுபாடுகள் அத்துடன் யூலை மாதத்தில் 43,759,166 ரூபா தொகையான எரிபொருள் அறை இருப்பு நுகர்வு விடுபட்டமை ஆகியன கப்பல் எரிபொருள் அறை இருப்பு கணக்கிலும் இலாப நட்டக் கணக்கிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது.

(எ) உறுதிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக போதுமான, பொருத்தமான சான்றுகளின் பற்றாக்குறை காரணமாக 22 கடன்படுநர்களிலிருந்து 73,809,918 ரூபா மொத்தத் தொகை கொண்ட கடன்படுநர்களினதும் 13 கடன்கொடுநர்களிலிருந்து 26,750,981 ரூபா மொத்தத் தொகை கொண்ட வியாபார சென்மதிகளினதும் துல்லியத்தன்மையும் இருப்புத்தன்மையும் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட முடியவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuSs) இணங்க நான் எனது கணக்காய்வை மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழ் எனது பொறுப்புகளானவை எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு பிரிவுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகளில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றானது எனது முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளதென்று நம்புகின்றேன்.

## 1.3 இக்கம்பனியின் 2020/21 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இக்கம்பனியின் 2020/21 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்களை ஏனைய தகவல்கள் உள்ளடக்குகின்றன, ஆனால் நிதிக் கூற்றுக்களையும் அத்துடன் அது தொடர்பான எனது கணக்காய்வாளர் அறிக்கையினையும் உள்ளடக்கவில்லை. அது இக்கணக்காய்வாளர் அறிக்கைத் திகதியின் பின்னர் எனக்கு கிடைக்கத்தக்கதாக செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய தகவல்களுக்கு முகாமை பொறுப்புடையது.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது அபிப்பிராயமானது ஏனைய தகவல்களை உள்ளடக்கவில்லை என்பதுடன் அது தொடர்பான உறுப்பாட்டு முடிவினை எவ்வடிவத்திலும் நான் வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில், மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள் கிடைக்கத்தக்கதாக உள்ள போது அதனை வாசிப்பதும், அத்துடன் அவ்வாறு வாசிக்கும் போது, ஏனைய தகவல்களானவை நிதிக் கூற்றுக்களுடன் அல்லது இக்கணக்காய்வில் பெறப்பட்ட எனது அறிவுடன் பொருண்மையுடையதாக ஒத்திசையவில்லையா அல்லது வேறு வகையில் பொருண்மையுடையதாக தவறாக குறிப்பிடப்பட்டதாக தோன்றுகின்றதா என்பதைக் கருத்திற்கொள்வதுமே எனது பொறுப்பாகும்.

இக்கம்பனியின் 2020/21 ஆண்டறிக்கையினை நான் வாசிக்கும் போது, அதில் பொருண்மையான தவறான கூற்றுக்கள் உள்ளன என்று நான் முடிவுசெய்தால், திருத்தத்தினை நிர்வகிப்பதற்குப் பொறுப்பானவர்களுக்கு அவ்விடயத்தினை தொடர்புபடுத்துமாறு நான் வேண்டப்படுகின்றேன். மேலும் பொருண்மையான திருத்தப்படாத தவறான கூற்றுக்கள் காணப்படின், அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி பாராளுமன்றத்திற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படும் எனது அறிக்கையில் அவை உள்ளடக்கப்படும்.

## 1.4 முகாமையினதும் நிதிக் கூற்றுக்களுக்கான நிர்வகிப்பு பொறுப்பளிக்கப்பட்டவர்களினதும் பொறுப்புகள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தொன்றினைத் தருகின்ற நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் அத்துடன் மோசடியோ அல்லது தவறோ காரணமான பொருண்மையான தவறான கூற்றுக்களிலிருந்து விடுபட்டு இந்நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பை இயலுமைப்படுத்துவதற்கு அவசியமானதென

முகாமை நிர்ணயிக்கின்றவாறான அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டிற்கும் முகாமை பொறுப்புடையது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, முகாமையானது ஒன்றில் கம்பனியைக் கலைப்பதற்கு அல்லது நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு உத்தேசித்தாலொழிய, அல்லது யதார்த்தமான மாற்றீடு எதனையும் கொண்டிராது ஆனால் அவ்வாறு செய்வதாக இருந்தாலொழிய, தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு தொடர்புபட்ட விடயங்களை ஏற்புடையதாக வெளிப்படுத்தியும் தொடர்ந்துசெல்லும் கணக்கீட்டு அடிப்படையினைப் பயன்படுத்தியும் தொடர்ந்துசெல்லும் எண்ணக்கருவொன்றாக தொடர்வதற்கான கம்பனியின் ஆற்றலினை மதிப்பிடுவதற்கு முகாமை பொறுப்புடையது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செய்முறையினை மேற்பார்வை செய்வதற்கு நிர்வகிப்பு பொறுப்பளிக்கப்பட்டவர்கள் பொறுப்புடையவர்களாவர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவுக்கு அமைவாக, கம்பனி தொடர்பில் வருடாந்த மற்றும் காலக்கிரம நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கு இயலுமாகும் வகையில் அதன் சகல வருமானம், செலவினம், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய உரிய ஏடுகள் மற்றும் பதிவுகளைப் பேணுமாறு கம்பனியிடம் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு சார்பில் கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடியோ அல்லது தவறோ காரணமாக நிதிக் கூற்றுக்களானவை ஒட்டுமொத்தமாக பொருண்மையான தவறான கூற்றிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பது பற்றிய நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்தலும் அத்துடன் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கும் கணக்காய்வாளர் அறிக்கையொன்றை வெளியிடுதலுமே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்ட உறுதிப்பாடொன்றாகும் ஆனால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கிணங்க நடாத்தப்படும் ஒரு கணக்காய்வானது பொருண்மையான தவறான கூற்று காணப்படும் போது அதனை எப்போதுமே கண்டறியும் ஓர் உத்தரவாதமன்று. மோசடி அல்லது தவறிலிருந்து தவறான கூற்றுகள் எழ முடியும் என்பதுடன் தனித்தனியாகவோ மொத்தமாக பொருண்மையுடையதாக கருத்திற்கொள்ளப்படுகின்றன. இந்நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பாவனையாளர்களின் பொருளாதாரத் தீர்மானங்களில் அவை செல்வாக்குச் செலுத்துமென்று நியாயபூர்வமாக எதிர்பார்க்க முடியும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கிணங்க ஒரு கணக்காய்வின் பகுதியாக, நான் தொழில்சார் திறனாய்வுத் தீர்வினை பிரயோகித்துள்ளதுடன் கணக்காய்வு பூராகவும் தொழில்சார் ஐயுறவுக் கோட்பாட்டினையும் பேணியுள்ளேன். நான் பின்வருவனவற்றையும் மேற்கொண்டுள்ளேன்:

- மோசடியோ அல்லது தவறோ காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான தவறான கூற்றின் இடர்களை இனங்கண்டு, மதிப்பிட்டேன், அவ்விடர்களுக்கு துலங்கும் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து நிறைவேற்றினேன், அத்துடன் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கோண்டேன். கூட்டுச்சதி, பொய்யாவணம், வேண்டுமென்றே தவிர்த்தல், தவறான பிரதிநிதித்துவம், அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை மீறுதல் என்பவற்றை மோசடி உள்ளடக்கலாம் என்பதால் மோசடியிலிருந்து ஏற்படும் பொருண்மையான தவறான கூற்றொன்றை கண்டறியாதுவிடும் இடரானது தவறிலிருந்து ஏற்படும் இடரைக் காட்டிலும் உயர்வானதாகும்.
- கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதிவாய்ந்த தன்மை பற்றிய அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காகவன்றி சூழ்நிலைகளில் பொருத்தமுடையதாகவுள்ள கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் பொருட்டு கணக்காய்விற்குப் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய விளக்கமொன்றைப் பெற்றுக்கொண்டேன்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டினையும் முகாமையினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களின் நியாப்பாட்டினையும் மதிப்பிட்டேன்.
- முகாமையின் தொடர்ந்துசெல்லும் கணக்கீட்டு அடிப்படை பற்றிய பயன்பாட்டின் பொருத்தப்பாடு பற்றியும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றினை அடிப்படையாகக் கொண்டு, தொடர்ந்துசெல்லும் எண்ணக்கருவொன்றாக தொடர்வதற்கு கம்பனியின் ஆற்றல் மீது குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டினை விளைவிக்கக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலமைகள் தொடர்புபட்ட ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது பற்றியும் முடிவுக்கு வந்தேன். ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என்று நான் முடிவுசெய்தால், எனது கணக்காய்வாளர் அறிக்கையில் நிதிக் கூற்றுகளில் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் மீது கவனத்தை ஈர்க்குமாறும் அல்லது, அத்தகைய வெளிப்படுத்தல்கள் பற்றாக்குறையாகவிருப்பின், எனது அபிப்பிராயத்தில் சிறிய மாற்றத்தைச் செய்யுமாறும் நான் வேண்டப்படுகின்றேன். எனது கணக்காய்வாளர் அறிக்கைத் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்ட

கணக்காய்வுச் சான்றின் அடிப்படையில் எனது முடிவுகள் உள்ளன. எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலமைகளானவை இக்கம்பனி தொடர்ந்துசெல்லும் எண்ணக்கருவொன்றாக தொடர்வதை நிறுத்துவதற்கு விளைவிக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுகளின் ஒட்டுமொத்த முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றையும், அத்துடன் நியாயமான முன்வைப்பினை அடைந்துகொள்ளும் விதத்தில் அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுகள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பது பற்றியும் மதிப்பீடுசெய்தேன்.

மற்றய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின் போது நான் இனங்கண்டுகொண்ட உள்ளகக் கட்டுப்பாட்டில் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளடங்கலாக குறிப்பிடத்தக்க கணக்காய்வு முடிவுகள் சம்பந்தமாக நிர்வகிப்பு பொறுப்பளிக்கப்பட்டவர்களுடன் நான் தொடர்புகொண்டேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்கான திட்டவட்டமான ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2.1.1 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவுகளுக்கானவற்றைத் தவிர, இக் கணக்காய்விற்குத் தேவைப்பட்ட சகல தகவல்களையும் விளக்கத்தையும் நான் பெற்றுக்கொண்டுள்ளதுடன் எனது பரீட்சிப்பிலிருந்து எந்தளவிற்குத் தென்படுகின்றதோ அந்தளவிற்கு, முறையான கணக்கீட்டுப் பதிவுகளானவை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163 (2) (ஈ) ஆம் பிரிவினதும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) ஆம் பிரிவினதும் தேவைப்பாட்டிற்கு அமைவாக இக்கம்பனியினால் பேணப்பட்டுள்ளன.

2.1.2 இக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களானவை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாட்டிற்கு ஒத்திசைகின்றன.

2.1.3 முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களானவை 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாட்டிற்கு அமைவாக முன்னைய ஆண்டுடன் ஒத்திசைகின்றன.

2.1.4 முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களானவை 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாட்டிற்கு அமைவாக முன்னைய ஆண்டில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 ஆற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பொருண்மையாகவுள்ள விடயங்களுக்கு மட்டுப்படுத்திய பெற்றுக்கொள்ளப்பட்ட சான்று என்பவற்றின் அடிப்படையில், பின்வருமாறு உரைப்பதற்கு எந்தவொன்றும் எனது கவனத்திற்கு வந்திருக்கவில்லை;

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) ஆம் பிரிவின் தேவைப்பாட்டிற்கு அமைவாக சாதாரண வியாபார நடவடிக்கைக்கு அப்பாற்பட்டு இக்கம்பனியினால் கைச்சாத்திடப்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்திலும் நேரடி அல்லது மறைமுக ஆதாயம் எதனையும் இக்கம்பனியின் நிர்வாக சபையின் உறுப்பினர் எவரும் கொண்டுள்ளனர் என உரைப்பதற்கும்.

2.2.2 பின்வருமாறு, அதாவது

| சட்டம் / வழிகாட்டலுக்கான உசாவுகை | விவரணம் |
|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட PED12 ஆம் இலக்கங்கொண்ட அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பந்தி | நிலையான சொத்துக்களையும் இருப்புக்களையும் சரிபார்ப்பதன் மூலம் வருடாந்த பொருட் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு முரணாக, இரு கப்பல்களிலும் காணப்பட்ட 260,130,072 ரூபா பெறுமதியான இருப்புக்கள் சார்பில் 2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு பௌதிக சரிபார்க்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2017 ஒக்டோபர் 25 ஆம் திகதியிடப்பட்ட 2017/05 ஆம் இலக்கங்கொண்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கைகள் | இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட படிக்கு உரித்தில்லாத அலுவலர்களுக்கு மாத்திரம் தொழில்சார் படி உரித்துடையது. இதற்கு முரணாக, மீளாய்வின் கீழான ஆண்டின் போது வருகைப் படி, செயலாளர் படி, வாகனப் படி, மேலதிக படி மற்றும் தக்கவைத்தல் படி என்பவற்றைப் பெற்றுக்கொண்ட 11 ஊழியர்கள் சார்பில் 856,638 ரூபா தொகை கொண்ட தொழில்சார் படியை கம்பனி செலுத்தியது. மேலும், 2019/20 ஆம் ஆண்டில் 13 ஊழியர்கள் சார்பில் 1,109,085 ரூபா மொத்த தொகை கொண்ட அதே படியை கம்பனி செலுத்தியிருந்தது. |

என்பன நீங்கலாக, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) ஆம் பிரிவின் தேவைப்பாட்டிற்கு அமைவாக இக்கம்பனியின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட ஏதேனும் ஏற்புடைய எழுத்துமூலமான சட்டம், பொது மற்றும் விசேட வழிகாட்டல்களுடன் இக்கம்பனி இணக்கமுற்றிருக்கவில்லை என உரைப்பதற்கும்.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) ஆம் பிரிவின் தேவைப்பாட்டிற்கு அமைவாக கம்பனியானது அதன் தத்துவங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கிணங்க செயலாற்றியிருக்கவில்லை என உரைப்பதற்கும்.

2.2.4 கம்பனியின் வளங்களானவை 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) ஆம் பிரிவின் தேவைப்பாட்டிற்கு அமைவாக கால வரையறைக்குள்ளும் ஏற்புடைய சட்டங்களுடன் இணக்கமுற்றும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதி வாய்ந்ததாகவும் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என உரைப்பதற்கும்.

## 3. ஏனைய விடயங்கள்

(அ) 2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு மொத்த நிலுவையிலுள்ள வியாபார வருமதி மீதியானது 1,829,796,029 ரூபா தொகையாக காணப்பட்டதுடன் அதே திகதியிலுள்ளவாறு பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாடு 1,010,026,050 ரூபாவாக காணப்பட்டது. மொத்தக் கடன்பட்டோர்களில் 1,095,930,525 ரூபா தொகையான 59 சதவீதமானது அறவிடப்படாமல் ஒரு வருடத்திற்கு மேலாக தொடர்ந்திருந்தது. மேலும், 91,139,337 ரூபா மொத்தத்தொகை கொண்ட கப்பற்கேள்வு அப்புறப்படுத்தல் பற்றிய கடன்பட்டோரில் 95 சதவீதம், அரசாங்க கொள்கலன் வைப்பு மற்றும் ஏனைய கடன்பட்டோர் என்பன அறவிடப்படாமல் 03 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

மேலும், 18 முகவர்களிடமிருந்து வருமதியாகவுள்ள 3,120,768 ரூபா தொகை கொண்ட முகவராண்மைத் தரகானது அறவிடப்படாமல் 03 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து காணப்பட்டிருந்தது அத்துடன் 17 முகவர்கள் செயற்படாத நிலையில் உள்ளதுடன் மீளாய்வின் கீழான ஆண்டு முடிவிலுள்ளவாறு அவர்களின் மொத்த மீதியானது 2,004,609 ரூபாவாக காணப்பட்டது. கடன் சேகரிப்பு நடைமுறைகள் வினைத்திறனாக அமுல்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) இக்கம்பனியினால் பேணப்படும் IFS கணக்கீட்டு முறைமையில் ஒரு வங்கிக் கணக்கிலக்கம் சார்பில் இரு புறம்பான பேரேட்டுக் கணக்குகளை (பேரேட்டுக் கணக்கு இல. 16160 மற்றும் பேரேட்டுக் கணக்கு இல. 16120) கம்பனி பேணியிருந்தது.

(இ) VAT/Gen/04 ஆம் இலக்கங்கொண்ட கடிதம் மூலம் 2003 செப்டெம்பர் 3 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்கள வழிகாட்டலுக்கிணங்க காசு அடிப்படையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை (VAT) செலுத்துவதற்கு கம்பனி பொறுப்புடையது. ஆதலால், 20 விலைப்பட்டியல்கள் தொடர்பில், 2012 நவம்பர் 19 ஆம் திகதியிலிருந்து 2018 ஜனவரி 16 ஆம் திகதி வரையான காலப்பகுதி சார்பில் Lanka Coal Company (Pvt) Ltd நிறுவனத்திலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை சேகரிக்க தவறியமை காரணமாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சென்மதியாக 66,419,287 ரூபா கொண்ட தொகையொன்று

காணப்பட்டிருந்தது. மேலும், 2018 ஜனவரி 17 ஆம் திகதியிலிருந்து பூச்சியமாக தரப்படுத்தப்பட்டவாறான வெளிப்படுத்துகையினைக் கருத்திற்கொள்ளும் சரக்கிறக்கல் தொடர்பில் Lanka Coal Company Limited நிறுவனத்திற்கும் இக்கம்பனிக்கும் இடையில் எழுந்த பிணக்குத் தொடர்பில் ACT 17/9 ஆம் இலக்க கடிதத்தின் கீழ் 2018 ஜனவரி 17 ஆம் திகதியன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது தெளிவூட்டலை வழங்கியிருந்ததுடன், அதற்கிணங்க Lanka Coal Company (Pvt) Limited நிறுவனம் இக்கம்பனிக்கு தவணை கடந்த பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை செலுத்த வேண்டியுள்ளதாக கருதப்பட்டது. இப் பிணக்கானது நீண்ட காலமாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் Lanka Coal Company (Pvt) Ltd நிறுவனத்திடமிருந்து தவணைகடந்த பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை அறவிட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டபிள்யு.பி.சி விக்ரமரத்ன

கணக்காய்வாளர் அதிபதி

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**

**முழுமொத்த வருமானக் கூற்று**

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது** | | **2021** | **2020** |
|---|---|---|---|
| | குறிப்புகள் | ரூபா. | ரூபா. |
| **வருமானம்** | 4 | 3,094,619,027 | 3,849,354,149 |
| நேரடி செயற்பாட்டுச் செலவினங்கள் | | (2,042,821,008) | (2,636,981,156) |
| **மொத்த இலாபம்** | | **1,051,798,018** | **1,212,372,993** |
| ஏனைய வருமானம் | 5 | 229,739,950 | 117,664,629 |
| நிர்வாகச் செலவினங்கள் | | (215,875,765) | (216,649,745) |
| **சொத்துக்களின் பெறுமதிக்குறைவிற்கு முன்னர் செயற்பாடுகளிலிருந்தான இலாபம்** | | 1,065,662,204 | 1,113,387,878 |
| சொத்துக்களின் பெறுமதிக்குறைவு | | (161,701,680) | (268,323,431) |
| **செயற்பாடுகளிலிருந்தான இலாபம்** | 6 | 903,960,524 | 845,064,447 |
| நிதிச் செலவுகள் | 7 | (1,441,271,549) | (1,952,380,884) |
| இணை நிறுவனங்களின் இலாபப் பங்கு - (வரி கழித்த) | 14.2 | 10,185,997 | 22,100,882 |
| **வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)** | | **(527,125,027)** | **(1,085,215,556)** |
| வருமான வரி வருமானம்/ (செலவுகள்) | 8 | - | - |
| **வருமான வரிக்குப் பின் ஆண்டுக்கான இலாபம்/ (நட்டம்)** | | **(527,125,027)** | **(1,085,215,556)** |
| ஆண்டுக்கான பிற்போடப்பட்ட வரிச் சீராக்கம் | 17 | (286,195,458) | (69,253,553) |
| **வருமான வரிக்கும் பிற்போடப்பட்ட வரிச் சீராக்கத்திற்கும் பின்னர் ஆண்டுக்கான இலாபம்/ (நட்டம்)** | | **(813,320,485)** | **(1,154,469,109)** |
| **அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு** | 9 | **(105)** | **(217)** |
| ஆண்டுக்கான இலாபம் | | (813,320,485) | (1,154,469,109) |

| | | | |
|---|---|---|---|
| **ஏனைய முழுமொத்த வருமானம்** | | | |
| விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களின் நியாயப்பெறுமதி மாற்றங்கள் மீதான நட்டம் | 16.1 | 5,962,650 | (5,342,534) |
| இடர் கணிப்பீடுசார் எடுகோள்களின் மாற்றங்களிலிருந்து எழுகின்ற நட்டம் | 29.1 | (2,666,471) | (9,587,688) |
| இணை நிறுவனங்களின் ஏனைய முழுமொத்த வருமானப் பங்கு - (வரி கழித்த) | 14.2 | 5,112,610 | 310,099 |
| **ஆண்டுக்கான மொத்த முழுமொத்த வருமானம்** | | **(804,911,696)** | **(1,169,089,232)** |

கணக்கீட்டுக் கொள்கைகளும் 7 தொடக்கம் 33 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பகுதியொன்றை உருவாக்குகின்றன.

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**

**நிதி நிலமைக் கூற்று**

| **மார்ச் 31 இலுள்ளவாறு** | | **2021** | **2020** |
|---|---|---|---|
| | குறிப்புகள் | ரூபா. | ரூபா. |
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 10 | 9,244,124,773 | 9,655,986,279 |
| மூலதன நடைபெறும் வேலை - கப்பல்கள் | 11 | - | - |
| அருவச் சொத்து | 12 | - | - |
| துணை நிறுவனத்திலுள்ள முதலீடு | 13 | - | - |
| இணை நிறுவனங்களிலுள்ள முதலீடு | 14 | 387,476,863 | 372,531,378 |
| விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்கள் | 16 | 19,621,054 | 13,658,404 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்து | 17 | 192,452,549 | 478,648,007 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **9,843,675,240** | **10,520,824,068** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புகள் | | 260,658,042 | 203,586,679 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 18 | 984,461,402 | 2,325,941,430 |
| நியதிச்சட்ட வருமதிகள் | 19 | 10,606,151 | 32,177,013 |
| முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள் | 20 | 120,615,896 | 143,997,433 |
| குறுங்கால முதலீடுகள் | 21 | 24,839,609 | 24,107,923 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 22 | 847,663,133 | 479,509,131 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **2,248,844,233** | **3,209,319,609** |
| **மொத்த சொத்துக்கள்** | | **12,092,519,473** | **13,730,143,677** |

**உரிமைமுதலும் பொறுப்புக்களும்**

**உரிமைமுதல்**

| | | | |
|---|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் | 23 | 50,000,000 | 50,000,000 |
| உரிமைமுதல் மூலதனத்திற்கு எதிரான பங்களிப்பு | 24 | 543,939,497 | 543,939,497 |
| மூலதன ஒதுக்கு | 25 | 767,029,766 | 767,029,766 |
| மறுபடிவிலைமதிப்பு ஒதுக்கு | 26 | 3,065,444 | 3,065,444 |
| விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்கள் | | 14,140,862 | 8,178,212 |
| நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் | | (3,419,789,062) | (2,647,715,036) |
| **மொத்த உரிமைமுதல்** | | **(2,041,613,494)** | **(1,275,502,117)** |

**நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்**

| | | | |
|---|---|---|---|
| நீண்டகால கடன்பெறல்கள் | 28 | 12,139,697,919 | 12,434,283,858 |
| ஓய்வுபெறல் பயன் கடப்பாடு - பணிக்கொடை | 29 | 40,406,325 | 42,095,586 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | 17 | - | - |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | **12,180,104,244** | **12,476,379,445** |

**நடைமுறைப் பொறுப்புக்கள்**

| | | | |
|---|---|---|---|
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 30 | 831,978,507 | 1,618,262,435 |
| குறுங்கால கடன்பெறல் | 31 | 1,020,271,290 | 808,290,000 |
| நியதிச்சட்ட சென்மதிகள் | 32 | 72,570,160 | 76,180,071 |
| அட்டுறு செலவினங்கள் | 33 | 29,208,766 | 26,533,843 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **1,954,028,723** | **2,529,266,349** |
| **மொத்த உரிமைமுதலும் பொறுப்புக்களும்** | | **12,092,519,473** | **13,730,143,677** |

கணக்கீட்டுக் கொள்கைகளும் 7 தொடக்கம் 33 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பகுதியொன்றை உருவாக்குகின்றன.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணக்கமுற்று இந்நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பதில் பொது முகாமையாளர் | உதவிப் பொது முகாமையாளர்-நிதி

இந்நிதிக் கூற்றுக்களை தயாரித்து முன்னளிப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையது.

சபைக்காகவும் சபையின் சார்பிலும் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டது.

பணிப்பாளர் | பணிப்பாளர்

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**

**உரிமைமுதல் மாற்றக் கூற்று**

2021 மார்ச் 31 இல்
முடிவடைந்த ஆண்டுக்கானது

| | கூறப்பட்ட மூலதனம் ரூபா. | உரிமைமுதல் மூலதனத்திற்கு எதிரான பங்களிப்பு ரூபா. | மூலதன ஒதுக்கு ரூபா. | மறுபடி விலைமதிப்பு ஒதுக்கு ரூபா. | விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதிச் சொத்துக்கள் ஒதுக்கு ரூபா. | நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|---|---|---|---|
| 2019 ஏப்பிறல் 1 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி | 50,000,000 | 543,939,497 | 767,029,766 | 3,065,444 | 13,520,746 | (1,433,218,760.32) | (55,663,307) |
| முன்னைய ஆண்டுச் சீராக்கம் | | | | | | (50,749,578.08) | (50,749,578) |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | - | - | - | (1,154,469,109) | (1,154,469,109) |
| ஏனைய முழுமொத்த வருமானம் | - | - | - | - | (5,342,534) | (9,277,589.00) | (14,620,123) |
| **2020 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி** | **50,000,000** | **543,939,497** | **767,029,766** | **3,065,444** | **8,178,212** | **(2,647,715,035.83)** | **(1,275,502,117)** |
| முன்னைய ஆண்டுச் சீராக்கம் | | | | | | 38,800,319.56 | 38,800,320 |
| ஆண்டுக்கான நட்டம் | - | - | - | - | - | (813,320,485.18) | (813,320,485) |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| IFRS இற்கான பெறுமானத்தேய்வு சீராக்கம் | | | | | | | |
| ஏனைய முழுமொத்த வருமானம் | - | - | - | - | 5,962,650.00 | 2,446,139.00 | 8,408,789 |
| **2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி** | **50,000,000** | **543,939,497** | **767,029,766** | **3,065,444** | **14,140,862** | **(3,419,789,062.45)** | **(2,041,613,494)** |

கணக்கீட்டுக் கொள்கைகளும் 7 தொடக்கம் 33 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பகுதியொன்றை உருவாக்குகின்றன.

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**

**காசுப் பாய்ச்சற் கூற்று**

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது** | **2021** | **2020** |
|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்) | (527,125,027) | (1,085,215,556) |
| **செம்மையாக்கல்:** | | |
| பெறுமானத்தேய்வு | 413,611,172 | 413,455,923 |
| நிலையான சொத்துக்களின் விற்பனை மீதான இலாபம் / நட்டம் | (56,840) | (74,144) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 3,859,463 | 3,864,205 |
| பங்கிலாப வருமானம் | (192,143) | (290,117) |
| இணை நிறுவனங்களின் இலாபப் பங்கு - (வரி கழித்த) | (10,185,997) | (22,100,882) |
| வியாபாரக் கடன்பட்டோரின் பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு | 161,701,680 | 268,323,431 |
| செலாவணி நட்டம் | 624,649,103 | 992,935,000 |
| வட்டி வருமானம் | (23,963,961) | (28,946,143) |
| வட்டிச் செலவு | 756,811,358 | 942,422,392 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **1,399,108,806** | **1,484,374,109** |
| இருப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு | (57,071,363) | (118,459,326) |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகளில் (அதிகரிப்பு)/ குறைவு | 1,341,480,027 | (459,377,681) |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளில் அதிகரிப்பு/(குறைவு) | (786,283,928) | 284,119,049 |
| நியதிச்சட்ட வருமதிகளில் (அதிகரிப்பு)/ குறைவு | 21,570,862 | (2,424,421) |
| நியதிச்சட்ட சென்மதிகளில் அதிகரிப்பு/(குறைவு) | (3,609,911) | (3,289,971) |
| அட்டுறு செலவினங்களில் அதிகரிப்பு/(குறைவு) | 2,674,923 | (2,841,041) |

| | | |
|---|---|---|
| **செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசு** | **1,917,869,416** | **1,182,100,718** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (7,441,695) | (6,842,807) |
| செலுத்தப்பட்ட வட்டி | (794,584,810) | (945,194,783) |
| செலுத்தப்பட்ட வரிகள் | - | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **1,115,842,911** | **230,063,129** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு | (1,749,666) | (8,960,725) |
| கப்பல்களின் செலவுக்கான கொடுப்பனவுகள் | - | - |
| நிலையான சொத்துக்களின் அகற்றலிலிருந்தான ஆதாயங்கள் | 56,840 | 74,144 |
| முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களிலிருந்தான தேறிய ஆதாயங்கள்/ (முதலீடுகள்) | (60,871,727) | (110,871,727) |
| குறுங்கால முதலீடுகளிலான தேறிய முதலீடு | (731,686) | (723,679) |
| பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி | 20,155,818 | 34,588,622 |
| பெற்றுக்கொள்ளப்பட்ட பங்கிலாபம் | 545,265 | 290,117 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(42,595,156)** | **(85,603,248)** |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | - |
| கப்பல் கடன் மீள்கொடுப்பனவு | (705,093,752) | - |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு** | **(705,093,752)** | **-** |
| **காசும் காசுக்குச் சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு** | **368,154,002** | **144,459,881** |
| **ஆண்டுத் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவையும்** | **479,509,131** | **335,049,250** |
| **ஆண்டிறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும்** குறிப்பு 22 | **847,663,133** | **479,509,131** |

கணக்கீட்டுக் கொள்கைகளும் 7 தொடக்கம் 33 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பகுதியொன்றை உருவாக்குகின்றன.

## 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான விளக்கக் குறிப்புகளும்

### 1. பொதுவான தகவல்கள்

#### 1.1 அமைவு மற்றும் சட்ட வடிவம்

1971 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலங்கை கப்பற் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட, இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்கான அடுத்துறும் அமைப்பாக, வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது 1992 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையில் அமையப்பெற்றுள்ள ஒரு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். இக் கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் மற்றும் பிரதான வியாபார இடம் என்பன இல. 27, MICH கட்டடம், சேர் ராஷிக் பரீட் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரியில் அமைந்துள்ளன.

#### 1.2 பிரதான செயற்பாடும் தொழிற்பாடுகளின் தன்மையும்

இவ்வாண்டின் போது, கப்பல் சரக்கனுப்பல், கப்பல்களை உடமையாக்குதல் மற்றும் வாடகைக்கமர்த்துதல் தொடர்பான முகாமைத்துவ சேவைகளை வழங்குதலே இக்கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக இருந்தன.

#### 1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இக் கம்பனியின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 122 ஆகும் (2020 மார்ச் 31 –116).

#### 1.4 அறிக்கையிடல் திகதி

இக் கம்பனியின் நிதி அறிக்கையிடல் காலப்பகுதியானது மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைவதுடன் இணைக் கம்பனிகளின் நிதி அறிக்கையிடல் காலப்பகுதியானது டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைகின்றது. இக் கம்பனியின் அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிற்கும் இணைக் கம்பனிகளின் அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிற்கும் இடையில் நிகழும் குறிப்பிடத்தக்க கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் எவையேனுமிருப்பின் அவற்றை இக் கம்பனி சீராக்குகின்றது.

#### 1.5 நிதிக் கூற்றுக்களின் அங்கீகாரம்

இந் நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் 2022 ஜனவரி 20 ஆம் திகதியன்று வெளியீட்டிற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ளன.

### 2. தயாரிப்பிற்கான அடிப்படை

#### 2.1 இணக்கப்பாட்டுக் கூற்று

இக் கம்பனியின் முழுமொத்த வருமானக் கூற்று, நிதி நிலமைக் கூற்று, உரிமைமுதல் மாற்றக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள்

என்பன இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட, இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs) இணங்கவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணக்கமுறும் விதத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீட்டு அடிப்படை

நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ள விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதிச் சொத்துக்களாக குறித்தொதுக்கப்பட்ட விலைகூறப்பட்ட முதலீடுகள் மற்றும் காணியின் மறுபடி விலைமதிப்பு என்பவற்றுக்கானவற்றைத் தவிர இக் கம்பனியின் நிதிக் கூற்றுக்களானவை வரலாற்றுக் கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்படுகின்றன. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்காக சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 ஒப்பீட்டு இலக்கங்கள்

நிகழாண்டு முன்வைப்பிற்கு ஒத்திசைவதற்கு அவசியமானவிடத்தெல்லாம் முன்னைய ஆண்டு இலக்கங்களும் சொற்றொடர்களும் மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4 தொழிற்பாட்டு மற்றும் முன்வைப்பு நாணயம்

இக் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட உருப்படிகளானவை, இக் கம்பனி தொழிற்படுகின்ற முதன்மையான பொருளாதாரச் சூழலின் நாணயத்தை (தொழிற்பாட்டு நாணயத்தை) பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் மிகக்கிட்டிய ரூபா பெறுமதிக்கு மட்டந்தட்டப்படுகின்றது.

இக் கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் முன்வைப்பு நாணயமான இலங்கை ரூபாக்களில் (Rs.) இந்நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 2.5 மதிப்பீடுகளையும் திறனாய்வுத் தீர்வுகளையும் பயன்படுத்தல்

SLFRSs உடன் ஒத்திசைவாக நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தையும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கும் திறனாய்வுத் தீர்வுகளையும், மதிப்பீடுகளையும் எடுகோள்களையும் முகாமை உருவாக்குவதைத் தேவைப்படுத்துகின்றது. இம் மதிப்பீடுகளிலிருந்து உண்மையான பெறுபேறுகள் வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் உட்கிடையான எடுகோள்களும் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடு திருத்தப்படும் காலப்பகுதியிலும் பாதிக்கப்படும்

ஏதேனும் எதிர்கால காலப்பகுதிகளிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் கண்டறியப்படுகின்றன.

### 2.6 பொருண்மை மற்றும் திரட்சி

ஒத்த விடயத்தின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக் கூற்றுக்களில் வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளன. மாறுபட்ட பண்பு அல்லது தொழிற்பாடொன்றைக் கொண்ட விடயங்களானவை பொருண்மையற்றதாக இருந்தாலொழிய வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளன.

## 3. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs) இணங்க இந் நிதிக் கூற்றுக்களானவை இக் கம்பனியினால் தயாரிக்கப்பட்டுள்ளன. இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பிரயோகிக்கப்பட்ட பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே விதித்துரைக்கப்பட்டுள்ளன. இக் கொள்கைகளானவை வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலொழிய தரப்பட்டுள்ள சகல ஆண்டுகளுக்கும் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 3.1 அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் / மாற்றம்

அந்நியச் செலாவணிகளிலான கொடுக்கல் வாங்கல்களானவை, கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் அந்நியச் செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாக்களுக்கு மாற்றப்படுகின்றன. நிதி நிலமைக் கூற்றுத் திகதியில் வெளிநாட்டு நாணயங்களில் வெளிப்படுத்தப்படும் நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அத் திகதியில் நிலவும் அந்நியச் செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாக்களுக்கு மாற்றப்படுகின்றன. மாற்றம் தொடர்பில் எழும் அந்நியச் செலாவணி வேறுபாடுகளானவை இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறியப்படுகின்றன. வரலாற்றுக் கிரயத்தில் குறிப்பிடப்படும், வெளிநாட்டு நாணயங்களில் வெளிப்படுத்தப்படும் நாணயம் சாரா சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் அந்நியச் செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாக்களுக்கு மாற்றப்படுகின்றன.

### 3.2 வருமான வரிச் செலவு

இக் காலப்பகுதிக்கான வரிச் செலவானது நிகழ்கால வரி மற்றும் பிற்போடப்பட்ட வரி என்பவற்றை உள்ளடக்குகின்றது. ஏனைய முழுமொத்த வருமானமாக கண்டறியப்படும் வருமான அல்லது செலவின வகையொன்றின் காரணமாக ஏற்படும் மாற்றமொன்றும் ஏனைய முழுமொத்த வருமானத்தில் நேரடியாக கண்டறியப்படும் என்பதைத் தவிர, வரியானது இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறியப்படுகின்றது.

**(அ) நிகழ்கால வரி**

அறிக்கையிடல் திகதியில் சட்டமாக்கப்பட்ட அல்லது கணிசமானளவிற்கு சட்டமாக்கப்பட்ட வரி வீதங்கள் மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பில் செலுத்தத்தக்க வரிக்கான ஏதேனும் சீராக்கம் என்பவற்றைப் பயன்படுத்தி, ஆண்டுக்கான வரிவிதிக்கக்கூடிய வருமானம் மீது செலுத்தத்தக்க எதிர்பார்க்கப்படும் வரியே நிகழ்கால வரியாகும்.

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன் பின்னரான அதன் திருத்தங்கள் என்பவற்றுக்கு இணங்க இக் கம்பனியின் வரிப் பொறுப்பு கணிப்பிடப்பட்டுள்ளது.

**(ஆ) பிற்போடப்பட்ட வரி**

நிதிக் கூற்றுக்களில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொண்டுசெல்லல் தொகைகளுக்கும் அவற்றின் ஒத்த வரி அடித்தளங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் மீது பிற்போடப்பட்ட வரி கண்டறியப்படுகின்றது (தற்காலிக வேறுபாடுகளாக அறியப்படுவது).
எதிர்காலத்தில் வரிவிதிக்கக்கூடிய இலாபத்தை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் சகல தற்காலிக வேறுபாடுகளுக்காகவும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் கண்டறியப்படுகின்றன. எதிர்காலத்தில் வரிவிதிக்கக்கூடிய இலாபத்தைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் சகல தற்காலிக வேறுபாடுகளுக்காகவும் அத்துடன் ஏதேனும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் அல்லது பயன்படுத்தப்படாத வரி ஆதாயங்களுக்காகவும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் கண்டறியப்படுகின்றன. நிகழ்கால அல்லது மதிப்பிடப்பட்ட எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபத்தின் அடிப்படையில் , அறவிடப்படாதிருப்பதற்கு கூடுதல் சாத்தியப்பாடுடைய ஆகக்கூடிய தொகையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் அளவிடப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரியின் கொண்டுசெல்லல் தொகையானது ஒவ்வோர் அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபங்களின் நிகழ்கால மதிப்பீட்டைப் பிரதிபலிப்பதற்கு சீராக்கப்படுகின்றது. எவையேனும் சீராக்கங்களானவை இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறியப்படுகின்றன.

அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதிக் காலமளவில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது கணிசமானளவிற்கு சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்து காசாக்கப்படுவதற்கு அல்லது பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு தீர்க்கப்படுவதற்கு எதிர்பார்க்கும் காலப்பகுதிகளின் வரிவிதிக்கக்கூடிய இலாபத்திற்கு ஏற்புடையதாகவிருப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் பிற்போடப்பட்ட வரி கணிப்பிடப்படுகின்றது.

**சொத்துக்களும் விலைமதிப்புக்கான அடிப்படைகளும்**

நிதிநிலமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும் சொத்துக்களானவை காசும், அத்துடன் இக் கம்பனி வியாபாரத்தின் சாதாரண தொழிற்பாட்டு வட்டத்தின் போது அல்லது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் என்பவற்றில் எது குறைவான காலப்பகுதியைக் கொண்டதோ அக்காலப்பகுதிக்குள் காசாக்கப்பட எதிர்பார்க்கப்படுபவைகளும் ஆகும். நடைமுறைச் சொத்துக்களை விட ஏனைய சொத்துக்களானவை, இக் கம்பனியானது நிதிநிலமைத் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கு அப்பாற்பட்டு வைத்திருக்க உத்தேசிப்பவை ஆகும்.

## 3.3 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

### (அ) கண்டறிதலும் அளவீடும்

நிதிநிலமைக் கூற்றில் மறுமதிப்பீட்டுத் தொகையில் கொண்டு செல்லப்படும் காணி தவிர ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண வகைகளானவை திரண்ட பெறுமானத் தேய்வையும் எவையேனும் திரண்ட பெறுமதிக்குறைவு நட்டங்களையும் கழித்த கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. சொத்தினை அமைவிடத்திற்கு கொண்டுவருவதற்கும் முகாமையினால் உத்தேசிக்கப்படும் விதத்தில் தொழிற்படும் ஆற்றலைக் கொண்டிருப்பதற்கு இதற்கு அவசியமான நிலமைக்கும் நேரடிக் காரணமான செலவினத்தை வரலாற்றுக் கிரயம் உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்படும் சொத்துக்களின் கிரயமானது மூலப்பொருள் கிரயத்தையும் நேர்கூலியையும் உள்ளடக்குகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் ஒரு வகையானது வெவ்வேறுபட்ட பயனுள்ள ஆயுட்காலங்களைக் கொண்டுள்ள பிரதான உபகூறுகளை உள்ளடக்கியிருக்குமாயின், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் வெவ்வேறுபட்ட வகைகளாக அவை கணக்கிடப்படுகின்றன.

### (ஆ) அடுத்துறும் செலவினம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் ஒரு வகையின் பாகங்களை பதிலீடு செய்வதற்கான கிரயமானது உறப்படும் போது, அப் பதிலீட்டு பாகமானது இக் கம்பனிக்கு அதிகரித்த எதிர்கால நலன்களை வழங்குமென எதிர்பார்க்கப்படின், அத்தகைய ஒரு வகையின் அக் கிரயத்தை, அத்தகைய வகையின் கொண்டு செல்லல் தொகையுடன் இக் கம்பனி சேர்க்கின்றது. பதிலீடு

செய்யப்பட்ட பாகத்தின் கொண்டு செல்லல் தொகையானது கண்டறிதலிலிருந்து நீக்கப்படுகின்றது. ஏனைய சகல திருத்தங்களும் பராமரிப்பும் அவை உறப்படும் காலப்பகுதியின் போது இலாபம் அல்லது நட்டத்திற்குச் சாட்டுதல் செய்யப்படுகின்றன.

**(இ) பெறுமானத்தேய்வு**

காணிக்கு பெறுமானத் தேய்விடப்படுவதில்லை. நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் ஏனைய வகைகளின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலங்களுக்கு சொத்துக்களின் எஞ்சிய பெறுமதியைக் கழித்து அவற்றின் கிரயத்தை குறித்தொதுக்கும் பொருட்டு இலாபம் அல்லது நட்டத்திற்கு பெறுமானத்தேய்வானது சாட்டுதல் செய்யப்படுகின்றது. சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலங்கள் பின்வருமாறு:

| **சொத்துக்கள்** | **ஆண்டுகள்** |
|---|---|
| கட்டடங்கள் | 20 |
| கப்பல்கள் | 25 |
| மோட்டார் வாகனங்கள் | 04 |
| தளபாடமும் பொருத்துகளும் | 10 |
| அலுவலக உபகரணங்களும் | |
| கணனிகளும் | 05 |

சொத்தொன்று பாவனைக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள போது அதன் பெறுமானத் தேய்வானது ஆரம்பிப்பதுடன், அச் சொத்தானது விற்பனைக்கு வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படும் திகதிக்கும் அச் சொத்து கண்டறிதலிலிருந்து நீக்கப்படும் திகதிக்கும் முன்னராக முடிவுறுகின்றது.

கடந்த அறிக்கையிடல் திகதியிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றமொன்று சுட்டிக்காட்டப்படுவதாக இருப்பின் சொத்துக்களின் எஞ்சியுள்ள பெறுமதிகள், பயனுள்ள ஆயுட்காலங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறைகள் என்பன மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமுடையதாகவிருப்பின் சாத்தியப்படும் விதத்தில் சீராக்கப்படுகின்றன.

அகற்றலின் பேரில், விற்கப்படும் உருப்படியின் தேறிய அகற்றல் ஆதாயத்திற்கும் கொண்டுசெல்லல் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடானது இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறியப்படுவதுடன், 'ஏனைய வருமானத்தில்' அல்லது 'ஏனைய செயற்பாட்டுச் செலவுகளில்' உள்ளடக்கப்படுகின்றது.

### 3.4 அருவச் சொத்து

கொள்ளல் செய்யப்படும் கணனி மென்பொருளானது, குறித்த மென்பொருளையும் முறைமைகளையும் கொள்ளல் செய்வதற்கும் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கும் உறப்படும் கிரயங்களின் அடிப்படையில் மூலதனமாக்கப்படுகின்றது. கொள்ளல் செய்யப்படும் அருவச் சொத்துக்களானவை திரண்ட கடனழிவையும் திரண்ட பெறுமதிக்குறைவு நட்டங்களையும் கழித்த கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இக் கிரயங்களானவை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலங்களின் மீது பின்வருமாறு கடனழிவு செய்யப்படுகின்றன:

கணனி மென்பொருள் 05 ஆண்டுகள்

கணனி மென்பொருளைப் பேணுவதுடன் இணைந்த கிரயங்களானவை உறப்படும் போது செலவொன்றாக கண்டறியப்படுகின்றன.

### 3.5 இணை நிறுவனங்களிலான முதலீடு

பொதுவாக நேரடியாகவோ மறைமுகமாகவோ இருபது சதவீதம் அல்லது அதற்குக் கூடுதலான வாக்களிப்பு உரிமைகளைக் கொண்ட பங்குமுதல் உடமையுடன் இணைந்து, இக் கம்பனியானது குறிப்பிடத்தக்க செல்வாக்கினைக் கொண்ட ஆனால் கட்டுப்பாட்டைக் கொண்டிராத நிறுவனங்களே இணை நிறுவனங்களாகும். இணை நிறுவனங்களிலான முதலீடுகளானவை உரிமைமுதல் கணக்கீட்டு முறையினைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றன. உரிமைமுதல் முறையின் கீழ், முதலீடுகளானவை ஆரம்பத்தில் கிரயத்தில் கண்டறியப்படுவதுடன் கொள்ளல் திகதியின் பின்னர் முதலிடப்படும் நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டம் பற்றி முதலீட்டாளரின் பங்கினை கண்டறியும் பொருட்டு கொண்டு செல்லல் தொகையானது அதிகரிக்கப்படுகின்றது அல்லது குறைக்கப்படுகின்றது.

இக் கம்பனியின் கொள்ளலுக்குப் பின்னரான இலாபம் அல்லது நட்டத்தின் பங்கானது முழுமொத்த வருமானக் கூற்றில் கண்டறியப்படுவதுடன் முதலிடப்படும் நிறுவனத்தின் ஏனைய முழுமொத்த வருமானத்தில் கொள்ளலுக்குப் பின்னரான அசைவுகளின் அதன் பங்கானது முதலீட்டின் கொண்டுசெல்லல் தொகைக்கான ஒத்த சீராக்கமொன்றுடன் சேர்த்து ஏனைய முழுமொத்த வருமானத்தில் கண்டறியப்படுகின்றது.

இணை நிறுவனங்களிலான முதலீடுகள் பெறுமதி குறைகின்றன என்ற ஏதேனும் புறநிலைச் சான்று உள்ளதா என்று ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் இக் கம்பனி நிர்ணயம் செய்கின்றது. இது உண்மையாயின், இணை நிறுவனங்களின் அறவிடக்கூடிய தொகைக்கும் அதன் கொண்டு செல்லல் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக பெறுமதிக்குறைவுத் தொகையினை இக் கம்பனி கணிப்பீடு செய்வதுடன் இணை நிறுவனங்களின் இலாப / (நட்டப்) பங்கிற்கு கிட்டிய தொகையை முழுமொத்த வருமானக் கூற்றில் கண்டறிகின்றது.

## 3.6 விற்பனைக்கு வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்கள்

நடைமுறையல்லாச் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகைகளானவை பயன்பாட்டைத் தொடர்வதற்கு ஊடாக என்பதைக் காட்டிலும் பிரதானமாக விற்பனையொன்றுக்கூடாக அறிவிடப்படுமாயின் அவற்றை விற்பனைக்கு வைத்திருக்கப்படுபவையாக இக் கம்பனி வகைப்படுத்துகின்றது. விற்பனைக்கு வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்களானவை அவற்றின் கொண்டுசெல்லல் தொகை மற்றும் விற்பதற்கான கிரயங்கள் கழித்த நியாயப் பெறுமதி என்பவற்றில் குறைவான பெறுமதியில் அளவிடப்படுகின்றன. விற்பனைக்கு வைத்திருக்கப்படும் வகைப்பாட்டிற்கான தகுதிவிதிகளானவை, விற்பனையானது உயர் சாத்தியப்பாட்டைக் கொண்டுள்ளதாகவும் சொத்தானது அதன் தற்போதைய நிலமையில் உடனடி விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுமுள்ள போது மாத்திரமே பூர்த்தி செய்யப்படுவதாக கருதப்படுகின்றன. வகைப்படுத்தல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் பூர்த்தி செய்யப்பட்ட விற்பனையொன்றாக கண்டறிதலுக்காக தகைமைபெறுவதற்கு எதிர்பார்க்கப்பட வேண்டிய விற்பனைக்கு முகாமையானது அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன உரிமையாளர்களுக்கு விற்பதற்கு / விநியோகிப்பதற்கு வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்டதும் பெறுமானத் தேய்விடப்படுவதில்லை அல்லது கடனழிவு செய்யப்படுவதில்லை.

## 3.7 நிதி சாராச் சொத்துக்களின் பெறுமதிக் குறைவு

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், நிதி சாராச் சொத்துக்களானவை பெறுமதிக்குறைவு நட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன என்னும் ஏதேனும் சுட்டிக்காட்டல் காணப்படுகின்றதா என்பதை நிர்ணயிக்கும் பொருட்டு அச் சொத்துக்கள் மீளாய்வு செய்கின்றன. சாத்தியமான பெறுமதிக்குறைவு பற்றிய சுட்டிக்காட்டல் ஒன்று காணப்படுமாயின், ஏதேனும் பாதிக்கப்பட்ட சொத்தின் (அல்லது தொடர்புபட்ட சொத்துக்களின் தொகுதியின்) மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையானது

மதிப்பிடப்படுவதுடன் அதன் கொண்டுசெல்லல் தொகையுடன் ஒப்பிடப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையானது குறைவாக இருக்குமாயின், கொண்டுசெல்லல் தொகையானது அதன் மதிப்பிடப்பட்ட மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகைக்கு குறைக்கப்படுவதுடன், பெறுமதிக்குறைவு நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாகக் கண்டறியப்படுகின்றது.

ஒத்ததாக, ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், இருப்பினது ஒவ்வொரு வகையினதும் (அல்லது ஒத்த வகைகளின் தொகுதியின்) கொண்டுசெல்லல் தொகையினை, பூர்த்தி செய்வதற்கும் விற்பதற்குமான கிரயங்கள் கழித்த அதன் விற்பனை விலையுடன் ஒப்பிடுவதன் மூலம் பெறுமதிக் குறைவிற்காக இருப்புகள் மதிப்பிடப்படுகின்றன. இருப்பினது ஒரு வகையானது (அல்லது ஒத்த வகைகளின் தொகுதியானது) பெறுமதி குறைவடையுமாயின், அதன் கொண்டுசெல்லல் தொகையானது, பூர்த்தி செய்வதற்கும் விற்பதற்குமான கிரயங்கள் கழித்த விற்பனை விலைக்கு குறைக்கப்படுவதுடன், பெறுமதிக்குறைவு நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாகக் கண்டறியப்படுகின்றது.

பெறுமதிக்குறைவு நட்டமொன்று பின்னர் மீள்திரும்பினால், சொத்தின் (அல்லது தொடர்புபட்ட சொத்துக்களின் தொகுதியின்) கொண்டுசெல்லல் தொகையானது அதன் மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையின் (இருப்புகளாக இருக்கும் பட்சத்தில், பூர்த்தி செய்வதற்கும் விற்பதற்குமான கிரயங்கள் கழித்த விற்பனை விலை) திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு, ஆனால் முன்னைய ஆண்டுகளில் அச்சொத்திற்காக (அல்லது தொடர்புபட்ட சொத்துக்களின் தொகுதிக்காக) பெறுமதிக்குறைவு நட்டம் எதுவும் கண்டறியப்படாதிருந்திருந்தால் நிர்ணயிக்கப்பட்டிருந்திருக்கும் தொகையினை விஞ்சாமல், அதிகரிக்கப்படுகின்றது. பெறுமதிக்குறைவு நட்டமொன்றின் மீள்திரும்பலொன்று இலாபத்தில் அல்லது நட்டத்தில் உடனடியாகக் கண்டறியப்படுகின்றது.

### 3.8 இருப்புகள்

வழக்கொழிந்த மற்றும் குறைவான நகரும் வகைகளுக்கான உரிய ஒதுக்கீடுகளை மேற்கொண்டதன் பின்னர், இருப்புகளானவை கிரயம் மற்றும் தேறிய காசாக்கக்கூடிய பெறுமதி என்பவற்றில் குறைவான பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன. இருப்புகளானவை நுகர்வுப் பொருட்களை உள்ளடக்குகின்றன. இருப்புக்களை அவற்றின் தற்போதய அமைவிடத்திற்கும் நிலமைகளுக்கும் கொண்டுவருவதில் உறப்பட்ட கிரயமானது முதல் வந்தது முதல் வெளியே (FIFO) அடிப்படையில் கொள்வனவுக் கிரயத்தில் கணக்கிடப்படுகின்றது.

மதிப்பிடப்பட்ட பூர்த்தியாக்கல் கிரயம் மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட கிரயம் என்பவற்றைக் கழித்து சாதாரண வியாபார நடவடிக்கையில் இருப்புக்களை விற்கக்கூடிய விலையே தேறிய காசாக்கக்கூடிய பெறுமதியாகும்.

**3.9 நிதியியல் சாதனங்கள்**

**நிதி சொத்துக்கள்**

இக் கம்பனியானது ஆரம்பக் கண்டறிதலில் அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை நிர்ணயிப்பதுடன் பின்வருமாறு அதன் நிதிச் சொத்துக்களை வகைப்படுத்துகின்றது:

**(அ) வகைப்படுத்தல்**

**i. கடன்களும் பெறத்தக்கவைகளும்**

செயலூக்கமிக்க சந்தையொன்றில் விலைகூறப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெறுதி அல்லாத நிதிச் சொத்துக்களே கடன்களும் பெறத்தக்கவைகளும் ஆகும். நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும், அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவின் பின்னர் 12 மாதங்களுக்கும் கூடுதலான முதிர்வுக்காலத்திற்கானவற்றைத் தவிர, நடைமுறைச் சொத்துக்களில் கடன்களும் பெறத்தக்கவைகளும் உள்ளடக்கப்படுகின்றன. அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலுள்ள வியாபார மற்றும் ஏனைய வருமதிகள், தவணை வைப்புக்களிலான முதலீடுகள், வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள் அத்துடன் காசும் காசுக்குச் சமமானவையும் என்பவற்றை இக் கம்பனியின் கடன்களும் பெறத்தக்கவைகளும் உள்ளடக்குகின்றன.

**ii விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்கள் (AFS)**

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்களானவை ஒன்றில் இவ்வகுதியில் குறித்தொதுக்கப்பட்ட அல்லது வேறு வகுதிகளில் ஏதேனுமொன்றில் வகைப்படுத்தப்படாத பெறுதி அல்லாத நிதிச் சொத்துக்களாகும். அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவின் 12 மாதங்களுக்குள் முதலீடானது முதிர்வடைந்தாலொழிய அல்லது முகாமையானது அதனை விற்பதற்கு உத்தேசித்தாலொழிய அவை நடைமுறையல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்படுகின்றன. விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்களானவை நீண்டகால

விலைகூறப்பட்ட மற்றும் விலைகூறப்படாத உரிமைமுதல் முதலீடுகளை உள்ளடக்குகின்றன.

**iii. முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள் (HTM)**

கடன்களையும் பெறத்தக்கவைகளையும் விட நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனும் நிலையான முதிர்வுடனுங்கூடிய பெறுதி அல்லாத நிதிச் சொத்துக்களே முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள் ஆகும். கம்பனியானது முதலீடுகளை முதிர்வு வரை வைத்திருப்பதற்கு சாதகமான உத்தேசத்தையும் ஆற்றலையும் கொண்டிருப்பின் அவை முதிர்வுக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்படுகின்றன. முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகளானவை ஒரு வருடத்திற்கு கூடுதலாக முதிர்வடைந்தாலொழிய அம்முதலீடுகள் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்படுகின்றன. முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகளானவை அரசாங்க திறைசேரி உண்டியல்களிலான முதலீட்டை உள்ளடக்குகின்றன.

## (ஆ) கண்டறிதலும் ஆரம்ப அளவீடும்

கடன்களும் பெறத்தக்கவைகளும் ஆக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களானவை, இக் கம்பனி கொடுக்கல் வாங்கலை தொடக்கிய திகதியில் கண்டறியப்பட்டுள்ளன. நிதியியல் சாதனத்தின் ஒப்பந்த ஏற்பாட்டிற்கு ஒரு தரப்பாக இக் கம்பனி மாறும் வர்த்தக திகதியில் ஏனைய நிதிச் சொத்துக்கள் கண்டறியப்பட்டுள்ளன. நிதிச் சொத்தொன்றானது, இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதியில் சொத்துக்கள் காணப்படாத பட்சத்தில், நேரடிக் காரணமான கொடுக்கல்வாங்கல் செலவுகள் கூட்டி நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகள் முடிவுற்றுள்ள அல்லது மாற்றப்பட்டுள்ள போது அத்துடன் கம்பனியானது நிதிச் சொத்துக்களின் உரிமைத்துவத்தின் சகல இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமானளவிற்கு மாற்றியுள்ள போது நிதிச் சொத்துக்கள் கண்டறிதலிலிருந்து நீக்கப்படுகின்றன.

## (இ) அடுத்துறும் அளவீடு

**i. கடன்களும் பெறத்தக்கவைகளும்**

ஆரம்பக் கண்டறிதலைத் தொடர்ந்து, பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாட்டைக்

கழித்து, பயனுறுதி வாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கடன்களும் பெறத்தக்கவைகளும் அளவிடப்படுகின்றன.

**ii. விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்கள் (AFS)**

ஆரம்பக் கண்டறிதலின் பின்னர், விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்ட விலைகூறப்பட்ட உரிமைமுதல் முதலீடுகளானவை நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்களின் நியாயப் பெறுமதியிலான மாற்றங்களானவை ஏனைய முழுமொத்த வருமானத்தில் கண்டறியப்படுவதுடன் உரிமைமுதல் மாற்றக் கூற்றில் விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள ஒதுக்கமாக முன்வைக்கப்படுகின்றன. விலைகூறப்படாத உரிமைமுதல் முதலீடுகளானவை, அவற்றின் நியாயப் பெறுமதியானது தற்போது நம்பகரமாக மதிப்பிடப்பட முடியாத போது, எவையேனும் பெறுமதிக்குறைவு நட்டங்களைக் கழித்த கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

**iii. முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள் (HTM)**

முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகளானவை பயனுறுதி வாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் பின்னர் அளவிடப்படுகின்றன. கடனழிவு செய்யப்பட்ட கிரயமானது கொள்ளல் மற்றும் கொடுக்கல்வாங்கல் கிரயங்களின் மீதான கழிவை அல்லது வட்டத்தை கவனத்திற்கொண்டு கணிப்பீடு செய்யப்படுகின்றது.

**(ஈ) நிதிச் சொத்துக்களின் பெறுமதிக் குறைவு**

**i. கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கொண்டு செல்லப்படும் சொத்துக்கள்**

நிதிச் சொத்தொன்று பெறுமதி குறைகின்றது என்ற புறநிலைச் சான்று உள்ளதா என்று ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதி முடிவிலும் இக் கம்பனி மதிப்பிடுகின்றது. சொத்தின் ஆரம்பக் கண்டறிதலின் பின்னர் நிகழ்ந்த ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான நிகழ்வுகளின் (ஒரு “நட்ட நிகழ்வு”) விளைவாக பெறுமதிக்குறைவின் புறநிலைச் சான்று இருந்தால் அத்துடன் அந்நட்ட நிகழ்வானது (அல்லது நிகழ்வுகளானவை) நம்பகரமாக மதிப்பிடப்படக்கூடிய நிதிச் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மீது தாக்கமொன்றைக் கொண்டிருந்தால் மாத்திரமே நிதிச் சொத்தொன்று பெறுமதி குறைந்து பெறுமதிக்குறைவு நட்டங்கள் உறப்படுகின்றன.

கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கொண்டுசெல்லப்படும் கடன்களும் பெறத்தக்கவைகளும் சார்பில், சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் நிதிச் சொத்தின் ஆரம்ப பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தில் கழிவிடப்பட்ட மதிப்பிடப்படும் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதிக்கும் (உறப்படாதுள்ள எதிர்கால கடன் நட்டங்கள் நீங்கலாக) இடையிலான வித்தியாசமாக நட்டத் தொகை அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகையானது குறைக்கப்பட்டு நட்டத் தொகையானது முழுமொத்த வருமானக் கூற்றில் கண்டறியப்படுகின்றது.

அடுத்துவரும் காலப்பகுதி ஒன்றில், பெறுமதிக்குறைவு நட்டத் தொகை குறைவடைந்து அக் குறைவானது, பெறுமதிக்குறைவு கண்டறியப்பட்டதன் பின்னர் நிகழ்கின்ற ஒரு நிகழ்வுக்கு புறநிலையாக தொடர்புபடுத்தப்பட முடியுமாயின், முன்னர் கண்டறியப்பட்ட பெறுமதிக்குறைவு நட்டத்தின் மீள்திரும்பலானது முழுமொத்த வருமானக் கூற்றில் கண்டறியப்படுகின்றது.

**ii. விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்கள் (AFS)**

நிதிச் சொத்தொன்று பெறுமதி குறைகின்றது என்ற புறநிலைச் சான்று உள்ளதா என்று ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதி முடிவிலும் இக் கம்பனி மதிப்பிடுகின்றது. விலைகூறப்பட்ட உரிமைமுதல் முதலீடுகள் சார்பில், முதலீடுகளின் கிரயத்திற்கும் குறைவாக அவற்றின் நியாயப் பெறுமதியிலான குறிப்பிடத்தக்க அல்லது நீண்டகால குறைவொன்றும், அச் சொத்துக்கள் பெறுமதி குறைகின்றன என்பதற்குச் சான்றாகும். விலைகூறப்பட்ட முதலீடுகள் சார்பில் அத்தகைய ஏதேனும் சான்று காணப்படுமாயின், இலாபம் அல்லது நட்டத்தில் முன்னர் கண்டறியப்பட்ட ஏதேனும் பெறுமதிக்குறைவு நட்டம் கழித்து, கொள்ளல் கிரயத்திற்கும் நிகழ்கால நியாயப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்படும் திரண்ட நட்டமானது மீள்வகைப்படுத்தல் சீராக்கமொன்றாக உரிமைமுதலிலிருந்து இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படுகின்றது. விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாக வகைப்படுத்தப்படும் உரிமைமுதல் ஆவணமொன்றிலுள்ள முதலீடொன்றுக்காக இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறியப்படும் பெறுமதிக்குறைவு நட்டங்களானவை இலாபம் அல்லது நட்டத்திற்கூடாக மீள்திருப்பப்படுகின்றன. இம்மீள்திரும்பல் தொகையானது ஏனைய முழுமொத்த வருமானத்தில் கண்டறியப்படுகின்றது.

விலைகூறப்படாத உரிமைமுதல் முதலீடுகள் சார்பில், முதலீடுகளின் கிரயத்திற்கும் குறைவாக அவற்றின் பெறுமதியிலான குறிப்பிடத்தக்க அல்லது நீண்டகால குறைவொன்றும், அச் சொத்துக்கள் பெறுமதி குறைகின்றன என்பதற்குச் சான்றாகும். விலைகூறப்படாத முதலீடுகள் சார்பில் அத்தகைய ஏதேனும் சான்று காணப்படுமாயின், நிதிச் சொத்தின் கொண்டுசெல்லல் தொகைக்கும் இதையொத்த நிதிச் சொத்தொன்று சார்பில் நிகழ்கால சந்தை வருவாய் வீதத்தில் கழிவிடப்பட்ட மதிப்பிடப்படும் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாக பெறுமதிக்குறைவு நட்டத் தொகை அளவிடப்படுகின்றது. அத்தகைய பெறுமதிக்குறைவு நட்டங்கள் மீள்திருப்பப்படுவதில்லை.

### 3.9.1 வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்

வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் ஆரம்பத்தில் கொடுக்கல்வாங்கல் விலையில் இனங்காணப்படுகின்றன. வருமதிகளானவை வட்டியினை கொண்டிராதிருப்பதுடன் காசு வருமதியின் கழிவிடப்படாத தொகையில் மதிப்பிடப்படுமிடத்து, சாதாரண கடன் நியதிகளின் அடிப்படையில் கூடுதலான விற்பனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சாதாரண கடன் நியதிகளுக்கு அப்பால் கடனானது நீடிக்கப்படுமிடத்து, பயனுறுதி வாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் வருமதிகள் அளவிடப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதி முடிவிலும், வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் கொண்டுசெல்லல் தொகைகளானவை, அத் தொகைகள் மீளப்பெற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்ற ஏதேனும் புறநிலைச் சான்று உள்ளதா என்று நிர்ணயிக்கப்படுவதற்கென மீளாய்வு செய்யப்படுகின்றன. அவ்வாறிருப்பின், பெறுமதிக்குறைவு நட்டமொன்று இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாகக் கண்டறியப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆம் திகதியான ஆரம்பப் பிரயோகத் திகதியுடன் கடந்தகாலத்திலிருந்து அமுலுக்குவரும் வண்ணம் SLFRS 9 ஐ வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் பிரயோகித்துள்ளது.

### 3.9.2 காசும் காசுக்குச் சமமானவையும்

கையிலுள்ள காசு, கேள்வி வைப்புகள் மற்றும் மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான மாதங்களைக் கொண்ட ஆரம்ப முதிர்ச்சிகளுடன்கூடிய ஏனைய குறுங்கால உயர் திரவத்தன்மை கொண்ட முதலீடுகள் என்பவற்றை காசும்

காசுக்குச் சமமானவையும் உள்ளடக்குகின்றன. வங்கி மேலதிகப்பற்றுக்களானவை நிதிநிலமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளில் காட்டப்படுகின்றன.

காசுப் பாய்ச்சற் கூற்றானது "மறைமுக முறையினை" பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

**நிதிப் பொறுப்புகள்**

**3.9.3 வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்**

வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் ஆரம்பத்தில் கொடுக்கல்வாங்கல் விலையில் (கொடுக்கல்வாங்கல் கிரயங்கள் உள்ளடங்கலாக) கண்டறியப்படுகின்றன. வியாபார சென்மதிகளானவை சாதாரண கடன் நியதிகளின் அடிப்படையிலான கடப்பாடுகளாக அமைவதுடன் வட்டியினைக் கொண்டிருப்பதில்லை. வட்டியினைக் கொண்டுள்ள பொறுப்புகளானவை பின்னர் பயனுறுதி வாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

**3.9.4 வங்கி மேலதிகப்பற்றுக்கள்**

மேலதிகப்பற்றுக்களானவை கேள்வியின் பேரில் முழுமையாக மீளச் செலுத்தப்படக்கூடியதாக இருப்பதுடன் ஆரம்பத்தில் அளவிடப்பட்டு அதன் பின்னர் முகப் பெறுமதியில் எடுத்துரைக்கப்படுகின்றன.

**3.10 அரசாங்க மானியங்கள்**

பணம் சாராத மானியங்கள் உள்ளடங்கலாக அரசாங்க மானியங்களானவை, அம்மானியம் பெற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் இணைக்கப்பட்ட சகல நிபந்தனைகளுடனும் இக் கம்பனி இணக்கமுறும் என்ற நியாயமான உறுதிப்பாடு காணப்படுமிடத்து, அவற்றின் நியாயப் பெறுமதியில் கண்டறியப்படுகின்றன.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றுடன் தொடர்புபட்ட அரசாங்க மானியங்களானவை, பிற்போடப்பட்ட அரசாங்க மானியங்களாக நடைமுறையல்லாப் பொறுப்புகளில் உள்ளடக்கப்படுவதுடன் தொடர்புபட்ட சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலங்களுக்கு நேர்கோட்டு அடிப்படையொன்றில் முழுமொத்த வருமானக் கூற்றில் கண்டறியப்படுகின்றன.

பணம் சாராத மானியங்களானவை பணம் சாராத சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதியில் அளவிடப்படுவதுடன் மானியம் மற்றும் சொத்து எனும் இரண்டையுமே கொண்டுசெல்லல் பெறுமதியில் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

**பொறுப்புகளும் ஏற்பாடுகளும்**

கேள்வியின் மீது கொடுப்பனவிற்கு நிலுவையாகவுள்ளதும் அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் அமைவதுமானவையே நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படும் பொறுப்புகளாகும். அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் கொடுப்பனவிற்கு நிலுவையாகவுள்ள அம் மீதிகளே நடைமுறையல்லாப் பொறுப்புகளாகும்.

சகல அறிந்துவைத்துள்ள பொறுப்புகளும் இந்நிதிக்கூற்றுகளின் தயாரிப்பில் கணக்கிடப்பட்டுள்ளன. கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக சட்டம் அல்லது அனுமானம் சார்ந்த கடப்பாடொன்றை இக் கம்பனி கொண்டுள்ள போதும் பொருளாதாரப் பயன்களின் வெளிப்பாய்ச்சலொன்று கடப்பாட்டைத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியப்பாடுடைய போதும் ஏற்பாடுகளும் பொறுப்புகளும் கண்டறியப்படுகின்றன.

**3.11 ஓய்வுபெறல் பயன் செலவுகள்**

இக் கம்பனியானது வரையறுக்கப்பட்ட பயன் மற்றும் வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் ஆகிய இரண்டையுமே கொண்டுள்ளது. எத் திட்டத்தின் கீழ் கம்பனியானது புறம்பான நிறுவனமொன்றாக நிலையான பங்களிப்புகளை செலுத்துகின்றதோ, அத்துடன் நிகழ்கால மற்றும் முன்னைய காலப்பகுதிகளில் ஊழியர் சேவை தொடர்பான பயன்களை சகல ஊழியர்களுக்கும் செலுத்துவதற்கு போதுமான சொத்துக்களை நிதியமானது கொண்டிருக்காதுவிடின், மேலதிக பங்களிப்புகளை செலுத்துவதற்கான சட்ட அல்லது அனுமான கடப்பாடுகள் எவற்றையும் கொண்டிருக்காததோ அவ் ஓய்வூதியத் திட்டமொன்றே வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகும். வரையறுக்கப்பட்ட பயன் திட்டமொன்று வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமொன்றாக அல்லாது ஓய்வூதியத் திட்டமொன்றாகவே உள்ளது. பொதுவாக வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்களானவை வழமையில் வயது, சேவை வருடங்கள் மற்றும் இழப்பீடு போன்ற ஒன்று அல்லது அதற்குங்கூடிய காரணிகளைப் பொறுத்து, ஓய்வுபெறலின் பேரில் ஓர் ஊழியர் பெற்றுக்கொள்ளும் ஓய்வூதியப் பயன் தொகையொன்றை வரையறை செய்கின்றன.

**அ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத்**

**திட்டங்கள்** - **ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும்**

- **ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ETF)**

ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புகளுக்கு தகுதியுடைய சகல ஊழியர்களும் உரிய நியதிச்சட்டங்கள்

மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஒத்திசைவாக உரிய பங்களிப்பு நிதியங்களில் உள்வாங்கப்படுகின்றனர்.

**ஆ. வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்கள் – ஓய்வுபெறல் பணிக்கொடை**

ஓய்வுபெறல் பணிக்கொடை தொடர்பில் நிதிநிலமைக் கூற்றில் கண்டறியப்பட்ட பொறுப்பானது அறிக்கையிடல் திகதியிலுள்ள பணிக்கொடைக் கடப்பாட்டின் நிகழ்காலப் பெறுமதியாகும். பணிக்கொடைச் சூத்திரத்தைப் பயன்படுத்தி கணிப்பிடப்படும் எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு முறையினைப் பயன்படுத்தி பணிக்கொடைக் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கிணங்க, ஐந்து வருட தொடர்ச்சியான சேவையினைப் பூர்த்திசெய்துள்ள ஓய்வுபெறும் ஊழியர்களுக்கு மாத்திரம் பணிக்கொடையினைச் செலுத்துவதற்கு இக்கம்பனி கடப்பாடுடையது.

தொழில்தருநர் செலுத்திய உண்மையான ஓய்வூதியக் கொடுப்பனவிற்கும் எதிர்பார்க்கப்பட்ட தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகவுள்ள (Actuarial) இலாபங்கள் / நட்டங்களானவை அவை ஏற்பட்ட காலப்பகுதியில் ஏனைய முழுமொத்த வருமானத்தில் கண்டறியப்பட்டுள்ளன.

பணிக்கொடைக்கு வெளிவாரியாக நிதியீட்டம் செய்யப்படுவதில்லை.

**3.12 எதிர்பாரா நிகழ்வுகளும் மூலதனக் கடப்பாடுகளும்**

அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு காணப்படும் சகல பொருண்மையான மூலதனக் கடப்பாடுகளும் எதிர்பாரா நிகழ்வுப் பொறுப்புகளும் நிதி கூற்றுக்களுடனான சம்பந்தப்பட்ட குறிப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

**முழுமொத்த வருமானக் கூற்று**

**3.13 வருமானம் கண்டறிதல்**

பொருளாதாரப் பயன்கள் கம்பனிக்கு கிடைக்கப்பெறும் என்பதும் வருமானம் அத்துடன் உறப்பட்ட அல்லது உறப்படவுள்ள இணைந்த கிரயங்கள் என்பன நம்பகரமாக அளவிடப்பட முடியும் என்பதும் சாத்தியப்படக்கூடியதாகவுள்ள அளவிற்கு வருமானம் கண்டறியப்படுகின்றது. பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளக்கூடிய கொடுப்பனவின் நியாயப் பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது.

**(அ) கடற்பயண வருமானம்**

சேவைகளை நிறைவுசெய்தலின் அடிப்படையில் சேவைகள் வழங்கப்படும் காலப்பகுதியில் சரக்கு கையாளல் மற்றும் போக்குவரத்துச் சேவைகளிலிருந்து எழும் வருமானமானது கண்டறியப்படுவதுடன் வழங்கப்பட்ட உண்மையான சேவைகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது.

**(ஆ) வாடகைக்கமர்த்தல் வருமானம்**

வாடகைக்கமர்த்தலிலிருந்தான வருமானம் அட்டுறு அடிப்படையில் காலம்சார் வாடகைக்கமர்த்தல் உடன்படிக்கைக் காலப்பகுதிக்கு கண்டறியப்படுகின்றது.

**(இ) முகவராண்மைக் கட்டணம்**

சேவைகளை நிறைவுசெய்தலின் அடிப்படையில் சேவைகள் வழங்கப்படும் காலப்பகுதியில் வருமானமாக முகவராண்மைக் கட்டணம் கண்டறியப்படுகின்றது.

**(ஈ) வட்டி**

வட்டி வருமானமானது பயனுறுதிவாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி கண்டறியப்படுகின்றது.

**(உ) ஏனைய இலாபங்களும் நட்டங்களும்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் அத்துடன் முதலீடுகள் உள்ளடங்கலான ஏனைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் என்பவற்றின் விற்பனையிலிருந்து எழுகின்ற வருமான இயல்பொன்றின் தேறிய இலாபங்களும் நட்டங்களுமானவை, விற்பனையின் மீதான ஆதாயத்திலிருந்து அத்தகைய சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகையையும் தொடர்புபட்ட விற்பனைச் செலவுகளையும் கழித்ததன் பின்னர், இலாபம் அல்லது நட்டத்திற்காக கணக்கிடப்படுகின்றன.

**(ஊ) பங்கிலாப வருமானம்**

கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை உண்டாகும் போது பங்கிலாப வருமானம் கண்டறியப்படுகின்றது.

**3.14 செலவினம் கண்டறிதல்**

வியாபாரத்தை நடாத்திச் செல்வதிலும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றை வினைத்திறனான நிலமையில் பேணுவதிலும் உறப்படும் சகல செலவினங்களும் ஆண்டுக்கான இலாபத்தை அல்லது நட்டத்தை எட்டும் வருமானத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன.

**3.15 கடன்பெறல் கிரயங்கள்**

தகவுறு சொத்தின் கொள்ளல், நிர்மாணம் அல்லது உற்பத்தி காரணமாக நேரடியாக ஏற்படும் கடன்பெறல் கிரயங்களானவை அச் சொத்தின் கிரயத்தின் பகுதியை உருவாக்குகின்றன. ஏனைய கடன்பெறல் கிரயங்கள் செலவொன்றாக கண்டறியப்படுகின்றன.

**3.16 தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்**

விலை அறவிடப்படுவதைக் கருத்திற்கொள்ளாமல், நிதி மற்றும் செயற்பாட்டுத் தீர்மானங்களை / கொள்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான அல்லது அவற்றின் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கினைப் பிரயோகிப்பதற்கான ஆற்றலை ஒரு தரப்பானது கொண்டிருக்கும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

**3.17 புதிய மற்றும் திருத்தப்பட்ட நியமங்களும் பொருள்கோடல்களும்**

SLFRS 16 - குத்தகைகள்

SLFRS 16 ஆனது LKAS 17 ஐ பதிலீடு செய்கின்றது, ஓர் ஒழுங்கானது குத்தகையொன்றை உள்ளடக்குகின்றதா என்பது பற்றி வரையறுக்கும் IFRIC 4.

SIC-15 செயற்பாட்டுக் குத்தகைகள் – ஊக்குவிப்புகள் மற்றும் SIC-17 ஆனது குத்தகையொன்றின் சட்ட வடிவத்தை உள்ளடக்கும் கொடுக்கல் வாங்கல்களின் விடயப்பொருளை மதிப்பிடுகின்றது. குத்தகைகளை கண்டறிதல், அளவிடுதல், முன்வைத்தல் மற்றும் வெளிப்படுத்தலுக்கான தத்துவங்களை இந்நியமம் எடுத்துரைப்பதுடன் ஐந்தொகையில் கூடுதல் குத்தகைகளை கண்டறியுமாறு குத்தகை பெறுநர்களை வேண்டிக்கொள்கின்றது.

SLFRS 16 இன் கீழ் கணக்கிடப்படும் குத்தகை வழங்குநர் LKAS 17 இலிருந்து கணிசமான அளவிற்கு மாற்றப்படவில்லை. LKAS 17 இலுள்ளவாறு ஒத்த தத்துவங்களைப் பயன்படுத்தி செயற்பாட்டுக் குத்தகைகளா அல்லது நிதிக் குத்தகைகளா என குத்தகைகளை, குத்தகை வழங்குநர்கள் தொடர்ந்து வகைப்படுத்துவர். ஆதலால், இக்கம்பனியானது குத்தகை வழங்குநராக இருக்குமிடத்து குத்தகைகளுக்கான தாக்கமொன்றை SLFRS 16 கொண்டிருக்கவில்லை.

நிதிக் கூற்றுக்களில் புறம்பான வெளிப்படுத்தலைத் தேவைப்படுத்தும், இக்கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் மீதான பொருண்மையான தாக்கமொன்றை இந்நியமம் கொண்டிருக்கவில்லை.

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | | குறிப்புகள் | 2021 | 2020 |
|---|---|---|---|---|
| | | | ரூபா. | ரூபா. |
| 4 | **வருமானம்** | | | |
| | கடற்பயணம் | | 597,832,869 | 1,055,883,158 |
| | சரக்கு வருமானம்,சொந்தக் கப்பல் | | 1,425,339,909 | 1,638,808,541 |
| | சொந்தப் படகிலிருந்தான வாடகைக்கமர்த்தல் வாடகை | | 587,535,533 | 592,200,642 |
| | அப்புறப்படுத்தல் மற்றும் முன்னளித்தல் | | 8,337,584 | 19,583,422 |
| | முகவராண்மை மற்றும் கப்பலை வாடகைக்கமர்த்துவோருக்கான தரகு | | 475,573,131 | 542,878,386 |
| | | | 3,094,619,027 | 3,849,354,149 |
| 5 | **ஏனைய வருமானம்** | | | |
| | நிலையான சொத்துக்களின் விற்பனை மீதான இலாபம் | | 56,840 | 74,144 |
| | பங்கிலாபம் | | 192,143 | 290,117 |
| | செலாவணி இலாபம் | | 62,220,301 | 62,962,318 |
| | வட்டி வருமானம் - நிலையான வைப்புக்களும் திறைசேரி உண்டியல்களும் | | 23,963,961 | 28,946,143 |
| | வட்டி வருமானம் - அலுவலர் குழாத்துக் கடன்கள் | | 1,465,263 | 1,773,627 |
| | தாமதக் கட்டண அறவீடுகள் – சொந்தக் கப்பல் | | 126,681,291 | 13,549,679 |
| | ஆவணமாக்கல் கட்டண அறவீடுகள் | | 5,807,139 | |
| | ஏனையவை | | 9,353,012 | 10,068,601 |
| | | | **229,739,950** | **117,664,629** |

## 6 செயற்பாடுகளிலிருந்தான இலாபம்/(நட்டம்)

பின்வருவன உள்ளடங்கலாக சகல செயற்பாட்டுச் செலவினங்களையும் சாட்டுதல் செய்த பின்னர் செயற்பாடுகளிலிருந்தான இலாபம்/(நட்டம்) எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கணக்காய்வாளரின் ஊதியம் | 741,000 | - |
| பெறுமானத்தேய்வு | 413,611,172 | 413,455,923 |
| தொழில்நிபுணர் மற்றும் சட்டக் கட்டணங்கள் | 637,400 | 953,910 |
| அலுவலர் குழாத்துச் செலவுகள் **(குறிப்பு: 6.1)** | 153,638,941 | 160,877,024 |

### 6.1 அலுவலர் குழாத்துச் செலவுகள்

| | | |
|---|---|---|
| பணிப்பாளர்களின் ஊதியம் | 1,097,000 | 225,560 |
| சம்பளமும் கூலியும் | 129,155,049 | 131,698,381 |
| வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவுகள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 16,860,958 | 15,501,190 |
| வரையறுக்கப்பட்ட பயன் திட்டச் செலவு - ஓய்வுபெறல் பணிக்கொடை | 6,525,934 | 13,451,893 |
| | 153,638,941 | 160,877,024 |

| | | | | |
|---|---|---|---|---|
| **7** | **நிதிச் செலவுகள்** | | | |
| | **நிதிச் செலவுகள்** | | | |
| | வட்டிச் செலவு - கப்பல் கடன் | | (756,811,358) | (942,422,392) |
| | செலாவணி நட்டம் | | (684,460,191) | (1,009,958,492) |
| | | | **(1,441,271,549)** | **(1,952,380,884)** |
| **8** | **வருமான வரி வருமானம் / (செலவுகள்)** | | | |
| | சாதாரண செயற்பாடுகள் மீதான வரி | 8.1 | - | - |
| | பிற்போடப்பட்ட வரிச் சொத்தின் மீள்திரும்பல் | 17 | 286,195,457.96 | 69,253,553.00 |
| | கருதிய பங்கிலாப வரி | | - | - |
| | | | **286,195,458** | **69,253,553** |

| | | **குறிப்புகள்** | **2021** | **2020** |
|---|---|---|---|---|
| | | | **ரூபா.** | **ரூபா.** |
| **8.1** | **வரி விதிக்கக்கூடிய இலாபத்திற்கும் கணக்கீட்டு இலாபத்திற்கும் இடையிலான கணக்கிணக்கம்** | | | |
| | வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம் | | (527,125,027) | (1,085,215,556) |
| **சேர்ப்பனவு**: | இணை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபம் | | 353,122 | |
| **கழிப்பனவு**: | இணை நிறுவனங்களின் இலாபப் பங்கு - (வரி கழித்த) | | (10,185,997) | (22,100,882) |
| | | | (536,957,902) | (1,107,316,438) |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒன்றுதிரண்ட அனுமதிக்கத்தகாத விடயங்கள் | | 1,858,902,160 | 1,360,038,189 |
| | ஒன்றுதிரண்ட அனுமதிக்கத்தக்க விடயங்கள் | | (12,092,543) | (12,074,615) |
| | கடன்பட்டோர் பெறுமதிக் குறைவுகளுக்கான பெறுமதிக்குறைவு ஏற்பாடுகள் | | 161,701,680 | 268,323,431 |
| | வரிக்கு உட்படாத வருமானம் | | (24,509,226) | (29,236,260) |
| | வியாபாரத்திலிருந்து மதிப்பிடக்கூடிய வருமானம் | | 1,447,044,169 | 479,734,307 |
| | முதலீட்டிலிருந்து மதிப்பிடக்கூடிய வருமானம் | | 24,509,226 | 29,236,260 |
| **சேர்ப்பனவு**: | வரி-வட்டி வருமானத்திற்கான ஏனைய வருமானப் பொறுப்பு | | | |
| | மொத்த நியதிச்சட்ட வருமானம் / மதிப்பிடக்கூடிய வருமானம் | | 1,471,553,395 | 508,970,567 |
| | **ஆண்டுக்கான சாதாரண செயற்பாடுகள் மீதான நிகழ்கால வரி** | 8 | - | - |

9 **அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு**

அறிக்கையிடல் காலப்பகுதியில் வெளியீட்டிலுள்ள சாதாரண பங்குகளின் நிறையளிக்கப்பட்ட சராசரி எண்ணிக்கையின் மூலம் உரிமைமுதல்தாரர்களுக்கு உரிய இலாபத்தினை பிரிப்பதன் மூலம் அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு கணிப்பிடப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| **பின்னத்தின் மேலெண்ணாகப் பயன்படுத்தப்பட்ட தொகை** | | |
| உரிமைமுதல்தாரர்களுக்கு உரிய தேறிய இலாபம் (ரூபா) | (527,125,027) | (1,085,215,556) |
| **பின்னத்தின் கீழெண்ணாகப் பயன்படுத்தப்பட்ட தொகை** | | |
| வெளியீட்டிலுள்ள பங்குகளின் நிறையளிக்கப்பட்ட சராசரி எண்ணிக்கை | 5,000,000 | 5,000,000 |

| | | |
|---|---|---|
| **அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு (ரூபா.)** | **(105.43)** | **(217.04)** |

**அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு**

அறிக்கையிடல் காலப்பகுதியில் வெளியீட்டிலுள்ள சாதாரண பங்குகளின் நிறையளிக்கப்பட்ட சராசரி எண்ணிக்கையின் மூலம் உரிமைமுதல்தாரர்களுக்கு உரிய இலாபத்தினை/ (நட்டத்தினை) பிரிப்பதன் மூலம் அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு/ (நட்டம்) கணிப்பிடப்படுகின்றது.

**பின்னத்தின் மேலெண்ணாகப் பயன்படுத்தப்பட்ட தொகை**

| | | |
|---|---|---|
| உரிமைமுதல்தாரர்களுக்கு உரிய தேறிய இலாபம்/ (நட்டம்) (ரூபா) | (527,125,027) | (1,085,215,556) |

## 10 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

| | **காணி மற்றும் வீடமைப்பு கருத்திட்டம் ரூபா.** | **கட்டடங்கள் ரூபா.** | **கப்பல் ரூபா.** | **மோட்டார் வாகனங்கள் ரூபா.** | **தளபாடம், பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் ரூபா.** | **கணனிகள் ரூபா.** | **மொத்தம் ரூபா.** |
|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம் / விலைமதிப்பு** | | | | | | | |
| 2020 ஏப்பிறல் 1 இலுள்ளவாறு மீதி | 5,286,340 | 43,390 | 11,235,780,363 | 37,002,095 | 21,315,011 | 23,646,516 | 11,323,073,715 |
| ஆண்டுக்காலத்தில் சேர்ப்பனவுகள் | - | - | - | - | 994,026 | 755,640 | 1,749,666 |
| ஆண்டுக்காலத்தில் கப்பல்கள்சார் மூலதன நடைபெறும் வேலையிலிருந்து மாற்றப்பட்டது | - | - | | - | - | - | - |
| ஆண்டுக்காலத்தில் விற்பனைகள் | - | - | - | - | (1,229,664) | (1,192,607) | (2,422,271) |
| 2021 மார்ச் 31 இலுள்ளவாறு மீதி | 5,286,340 | 43,390 | 11,235,780,363 | 37,002,095 | 21,079,373 | 23,209,549 | 11,322,401,110 |

**திரண்ட பெறுமானத்தேய்வு**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2020 ஏப்பிறல் 1 இலுள்ளவாறு மீதி | 1,253,056 | 43,390 | 1,601,910,329 | 31,338,104 | 13,462,509 | 19,080,048 | 1,667,087,436 |
| ஆண்டுக்கான சாட்டுதல் | 8,316 | - | 408,178,758 | 2,182,782 | 1,409,966 | 1,831,350 | 413,611,172 |
| விற்பனைகளின் மீதானவை | - | - | - | - | (1,229,664) | (1,192,607) | (2,422,271) |
| 2021 மார்ச் 31 இலுள்ளவாறு மீதி | 1,261,372 | 43,390 | 2,010,089,087 | 33,520,886 | 13,642,811 | 19,718,791 | 2,078,276,337 |

| **தேறிய புத்தகப் பெறுமதி** | **குறிப்புகள்** | 2021 | 2020 |
|---|---|---|---|
| | | **ரூபா.** | **ரூபா.** |
| காணி மற்றும் வீடமைப்புக் கருத்திட்டம் | | 4,024,968 | 4,033,284 |
| கட்டடங்கள் | | - | - |
| கப்பல்கள் | | 9,225,691,276 | 9,633,870,034 |
| மோட்டார் வாகனங்கள் | | 3,481,209 | 5,663,991 |
| தளபாடமும் பொருத்துக்களும் | | 7,436,562 | 7,852,502 |
| அலுவலக உபகரணங்களும் கணனிகளும் | | 3,490,758 | 4,566,468 |
| | | 9,244,124,773 | 9,655,986,279 |

| | | | |
|---|---|---|---|
| மூலதன நடைபெறும் வேலை - கட்டடங்கள் | 10.1 | 3,626,440 | 3,626,440 |
| பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாடு | | (3,626,440) | (3,626,440) |
| | 10.2 | **9,244,124,773** | **9,655,986,279** |

2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியிலுள்ளவாறு பெறுமதிக் குறைவுடன் தொடர்புபட்ட உள்ளக மற்றும் வெளியகக் காரணிகளைக் கருத்திற்கொண்டு வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது அதன் வருடாந்த பெறுமதிக் குறைவு சோதனையை மேற்கொண்டது. LKAS 36 இன் 33 ஆம் பந்திக்கிணங்க வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் தவிசாளர்களால் நியமிக்கப்பட்ட தொழில்வல்லுநர்களை உள்ளடக்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மற்றும் மதிப்பீடுகளைப் பயன்படுத்தி பயன்பாட்டிலுள்ள பெறுமதிக் கணிப்பீட்டு முறையின் அடிப்படையில் 2021 மார்ச் 31 இலுள்ளவாறு கப்பல்களின் அறவிடக்கூடிய தொகையானது நிர்ணயிக்கப்பட்டது.

கப்பலின் பயன்பாட்டிலுள்ள பெறுமதிக் கணிப்பீடுகளை அளவிடும் போது, வரலாற்று மற்றும் சுழற்சிப் போக்கு அடிப்படையிலும், அதேபோன்று திறந்த சந்தை நடவடிக்கைகளுக்கான எதிர்கால வாடகைக்கமர்த்தல் வீதங்கள் மற்றும் லக்விஜய மின்நிலையத்திற்கு நிலக்கரியை கொண்டுசெல்வதற்காக கப்பல்கள் தொழிற்படுத்தப்படும் காலப்பகுதிக்கான மதிப்பிடப்பட்ட சந்தைக் கேள்வு வீதங்கள் மற்றும் கப்பற் தொழிற்பாட்டுச் செலவினங்கள் அடிப்படையிலான காலம்சார் வாடகைக்கமர்த்தல் சமனிகள் (TCE) முறை பற்றிய எதிர்கால எதிர்பார்க்கைகள் மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றின் அடிப்படையிலும் இந்நிறுவனம் எடுகோள்களை ஆக்கியுள்ளன. காசுப் பாய்ச்சல் மதிப்பீடுகளுக்கு பிரயோகிக்கப்பட்ட முன்-வரி கழிவு வீதம் 5.45% ஆகும். Clarkson Shipping Intelligence Weekly (CSIW) நிறுவனத்தின் கூற்றுக்கு அமைவாக உலர் மொத்தச் சரக்குக் கப்பல்கள் சார்பில் மெற்றிக் தொன் ஒன்றுக்கு 610 ஐ.அ. டொலர் கொண்ட சராசரி எஞ்சிய விலையினைப் பயன்படுத்தி எஞ்சிய பெறுமதிகள் மதிப்பிடப்பட்டன.

| | | குறிப்புகள் | 2021 | 2020 |
|---|---|---|---|---|
| | | | ரூபா. | ரூபா. |
| **10.1** | **மூலதன நடைபெறும் வேலை - கட்டடங்கள்** | | | |
| | ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி | | 3,626,440 | 3,626,440 |
| | ஆண்டிறுதியிலுள்ள மீதி | 10 | 3,626,440 | 3,626,440 |
| **10.2** | **நிலையான சொத்துக்களின் கொண்டுசெல்லல் பெறுமதி** | | | |
| | கிரயத்தில் | | 9,240,124,773 | 9,651,986,279 |
| | விலைமதிப்பில் | | 4,000,000 | 4,000,000 |
| | | 10 | 9,244,124,773 | 9,655,986,279 |

காணி மற்றும் கட்டடம் என்பன அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தினால் 1994 ஆம் ஆண்டு யூலை மாதம் மறுபடி விலைமதிப்புச் செய்யப்பட்டன. துணை உத்தம பயன்பாட்டிலுள்ள அச் சொத்துக்கள் குறித்து உரிய சீராக்கங்களுடன் நடைமுறைப் பயன்பாட்டிலுள்ள சொத்துக்களின் திறந்த சந்தை மதிப்பொன்றினை இவ் விலைமதிப்பு அடிப்படையாகக் கொண்டிருந்தது. பிற்போட்டப்பட்ட வரி கழித்த விலைமதிப்பின் பெறுபேறுகளானவை மறுபடி விலைமதிப்பு ஒதுக்கத்தில் கண்டறியப்பட்டது.

**10.3 பெறுமானத் தேய்வு கழித்த கிரயத்தில் சொத்துக்கள் கொண்டு செல்லப்பட்டிருந்திருப்பின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்திருக்கும் மறுபடி விலைமதிப்பு செய்யப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகைகள் பின்வருமாறு:**

| | 2021 | 2020 |
|---|---|---|
| கிரயம் | 1,120,000 | 1,120,000 |
| திரண்ட பெறுமானத்தேய்வு | (1,120,000) | (1,120,000) |
| கொண்டுசெல்லல் பெறுமதி | - | - |

16,704,617 ரூபா கொண்ட (2015 – 13,269,081 ரூபா) கிரயத்துடன்கூடிய இக் கம்பனியின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ளதுடன் கம்பனியினால் பயன்பாட்டில் தொடர்ந்து வைத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**11 மூலதன நடைபெறும் வேலை - கப்பல்கள்**

| | எம்வீ சிலோன் பிறீஸ் ரூபா. | எம்வீ சிலோன் பிறின்ஸ் ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|
| **கிரயம்** | - | - | - |
| 2016 ஏப்பிறல் 1 இலுள்ளவாறு மீதி | - | | |
| ஆண்டுக்காலத்தில் சேர்ப்பனவுகள் | - | - | - |
| கடன்பெறல் செலவுகள் | - | - | - |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்திற்கான மாற்றம் | - | - | - |
| 2017 மார்ச் 31 இலுள்ளவாறு மீதி | - | - | - |

சராசரி கடன்பெறல் செலவு மூலதனமாக்கல் வீதம் - 15.59% (2015-10.91%)

| **மார்ச் 31 இலுள்ளவாறு** | **2021** ரூபா. | **2020** ரூபா. |
|---|---|---|
| **12 அருவச் சொத்து** | | |
| **கணனி மென்பொருள்** | | |
| **கிரயம்** | | |
| ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி | 6,144,497 | 6,144,497 |
| ஆண்டிறுதியிலுள்ள மீதி | 6,144,497 | 6,144,497 |
| **திரண்ட கடனழிவு** | | |
| ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி | 6,144,497 | 6,144,497 |
| ஆண்டிறுதியிலுள்ள மீதி | 6,144,497 | 6,144,497 |
| **மார்ச் 31 இலுள்ளவாறு குறைத்தெழுதப்பட்ட பெறுமதி** | - | - |

| | | | 2021 | 2020 |
|---|---|---|---|---|
| | | | ரூபா. | ரூபா. |

## 13. துணை நிறுவனத்திலுள்ள முதலீடு

| | பங்குகளின் எண்ணிக்கை | உடமை வைத்திருப்பின் சதவீதம் | 2021 ரூபா. | 2020 ரூபா. |
|---|---|---|---|---|
| சிலோன் ஷிப்பிங் ஏஜென்சி (பிறைவெட்) லிமிட்டெட் | 9,999 | 100% | 99,990 | 99,990 |
| பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாடு | | | (99,990) | (99,990) |
| | | | - | - |

இத் துணை நிறுவனத்தை மூடும் பொருட்டு 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் விளைவாக இத் துணை நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களை கம்பனியானது திரட்டியிருக்கவில்லை. சபைத் தீர்மானத்தைத் தொடர்ந்து, இத் துணை நிறுவனமானது 2006 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து அதன் செயற்பாடுகளை நிறுத்தியிருந்தது. தற்போது, இத் துணை நிறுவனத்தின் கலைப்புச் செய்முறை பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் அதனை மூடிவிட வேண்டியுள்ளது.

## 14. இணை நிறுவனங்களிலான முதலீடு

**உரிமைமுதல் முறை மீதான கொண்டுசெல்லல் பெறுமதி**

| | 2021 | 2020 |
|---|---|---|
| சிலோன் ஷிப்பிங் லைன்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் | 303,274,506 | 293,167,807 |
| சிலோன் ஷிப்பிங் ஏஜென்சி (பிறைவெட்) லிமிட்டெட் - சிங்கப்பூர் | 84,202,357 | 79,363,571 |
| | **387,476,863** | **372,531,378** |

14.1 **இணை நிறுவனங்களிலான முதலீடு**

**கிரயம்**

| | **பங்குகளின் எண்ணிக்கை** | **உடமை வைத்திருப்பின் சதவீதம்** | | |
|---|---|---|---|---|
| சிலோன் ஷிப்பிங் லைன்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் | 156,942 | 39% | 1,569,420 | 1,569,420 |
| சிலோன் ஷிப்பிங் ஏஜென்சி (பிறைவெட்) லிமிட்டெட் - சிங்கப்பூர் | 24,500 | 49% | 143,622 | 143,622 |
| | | | 1,713,042 | 1,713,042 |

14.2 **உரிமைமுதல் முறை மீது இணை நிறுவனங்களிலான முதலீட்டின் அசைவு**

**முதலீட்டாளரின் தேறிய சொத்துக்களின் பங்கு**

| | | |
|---|---|---|
| ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி | 372,531,378 | 350,473,519 |
| **இணை நிறுவனங்களின் இலாபப் பங்கு வரி ) - (கழித்த) (14.2)** | **10,185,997** | **22,100,882** |
| இணை நிறுவனங்களின் ஏனைய முழுமொத்த வருமானத்தின் பங்கு - (வரி கழித்த) | 5,112,610 | 310,099 |
| பங்கிலாப வருமானம் | (353,122) | (353,122) |
| ஆண்டிறுதியிலுள்ள மீதி | 387,476,863 | 372,531,378 |

### 14.3 இணை நிறுவனங்களின் பொழிப்பாக்கப்பட்ட நிதித் தகவல்கள்

| | சிலோன் ஷிப்பிங் ஏஜென்சி (பிறைவெட்) லிமிட்டெட் - சிங்கப்பூர் | | சிலோன் ஷிப்பிங் லைன்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் | |
|---|---|---|---|---|
| **டிசெம்பர் 31 இலுள்ளவாறு** | **2020** | **2019** | **2020** | **2019** |
| மொத்தச் சொத்துக்கள் | 231,075,820 | 265,933,862 | 927,295,210 | 925,944,606 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 51,771,935 | 96,505,049 | 97,378,078 | 122,847,529 |
| தேறிய சொத்துக்கள் | 179,303,885 | 169,428,813 | 829,917,132 | 803,097,078 |
| வருமானம் | 701,782,376 | 864,388,724 | 352,997,880 | 490,132,018 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 705,302,230 | 856,368,199 | 399,903,380 | 496,839,651 |
| ஏனைய வருமானம் | 5,019,383 | 202,452 | 50,350,444 | 26,628,274 |
| ஆண்டுக்கான இலாபம் | 1,499,529 | 8,222,977 | 24,233,919 | 46,337,494 |
| ஆண்டுக்கான ஏனைய முழுமொத்த வருமானம் | - | - | 2,586,136 | (951,605) |

| | குறிப்புகள் | 2021 | 2020 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |

## 15. நிதியியல் சாதனங்கள்

**நிதிச் சொத்துக்களினதும் நிதிப் பொறுப்புக்களினதும் வகுதிகள்**

நிதி நிலமைக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட நிதிச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொண்டுசெல்லல் பெறுமதி பின்வருமாறு;

**நிதிச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொண்டுசெல்லல் பெறுமதிகள்**

### 15.1 நிதிச் சொத்துக்கள்

#### 15.1.1 விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ளவை

| | குறிப்புகள் | 2021 | 2020 |
|---|---|---|---|
| விலைகூறப்பட்ட முதலீடு | 16.1 | 17,243,984 | 11,281,334 |
| விலைகூறப்படாத முதலீடுகள் | 16.2 | 2,377,070 | 2,377,070 |
| | | 19,621,054 | 13,658,404 |

விலைகூறப்பட்ட முதலீடானது செயலூக்கமிக்க சந்தைசார் விலைகூறப்பட்ட விலைகளின் அடிப்படையில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது. விலைகூறப்படாத முதலீடுகளானவை, அவற்றின் நியாயப் பெறுமதியை நம்பகரமாக அளவிட முடியாத படியால் பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாட்டைக் கழித்த கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

#### 15.1.2 முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்

| | குறிப்புகள் | 2021 | 2020 |
|---|---|---|---|
| திறைசேரி உண்டியல்களிலான முதலீடு | 20 | 120,615,896 | 143,997,433 |

முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகளானவை வட்டி வருமதி உள்ளடங்கலாக அளவிடப்படுகின்றது.

### 15.1.3 கடன்களும் பெறத்தக்கவைகளும்

| | | | |
|---|---|---|---|
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 18 | 984,461,402 | 2,325,941,430 |
| குறுங்கால முதலீடுகள் | 21 | 24,839,609 | 24,107,923 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 22 | 847,663,133 | 479,509,131 |
| | | 1,856,964,145 | 2,829,558,484 |

கடன்களும் பெறத்தக்கவைகளும், அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதியானது நியாயப் பெறுமதியுடன் ஏறத்தாழ சரியாகவிருக்கின்ற படியால் அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதியில் எடுத்துரைக்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | | **1,997,201,095** | **2,987,214,321** |

### 15.2 நிதிப் பொறுப்புக்கள்

| | | | |
|---|---|---|---|
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 30 | 831,978,507 | 1,618,262,435 |
| **மொத்த நிதிப் பொறுப்புக்கள்** | | 831,978,507 | 1,618,262,435 |

நிதிப் பொறுப்புக்களானவை, அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதியானது நியாயப் பெறுமதியுடன் ஏறத்தாழ சரியாகவிருக்கின்ற படியால் அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதியில் எடுத்துரைக்கப்படுகின்றன.

| | குறிப்புகள் | 2021<br>ரூபா. | 2020<br>ரூபா. |
|---|---|---|---|
| **16. விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதிச் சொத்துக்கள்** | | | |
| விலைகூறப்பட்ட முதலீடு | 16.1 | 17,243,984 | 11,281,334 |
| விலைகூறப்படாத முதலீடுகள் | 16.2 | 2,377,070 | 2,377,070 |
| | | **19,621,054** | **13,658,404** |
| **16.1 விலைகூறப்பட்ட முதலீடு** | | | |
| ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி | | 11,281,334 | 16,623,868 |
| நியாயப் பெறுமதியிலுள்ள மாற்றங்கள் மீதான இலாபம்/ (நட்டம்) | | 5,962,650 | (5,342,534) |
| ஆண்டிறுதியிலுள்ள மீதி | 16 | 17,243,984 | 11,281,334 |

| | | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|---|
| | **பங்குகளின் எண்ணிக்கை** | **கிரயம்**<br>**ரூபா.** | **சந்தைப் பெறுமதி**<br>**ரூபா.** | **கிரயம்**<br>**ரூபா.** | **சந்தைப் பெறுமதி**<br>**ரூபா.** |
| மேகன்ரைல் ஷிப்பிங் கொம்பனி பிஎல்சி | 238,506 | 2,068,800 | 17,243,984 | 2,068,800 | 11,281,334 |

### 16.2 விலைகூறப்படாத முதலீடுகள்

விலைகூறப்படாத முதலீடுகளானவை, அவற்றின் நியாயப் பெறுமதியை நம்பகரமாக அளவிட முடியாத படியால் பெறுமதிக் குறைவு நட்டங்களைக் கழித்த கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

| | | 2021 | 2020 |
|---|---|---|---|
| | குறிப்புகள் | ரூபா. | ரூபா. |
| | பங்குகளின் எண்ணிக்கை | | |
| அசோசியேற் நியூஸ் பேப்பெர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் | 31,206 | 312,060 | 312,060 |
| சிலோன் போற் சேவிஸ்சஸ் லிமிட்டெட் | 5,000 | 50,000 | 50,000 |
| சிறீ லங்கா போற் மனேஜ்மென்ட் அன்ட் கொன்சல்ரன்சி லிமிட்டெட் | 1,501 | 15,010 | 15,010 |
| லங்கா கோல் கொம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் | 200,000 | 2,000,000 | 2,000,000 |
| | 16 | 2,377,070 | 2,377,070 |

### 17 பிற்போடப்பட்ட வரிச் சொத்து / (பொறுப்பு)

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி | | 478,648,007 | 547,901,560 |
| ஆண்டின் போதான மீள்திரும்பல் | 8 | | - |
| ஆண்டின் போது | | (286,195,458) | (69,253,553) |
| ஆண்டிறுதியிலுள்ள மீதி | 17.1 | **192,452,549** | **478,648,007** |

சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொண்டுசெல்லல் தொகைக்கும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வரி அடித்தளத்திற்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளுக்காக பிற்போடப்பட்ட வரி கண்டறியப்படுகின்றது. 24% கொண்ட பயனுறுதி வாய்ந்த வரி வீதத்தின் மூலம் பிற்போடப்பட்ட வரி அளவிடப்பட்டுள்ளது.

| | | குறிப்புகள் | 2021<br>ரூபா. | 2020<br>ரூபா. |
|---|---|---|---|---|
| **17.1** | **பிற்போடப்பட்ட வரி சொத்து மற்றும் பொறுப்பு பகுப்பாய்வு** | | | |
| | **பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு** | | | |
| | துரித பெறுமானத்தேய்விலிருந்து | | (2,215,379,794) | (2,313,523,583) |
| | | | (2,215,379,794) | (2,313,523,583) |
| | **பிற்போடப்பட்ட வரிச் சொத்து** | | | |
| | வரி நட்டத்திலிருந்து | | 2,364,498,212 | 2,717,671,026 |
| | பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு | | 33,636,613 | 64,397,623 |
| | ஓய்வுபெறல் பயன் கடப்பாட்டிலிருந்து | | 9,697,518 | 10,102,941 |
| | | | 2,407,832,343 | 2,792,171,590 |
| | | 17 | 192,452,549 | 478,648,007 |

ஓய்வுபெறல் பயன் கடப்பாட்டிற்கான அத்துடன் எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபம் / நட்டத்திற்கு ஊடாக தொடர்புபட்ட வரிப் பயன்களை அடைந்துகொள்தலானது சாத்தியப்படக்கூடிய அளவிற்கான வரி நட்டத்திற்கான ஏற்பாட்டிற்காக பிற்போடப்பட்ட வரிச் சொத்து கண்டறியப்படுவதுடன் பெறுமானத்தேய்வை துரிதப்படுத்துவதற்காகவும் மறுபடிவிலைமதிப்பு மிகைக்காகவும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் கண்டறியப்படுகின்றன.

| | | | 2021 | 2020 |
|---|---|---|---|---|
| **18** | **வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்** | | | |
| | வியாபார வருமதிகள் | **18.1** | 848,370,068 | 2,199,742,282 |
| | வைப்புகளும் முற்பணங்களும் | **18.2** | 20,020,967 | 18,350,308 |
| | அலுவலர் குழாத்து வருமதிகள் | **18.3** | 55,042,036 | 52,540,792 |
| | ஏனைய வருமதிகள் | **18.4** | 61,028,331 | 55,308,048 |
| | | | **984,461,402** | **2,325,941,430** |

**18.1 வியாபார வருமதிகள்**

| | | | |
|---|---|---|---|
| வியாபார வருமதிகள் | | 1,829,796,029 | 3,049,370,999 |
| வியாபார கட்டுப்பாட்டுக் கணக்கு (உள்நாட்டு) | | 28,316,889 | 19,961,580 |
| நிலக்கரி கொடுக்கல்வாங்கல் கட்டுப்பாட்டுக் கணக்கு | | 283,199 | 283,199 |
| பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு | | (1,010,026,050) | (869,873,496) |
| | **18** | 848,370,068 | 2,199,742,282 |

தொடர்புபட்ட தரப்பினர்களிடமிருந்தான பின்வரும் வருமதிகளை வியாபார வருமதிகள் உள்ளடக்குகின்றன.

**தொடர்புபட்ட தரப்பினர்களிடமிருந்தான வருமதிகள்**

| | | |
|---|---|---|
| அரசாங்க நிறுவனங்கள் | 217,806,005 | 243,243,702 |

வியாபார வருமதிகளின் கால முதிர்வு பின்வருமாறு.

வியாபார வருமதிகளின் கால முதிர்வு

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் வரை | 733,865,504 | 1,931,374,657 |
| 1 தொடக்கம் 4 வருடங்கள் வரை | 346,677,041 | 532,088,212 |
| நான்கு வருடங்களுக்கு மேற்பட்டது | 749,253,484 | 585,908,130 |
| | 1,829,796,029 | 3,049,370,999 |

வியாபார வருமதிகள் பெறுமதிக் குறைவிற்காக மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. சில வியாபார வருமதிகளானவை பெறுமதி குறைந்து காணப்பட்டுள்ளதுடன் குறிப்பு 3.9.1 இல் குறிப்பிடப்பட்டவாறான அடிப்படையில் பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வியாபார வருமதிகளின் பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாடு பற்றிய விபரங்கள்;**

**திட்டவட்டமான பெறுமதிக்குறைவு**

| | | | |
|---|---|---|---|
| அரசாங்க நிறுவனங்கள் | | 36,206,870 | 36,206,870 |
| வெளிநாட்டு முகவர்கள் | | 64,024,592 | 64,024,592 |
| தனியார் நிறுவனங்கள் | | 44,083,601 | 44,083,601 |
| ஏனையவை | | 31,944,098 | 31,944,098 |
| **ஒருமித்த பெறுமதிக்குறைவு** | | 833,766,889 | 693,614,335 |
| | | 1,010,026,050 | 869,873,496 |

## 18.2 வைப்புகளும் முற்பணங்களும்

| | | | |
|---|---|---|---|
| கொள்கலன் வைப்புகள் | | 18,554,346 | 13,642,255 |
| ஏனைய மீளச்செலுத்தக்கூடிய வைப்புகள் | | 6,124,052 | 6,042,809 |
| முற்பணங்கள் | | 3,671,478 | 6,994,154 |
| | | 28,349,877 | 26,679,218 |
| பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு | | (8,328,910) | (8,328,910) |
| | 18 | 20,020,967 | 18,350,308 |

## 18.3 அலுவலர் குழாத்து வருமதிகள்

| | | | |
|---|---|---|---|
| அலுவலர் குழாத்து கடன்கள் | | 51,789,854 | 51,092,349 |
| முற்பணங்களும் ஏனையவையும் | | 3,252,182 | 1,448,442 |
| | 18 | 55,042,036 | 52,540,792 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18.4 | **ஏனைய வருமதிகள்** | | | |
| | உத்தரவாத திருத்தவேலை வருமதிகள் | | 19,839,635 | 19,839,635 |
| | பொதுத் திறைசேரியிலுள்ள அரச நிறுவனங்களின் தற்காலிக மிகை நிதியம் | | - | - |
| | ஏனையவை | | 64,490,507 | 58,770,223 |
| | | | 84,330,142 | 78,609,858 |
| | பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு | | (23,301,810) | (23,301,810) |
| | | 18 | 61,028,331 | 55,308,048 |
| 19 | **நியதிச்சட்ட வருமதிகள்** | | | |
| | பிடித்துவைத்தல் வரி | | 8,464,489 | 8,472,050 |
| | பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | | 18,936,777 | 18,936,777 |
| | பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு | | (18,936,777) | - |
| | தேசிய பாதுகாப்பு வரி | | 2,612,349 | 2,612,349 |
| | பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு | | (2,612,349) | - |
| | இரட்டை வரி | | 2,141,662 | 2,141,662 |
| | | | **10,606,151** | **32,177,013** |
| 20 | **முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்ட** | | | |
| | திறைசேரி உண்டியல்களிலான முதலீடு | | 120,615,896 | 143,997,433 |
| 21 | **குறுங்கால முதலீடுகள்** | | | |
| | நிலையான வைப்புக்களிலான முதலீடு | 21.1 | 1,945,051 | 1,890,429 |
| | பொதுத் திறைசேரியில் S/I மிகை நிதியம் | | - | 57,019 |

| | | |
|---|---|---|
| அரச ஈட்டு, முதலீட்டு வங்கி - அலுவலர் குழாத்து கடன்கள் சார்பில் | 22,894,559 | 22,160,475 |
| | **24,839,609** | **24,107,923** |

| | | குறிப்புகள் | 2021 | 2020 |
|---|---|---|---|---|
| 21.1 | **நிலையான வைப்புக்களிலான முதலீடு** | **குறிப்புகள்** | **2021** | **2020** |
| | | | **ரூபா.** | **ரூபா.** |
| | இலங்கை வங்கி | | 1,310,700 | 1,310,700 |
| | கொமர்ஷியல் பாங் ஒவ் சிலோன் | | 35,000 | 35,000 |
| | கொமர்ஷியல் பாங் ஒவ் சிலோன் பிஎல்சி - பாதுகாப்பு மற்றும் வீடமைப்புக் கடன் | | 599,351 | 544,729 |
| | | 21 | 1,945,051 | 1,890,429 |

**22 காசும் காசுக்கு சமமானவையும்**

| | | |
|---|---|---|
| கையிலுள்ள காசு | 77,090 | 91,968 |
| வங்கியிலுள்ள காசு | 847,586,043 | 479,417,163 |
| காசுப் பாய்ச்சற் கூற்றுக்கான மீதி | **847,663,133** | **479,509,131** |

**23 கூறப்பட்ட மூலதனம்**

**வழங்கப்பட்டதும் முழுமையாக செலுத்தப்பட்டதும்**

| | | |
|---|---|---|
| ஒவ்வொன்றும் 10/= ரூபா படி 5,000,000 சாதாரண பங்குகள் | **50,000,000** | **50,000,000** |

**24 உரிமைமுதல் மூலதனத்திற்கு எதிரான பங்களிப்பு**

மூலதனப் பங்களிப்பு, தொழிற்படு மூலதனத்திற்கான முற்பணங்கள் மற்றும் கப்பல் சேவைகளுக்கான புதிய பிரயாணி முனைவிடத்திலான முதலீடுகள் சார்பில் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியங்களை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**25 மூலதன ஒதுக்கு**

மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட ASTARSA கடன் மற்றும் திறைசேரி உத்தரவாதக் கடன் உள்ளடங்கலாக இக் கம்பனியின் சார்பில் திறைசேரியினால் செய்யப்பட்ட தீர்ப்பனவுகளை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**26 மறுபடி விலைமதிப்பு ஒதுக்கு**

1994 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விலைமதிப்பிற்கு அமைவாக ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் மறுபடி விலைமதிப்பு மிகையுடன் மறுபடி விலைமதிப்பு ஒதுக்கு தொடர்புடையது. உரிய மறுபடி விலைமதிப்பு செய்யப்பட்ட சொத்துக்கள் கண்டறிதலிலிருந்து நீக்கப்பட்டதும், மறுபடி விலைமதிப்பு செய்யப்பட்ட மிகையின் பகுதியானது நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகளுக்கு மாற்றப்படும்.

**28 நீண்டகால கடன்பெறல்கள்**

| | | | |
|---|---|---|---|
| மக்கள் வங்கி - கப்பல் கடன் | 28.1 | 11,283,156,548 | 11,527,755,000 |
| மக்கள் வங்கி - வட்டி மூலதனமாக்கல் கடன் | 28.2 | 856,541,371 | 906,528,858 |
| | | **12,139,697,919** | **12,434,283,858** |

**28.1 மக்கள் வங்கி - கப்பல் கடன்**

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி | | 12,336,045,000 | 11,411,082,000 |
| ஆண்டின் போதான கொடுப்பனவுகள் | | (705,093,752) | - |
| செலாவணி நட்டம் | | 577,315,750 | 924,963,000 |
| | | 12,208,266,998 | 12,336,045,000 |
| ஒரு வருடத்திற்குள் மீள்செலுத்தத்தக்கது | 31 | 925,110,450 | 808,290,000 |
| ஒரு வருடத்திற்குப் பின்னர் மீள்செலுத்தத்தக்கது | 28 | 11,283,156,548 | 11,527,755,000 |

முழுப் பெறுமதியையும் காலப்பகுதியையும் உள்ளடக்குவதற்கான உத்தரவாதத்தை திறைசேரி வழங்கியுள்ளது.

| 28.2 | மக்கள் வங்கி - வட்டி மூலதனமாக்கல் கடன் | குறிப்புகள் | 2021 | 2020 |
|---|---|---|---|---|
| | | | ரூபா. | ரூபா. |
| | ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி | | 906,528,858 | 838,556,858 |
| | செலாவணி நட்டம் | | 45,173,353 | 67,972,000 |
| | ஆண்டிறுதியிலுள்ள மீதி | | 951,702,211 | 906,528,858 |
| | ஒரு வருடத்திற்குள் மீள்செலுத்தத்தக்கது | 31 | 95,160,840 | - |
| | ஒரு வருடத்திற்குப் பின்னர் மீள்செலுத்தத்தக்கது | 28 | 856,541,371 | 906,528,858 |

முழுப் பெறுமதியையும் காலப்பகுதியையும் உள்ளடக்குவதற்கான உத்தரவாதத்தை திறைசேரி வழங்கியுள்ளது.

**29 ஓய்வுபெறல் பயன் கடப்பாடு - பணிக்கொடை**

| | | |
|---|---|---|
| ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி | | 42,095,585 | 35,486,499 |
| ஆண்டுக்கான ஏற்பாடு | 29.1 | 6,525,934 | 13,451,893 |
| | | 48,621,519 | 48,938,392 |
| சென்மதி பணிக்கொடை | | (773,500) | |
| ஆண்டின் போது செய்யப்பட்ட கொடுப்பனவுகள் | | (7,441,695) | (6,842,807) |
| ஆண்டிறுதியிலுள்ள மீதி | | **40,406,325** | **42,095,585** |

**29.1 ஆண்டுக்கான ஏற்பாடு**

| | | | |
|---|---|---|---|
| நிகழ்கால சேவைக் கிரயம் | | 2,320,215 | 2,136,515 |
| ஆண்டுக்கான வட்டிச் சாட்டுதல் | | 1,539,248 | 1,727,690 |
| இடர் கணிப்பீடுசார் எடுகோள்களின் மாற்றங்களிலிருந்து எழுகின்ற நட்டம் | | 2,666,471 | 9,587,688 |
| | 29 | 6,525,934 | 13,451,893 |

**பயன்படுத்தப்பட்ட பிரதான எடுகோள்கள் பின்வருமாறு.**

| | | |
|---|---|---|
| கழிவீட்டுக் காரணி | 4.50% | 6.00% |
| எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்பு | 1.11% | 1.11% |
| அலுவலர் குழாத்து புறள்வுக் காரணி | 5.13% | 6.80% |
| ஓய்வுபெறல் வயது | 60 வருடங்கள் | 60 வருடங்கள் |

ஓய்வுபெறல் பயன் கடப்பாட்டை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மாறிகள் பற்றிய முகாமையின் சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் இவ் எடுகோள்கள் கம்பனியினால் விருத்திசெய்யப்பட்டுள்ளன. நீண்டகால அரசாங்க முறியின் சந்தை வீதங்களின் அடிப்படையில் கழிவீட்டுக் காரணி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**30 வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்**

| | | |
|---|---|---|
| வியாபார சென்மதிகள் | 502,049,215 | 1,161,351,942 |
| வைப்புகள் | 5,472,748 | 4,980,684 |
| கப்பல் கடனுக்கான சென்மதி வட்டி | 111,746,281 | 149,519,734 |
| ஏனையவை | 212,710,263 | 302,410,075 |
| | **831,978,507** | **1,618,262,435** |

**31 குறுங்கால கடன்பெறல்கள்**

| | | |
|---|---|---|
| மக்கள் வங்கி - கப்பல் கடன் | **1,020,271,290** | **808,290,000** |

**32 நியதிச்சட்ட சென்மதிகள்**

| | | |
|---|---|---|
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (N.B.T) | - | 9,010 |
| வருமான வரி | 9,665,215 | 9,665,215 |
| முத்திரைத் தீர்வை | 31,699 | 30,974 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 62,871,983 | 66,473,609 |
| பொருட்கள் சேவைகள் மீதான வரி | 1,262 | 1,262 |
| | **72,570,160** | **76,180,071** |

**33 அட்டுறு செலவுகள்**

| | | |
|---|---|---|
| அட்டுறு செலவுகள் | **29,208,766** | **26,533,843** |

## 34 எதிர்பாரா பொறுப்புகள்

தீர்ப்பனவுச் சாத்தியப்பாடு மிகக் குறைவாக காணப்படல் காரணமாக சாதாரண வியாபார நடவடிக்கையிலிருந்து எழும் சட்ட உரிமைக் கோரிக்கைகள் நியாயமாக்கப்பட வேண்டுமா என்பதையும் வளங்களின் வெளிப்பாய்ச்சலொன்றின் சாத்தியப்பாடு உள்ளதா என்பதையும் கருத்திற்கொள்வதற்கு அக்கோரிக்கைகள் தவிர நிதிக் கூற்றுக்களுக்கான சீராக்கங்களை அல்லது வெளிப்படுத்தலை தேவைப்படுத்திய, அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலுள்ளவாறு பொருண்மையான எதிர்பாரா பொறுப்புகள் எவையும் காணப்படவில்லை. இம் மதிப்பீடானது கம்பனியின் சட்டப் பிரிவின் சட்ட அபிப்பிராயத்திற்கு ஒத்திசைவாக உள்ளது, ஆதலால், பின்வரும் விடயங்களுக்காக எந்தவொரு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

1. எம்வீ லங்கா மஹாபொல கப்பலானது 2011 ஆம் ஆண்டில் M/s Triple “S” Shipping கம்பனிக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டது. கூறப்பட்ட கம்பனியானது சில வாடகைகளைச் செலுத்திய பின்னர் வாடகையைச் செலுத்த தவணை தவறியுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து கப்பற் பணியாளர் சம்பளங்கள் மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகளில் பெருமளவு நிலுவைத் தொகையுடன் கப்பலின் முறையான மீள்வழங்குகையின்றி கென்யாவின் மொம்பச துறைமுகத்தில் இக்கப்பலைக் கைவிட்டது அத்துடன் இக்கப்பலானது கைப்பற்றப்பட்டு கடல்சார் அதிகாரிகளினால் தடுத்துவைக்கப்பட்டது. M/s Triple “S” Shipping Ltd நிறுவனத்திலிருந்து சகல நிலுவைகளையும் அறவிடும் நோக்குடன், அவர்களுடன் கைச்சாத்திடப்பட்ட வாடகைக்கமர்த்தல் தரப்புக்கு ஏற்ப நடுத்தீர்ப்புச் செய்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அது செய்முறையில் உள்ளது.

   இரு தரப்பினர்களினதும் முன்னிலையில் இலங்கை தேசிய நடுத்தீர்ப்பு நிலையத்தில் 2021.01.25 ஆம் திகதியன்று விசாரணை நடாத்தப்பட்டதுடன், முன்னாள் தனித்த நடுத்தீர்ப்பாளரானவர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று இத்தரப்பினர்களுக்கு அறிவித்தார் அத்துடன் உரிமைக்கோரிக்கையாளர் அரசுக்குடமையான கம்பனியொன்றாக இருப்பதனால் உரிமைக்கோரிக்கையாளருடன் தொடர்புற்ற விடயமொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு தொடர்புபடுத்தப்படின் சாத்தியமான ஆர்வ முரண்பாடொன்று காணப்பட முடியும். அதற்கிணங்க, இந்த நடுத்தீர்ப்பாளரானவர் கூறப்பட்ட நடுத்தீர்ப்பிலிருந்து அவராகவே பின்வாங்கினார் அத்துடன்/அல்லது பதவி விலகினார். அதற்கிணங்க, நாம் இரு நடுத்தீர்ப்பாளர்களை பெயர்குறித்து நியமித்ததுடன் பதிவுத்தபால் மூலம் அவர்களுக்கு அறிவித்தோம், இருப்பினும் Triple “S” Shipping நிறுவனத்திலிருந்து எந்தவித பதிலும் இல்லை. புதிய நடுத்தீர்ப்பாளர் ஒருவரை நியமிக்கும் பொருட்டு நடுத்தீர்ப்புச் சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்ப செயற்படுவதன் மூலம் கூறப்பட்ட அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்டவாறு நடவடிக்கையினைத் தொடர்வதே அடுத்த படிமுறையாகும். அதற்கிணங்க, நடுத்தீர்ப்புச் சட்டத்தின் 9 ஆம் 7 ஆம் பிரிவுகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, மேல் நீதிமன்றத்தினால் நடுத்தீர்ப்பாளர் ஒருவரை நியமிப்பதைக் கோரி மேல் நீதிமன்றத்திற்கு மனு மற்றும் சத்தியக்கடதாசி மூலம் விண்ணப்பமொன்று செய்யப்பட்டது. இவ்விண்ணப்பம் மேல் நீதிமன்றத்தினால் பதிவுசெய்யப்படுவதை CSC எதிர்பார்த்திருக்கின்றது.

2. இலங்கை மின்சார சபைக்கு (CEB) சொந்தமான புத்தளத்திலுள்ள “லக்விஜய” மின்நிலையத்திற்கான நிலக்கரிப் பெறுகை பிரிவான லங்கா கோல் கொம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் (LCC) நிறுவனம் சார்பில் நிலக்கரியை வழங்கும் பொருட்டு இந்தியாவின் மும்பையிலுள்ள எம்/எஸ். றௌரியன் அயன் & ஸ்றீல் கொம்பனியுடன் (TISC) உடன்படிக்கையொன்றை இக் கம்பனி கைச்சாத்திட்டது. TISC இனால் வழங்கப்பட்ட நிலக்கரியின் தரம்சார் பிரச்சினையொன்று காரணமாக கூறப்பட்ட உடன்படிக்கையின் கீழான நிலக்கரி வழங்கலை இடைநிறுத்தி வைக்கவேண்டியிருந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்தினால் ஆலோசிக்கப்பட்டவாறு சுமூகமான தீர்வொன்றை எட்டும் பொருட்டு அமைச்சரவையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழு அறிக்கையொன்றைத் தொகுத்து மேலதிக நடவடிக்கையின் பொருட்டு வரிசை அமைச்சுக்கு சமர்ப்பித்தது. அதன்பின்னர் வரிசை அமைச்சானது அவ்வறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் இலங்கை மின்சார சபையினதும் லங்கா கோல் கொம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் (LCC) நிறுவனத்தினதும் மீளாய்வு மற்றும் கருத்துகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அவற்றிடம் சமர்ப்பித்துள்ளது. அறியத்தரப்பட்டவாறு கருத்துகளும் கரிசனைகளும் வரிசை அமைச்சுக்கு இன்னமும் கிடைக்கப்பெறவில்லை.

3. வெளிநாட்டு கப்பல் உரிமையாளருக்கும் மசகு எண்ணையை கொண்டுசெல்வதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது யாரிடமிருந்து கப்பலை வாடகைக்கமர்த்தியதோ அச் சட்டரீதியான பதிவுசெய்யப்பட்ட கப்பல் உரிமையாளருக்கும் இடையில் எழுந்த பிணக்கொன்றின் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்காக மசகு எண்ணையை எடுத்துச்செல்வதை இடைநிறுத்த வேண்டியிருந்தது. இவ் இடைநிறுத்தலானது, வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்கும், சட்டரீதியான பதிவுசெய்யப்பட்ட கப்பல் உரிமையாளரான எம்எஸ் லூனா ஷிப்பிங் நிறுவனத்திற்கும் அத்துடன் இறுதியாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் நிதிப் பிணக்கினை விளைவித்தது. எம்எஸ் லூனா ஷிப்பிங் நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்துடனான நிதிப் பிணக்கானது சட்டமா அதிபர் திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் அறவீட்டுத் தெரிவுக்காக அவற்றுடன் கைச்சாத்திடப்பட்ட COA இற்கமைவாக லண்டனில் நடுத்தீர்ப்புச் செய்முறை முன்னெடுக்கப்பட முடியும் என்பதே சட்டமா அதிபரின் கருத்தாக அமைந்தது. அதேநேரம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடனான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினதும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அத்துடன் திறைசேரியினதும் உயர் தரவரிசையிலுள்ள உத்தியோகத்தர்களைக் கொண்டு குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் செய்முறையில் குழுவானது, குழுவின் அறிக்கையை முற்றாக்கும் பொருட்டு சில சட்டப் பிரச்சினைகள் பற்றிய தெளிவூட்டல் கருதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கூட்டுச் சமர்ப்பிப்பொன்றைச் செய்யுமாறு வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திடமும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளது. கூட்டுச் சமர்ப்பிப்பைத் தயார்படுத்தலானது செய்முறையில் உள்ளது. இச்சூழ்நிலைகளில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடனான பிரச்சினை தீர்க்கப்படும் வரை லண்டனிலுள்ள லூனா ஷிப்பிங் நிறுவனத்திற்கு எதிராக நடுத்தீர்ப்புச் செய்முறையின் ஆரம்பிப்பை வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை தள்ளிவைத்தது. கூறப்பட்ட குழுவானது அதன் இடைக்கால அறிக்கையில், கூட்டுக் கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்து சட்டமா அதிபர்

திணைக்களத்திலிருந்து தெளிவூட்டலைப் பெறுவதற்கு சில சட்டப் பிரச்சினைகளைப் பாரப்படுத்துமாறு பரிந்துரை செய்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து வரைவுக் கடிதத்தின் உடன்பாடு இன்னமும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

4. 2020 ஏப்பிறல் 28 ஆம் திகதியளவில், சீன ஆள்புல கடல் பகுதிகளில் எம்.வீ.சிலோன் பிறீஸ் கப்பலுக்கும் மீன்பிடிப் படகொன்றுக்கும் (FV) இடையில் மோதல் சம்பவம் ஒன்று அறிக்கையிடப்பட்டது. இவ்விடயமானது மோதல் பொறுப்புகளின் கீழ் கருத்திற்கொள்ளப்பட்டது, அதில் H&M காப்புறுதிப் பொறுப்பானது, சேத உரிமைக்கோரிக்கை கழிபடக்கூடிய 100,000 ஐ.அ. டொலருக்கு கீழாக இருந்தமை காரணமாக விலக்களிக்கப்பட்டது. ஆனால் P&I Club நிறுவனத்தின் பொறுப்பானது அதன் (¼) பங்கு சார்பில் மாற்றமுறாமல் தொடர்ந்திருந்தது. இச்சூழ்நிலைகளின் கீழ், இறுதி உரிமைக் கோரிக்கையிலும் மதிப்பீட்டுச் செலவுகள், தொடர்பாளர் செலவுகள், சட்டக் கட்டணங்கள் போன்ற அதன் இணைந்த செலவுகளிலும் மீதமுள்ள (¾) பங்கினை வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினால் உள்ளீர்க்க வேண்டியிருக்கின்றது. P&I Club நிறுவனத்தினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணிகளுக்கும் மீன்பிடிப் படகின் (FV) சட்டத்தரணிகளுக்கும் இடையிலான இணக்கப்பேச்சில் இவ்விடயம் தற்போது உள்ளது.

## 35 தொடர்புபட்ட தரப்பினர்களின் வெளிப்படுத்தல்கள்

இக்கம்பனியின் தொடர்புபட்ட தரப்பினரானோர் இலங்கை அரசாங்கம், அரசுக்குடமையான தொழில்முயற்சிகள், ஏனைய தொடர்புபட்ட நிறுவனங்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரை உள்ளடக்குகின்றனர்.

## 35 தொடர்புபட்ட தரப்பினர்களின் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

### 35.1 பிரதான முகாமைத்துவ ஆளணியினருடனான (KMPs) கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள், LKAS 24 - “தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள்” என்பதற்கிணங்க, நிறுவனத்தின் செயற்பாடுகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ திட்டமிட்டு, வழிப்படுத்திக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டுள்ளவர்களே பிரதான முகாமைத்துவ ஆளணியினர் ஆவர். அதற்கிணங்க, பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் மற்றும் செயற்பாட்டு முகாமையாளர்கள் இக் கம்பனியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**பிரதான முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள்**

| | **2021** | **2020** |
|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** |
| ஊதியமும் ஏனைய குறுங்கால தொழில் பயன்களும் | 35,378,957 | 36,626,336 |
| செலுத்தவேண்டிய மீதி - கடன்களும் முற்பணங்களும் | 6,494,542 | 7,835,787 |
| செலுத்தவேண்டிய மீதி - தொழிலுக்குப் பின்னரான பயன்கள் | 14,144,916 | 14,859,187 |

## 35.2 தொடர்புபட்ட நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

கம்பனி மேற்கொண்ட முக்கியமான தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

**இலங்கை அரசாங்கம், அரசுக்குடமையான தொழில்முயற்சிகள், ஏனைய அரசாங்கத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்**

இலங்கை அரசாங்கமே இக்கம்பனியின் மூலதனப் பங்குதாரர் ஆவதுடன் ஆதலால் இதன் நடவடிக்கை மீதான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. அதற்கிணங்க, இலங்கை அரசாங்கத்தையும் தொடர்புபட்ட தரப்பினர்களாக இலங்கை அரசாங்கத்தினால் (அரசாங்கத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்களினால்) கட்டுப்படுத்தப்படும், கூட்டாகக் கட்டுப்படுத்தப்படும் அல்லது குறிப்பிடத்தக்களவு செல்வாக்கிற்கு உட்படுத்தப்படும் ஏனைய நிறுவனங்களையும் இக்கம்பனி கரிசனையிற் கொண்டுள்ளது.

| **தொடர்புபட்ட தரப்பினர்கள்** | **கொடுக்கல்வாங்கல்களின் தன்மை** | **கொடுக்கல்வாங்கல் பெறுமதி** | **2021/03/31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி (செலுத்தவேண்டியது)/ வருமதி** |
|---|---|---|---|
| | | **ரூபா.** | **ரூபா.** |
| இலங்கை அரசாங்கம் | சரக்குக் கட்டணங்கள், வாடகைக்கமர்த்தல், கொள்கலன் வாடகை, அப்புறப்படுத்தல் மற்றும் முன்னளித்தல் அத்துடன் ஏனைய கட்டணங்கள் | 325,134,564 | |
| | தீர்ப்பனவுகள் | (203,954,956) | **121,179,608** |
| அரசுக்குடமையான தொழில்முயற்சிகள் | சரக்குக் கட்டணங்கள், அப்புறப்படுத்தல் மற்றும் முன்னளித்தல் அத்துடன் ஏனைய கட்டணங்கள் | 134,710,109 | |
| | தீர்ப்பனவுகள் | (20,020,985) | **114,689,124** |

| | | | |
|---|---|---|---|
| லங்கா கோல் கம்பனி | சரக்குக் கட்டணங்கள், இறக்குதல் மற்றும் எரிபொருள் அறை அதிகரிப்பு கட்டணங்கள் | 4,652,902,079 | |
| | தீர்ப்பனவுகள் | (3,552,949,885) | **1,099,952,195** |
| ஏனைய அரசாங்கத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்கள் | அப்புறப்படுத்தல் மற்றும் முன்னளித்தல் அத்துடன் ஏனைய கட்டணங்கள் | 2,174,919 | |
| | தீர்ப்பனவுகள் | (54,606) | **2,120,314** |

## 36 அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவின் பின்னரான நிகழ்வுகள்

பின்வருவன நீங்கலாக நிதிக் கூற்றுக்களுக்கான சீராக்கங்களை அல்லது வெளிப்படுத்தல்களை தேவைப்படுத்தும், நிதிநிலமைக் கூற்றுத் திகதியிலிருந்து எந்தவொரு சூழ்நிலையும் எழுந்திருக்கவில்லை.

### எம்வீ லியோபோல்ட் மற்றும் எம்வீ சைக்லேட் கப்பல்களுடன் எம்வீ சிலோன் பிறீஸ் கப்பலின் மோதல் சம்பவங்கள்

மொத்தமாக 60,100 மெ.தொன் இரும்புத் தாதுக் குருணிகளை இறக்குவதற்கு இந்தியாவின் பாரதீப் துறைமுகத்திலிருந்து சீனாவின் லியன்யுங்காங் துறைமுகத்திற்கு காலம்சார் வாடகைக்கமர்த்தல் கடற்பயணத்தில் எம்வீ சிலோன் பிறீஸ் கப்பல் ஈடுபட்டது. கப்பல் எரிபொருள் அறைக்கு எரிபொருள் வழங்கலுக்கான நிறுத்தத்திற்காக 2021/06/11 ஆம் திகதியன்று சிங்கப்பூர் துறைமுகத்தில் அக்கப்பல் தரித்துநின்றது.

**1 ஆவது மோதல் (எம்வீ லியோபோல்ட் எல்டி)**

2021/06/11 ஆம் திகதியன்று சிங்கப்பூர் துறைமுகத்தில் கப்பல் எரிபொருள் அறைக்கு எரிபொருளை நிரப்பிய போது, எம்வீ லியோபோல்ட் (மோல்டா கொடியில் பதிவுசெய்யப்பட்டது) எனும் பெயரைக்கொண்ட மற்றுமொரு கப்பலானது எம்வீ சிலோன் பிறீஸ் கப்பலை நோக்கி இழுத்தடிக்கப்பட்டது, அது எமது கப்பலின் உடற்பகுதியின் இடதுபுற கப்பல் பின்பக்க மற்றும் முன்பக்க பகுதிக்கு (port quarter vessel bow area) சேதத்தை விளைவித்தது அதேபோன்று அக்கப்பலுக்கும் சேதத்தை உண்டுபண்ணியது. H&M பொறுப்பு காப்பீடு செய்கின்ற மோதல் பொறுப்புக்களின் கீழ் இவ்விடயம் கருத்திற்கொள்ளப்பட்டது. எமது கப்பலுக்கு மதிப்பிடப்பட்ட சேதம் அண்ணளவாக 590,000/- ஐ.அ.டொலராக காணப்பட்டது.

**2 ஆவது மோதல் (எம்வீ சைக்லேட்)**

எம்வீ சிலோன் பிறீஸ் கப்பலானது 2021/06/12 ஆம் திகதியன்று நங்கூரமிடல் பகுதியில் காணப்பட்ட போது, வெளித் துறைமுகப் பகுதியில் தரித்துநின்ற எம்வீ சைக்லேட் எனும் பெயரைக்கொண்ட மற்றுமொரு கப்பலை நோக்கி இழுத்தடிக்கப்பட்டு, எம்வீ சைக்லேட் கப்பலுக்கும் அதேபோன்று இக்கப்பலுக்கும் சேதத்தை உண்டுபண்ணியது. எமது கப்பலுக்கு மதிப்பிடப்பட்ட சேதமானது கழிபடக்கூடிய மட்டத்திற்கு (100,000/-ஐ.அ.டொலர்) மேலாக இருந்தமையால் H&M காப்புறுதிக் காப்பீடு செயற்படுத்தப்பட்ட மோதல் பொறுப்புக்களின் கீழ் இவ்விடயம் கருத்திற்கொள்ளப்பட்டது. CSC இன் உடன்பாட்டுடன் P & I Club நிறுவனத்தினால் மன்றாடிமார் (சொலிசிட்டேர்ஸ்) நியமிக்கப்பட்டுள்ளதுடன் இரு தரப்பினர்களுக்குமிடையில் பிணையங்களைப் பரிமாறிக்கொள்வதற்கான இணக்கப்பேச்சின் கீழ் இவ்விடயம் தற்போது உள்ளது.

## 37 மூலதனக் கடப்பாடுகள்

இக் கம்பனியானது 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதியன்று Avic International Beijing Company Ltd (சீனா) நிறுவனத்திடமிருந்து 70 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் தொகைக்கு பயிற்சி நோக்கத்துடன் சேர்த்து இரு புதிய 63,600 DWT Ultramax தொகைச்சரக்குக் கப்பல்களை (Bulkers) கொள்வனவு செய்வதற்கு அர்ப்பணிப்புச் செய்துள்ளது. 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று கோரிக்கையிடப்படாத பிரேரிப்பின் கீழ் பயிற்சி நோக்கத்துடன் சேர்த்து இரு புதிய 63,600 DWT Ultramax தொகைச்சரக்குக் கப்பல்களின் கொள்வனவை அமைச்சரவை அங்கீகரித்தது.

கொள்வனவாளர் கடன் நியதிகளின் கீழ் வழங்குநருடன் உடன்படிக்கையொன்றை இக்கம்பனி கைச்சாத்திட்டுள்ளதுடன், ஆதலால் இக்கம்பனியானது 06 மாத LIBOR + 5.5% p.a. (06 மாத LIBOR + வருடமொன்றுக்கு 5.5%) கொண்ட வட்டிவீதத்துடன் 70 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் தொகையினைக் கொண்ட கடன் வசதியினை மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்வதன் மூலம் அதன் நிதித் தேவைப்பாடுகளைக் கோரியுள்ளது. மேலும், மேற்படி கடனிலிருந்து எழுந்துள்ள வட்டியைச் செலுத்தும் பொருட்டு 06 மாத LIBOR + 3% p.a. கொண்ட வட்டிவீதத்துடன் 10 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் கொண்ட மேலதிக தொகையினை மக்கள் வங்கி வழங்கியுள்ளது. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் 5.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை மாத்திரமே பயன்படுத்தியிருந்தது.

நிதி நிலமைக் கூற்றின் திகதியிலுள்ளவாறு, வங்கிக்கு சென்மதியாகவுள்ள தொகை 65,135,464.31 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஆகும்.

## 38 நிதி இடர் முகாமைத்துவம்

இக் கம்பனியானது அதன் நிதியியல் சாதனங்களின் பயன்பாட்டிலிருந்து பின்வரும் இடர்களுக்கான வெளிக்காட்டலை கொண்டுள்ளதுடன் காலத்திற்குக் காலம் இவ் இடர்களைக் குறைப்பதற்கு பல்வேறுபட்ட இடர் முகாமைத்துவ தந்திரோபாயங்களைப் பிரயோகிக்கின்றது.

**38.1** கடன் இடர்

**38.2** திரவத்தன்மை இடர்

**38.3** சந்தை இடர் (செலாவணி இடரும் வட்டிவீத இடரும்)

**38.4** மூலதன முகாமைத்துவம்

விலைகூறப்பட்ட மற்றும் விலைகூறப்படாத உரிமைமுதல் முதலீடுகள், தவணை வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களிலான முதலீடு, காசும் காசுக்குச் சமமானவையும் என்பவற்றை இக் கம்பனியின் நிதியியல் சாதனங்கள் உள்ளடக்குகின்றன. இக்கம்பனியானது அதன் பிரதான வியாபாரச் செயற்பாடுகளிலிருந்தான வியாபார வருமதிகள் மற்றும் சென்மதிகள் என்பவற்றையும் கொண்டுள்ளது. குறுங்கால வைப்புக்களிலான முதலீட்டின் பிரதான நோக்கமானது செயற்பாடுகளுக்கான திரவத்தன்மையைப் பேணுவதாகும். விலைகூறப்பட்ட மற்றும் விலைகூறப்படாத உரிமைமுதல் முதலீடுகளிலான முதலீடானது தந்திரோபாய முதலீடுகளாகும்.

### 38.1 கடன் இடர்

எதிரிணைத் தரப்பானது அதன் ஒப்பந்தக் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு தவறினால் கம்பனிக்கு ஏற்படும் நிதி இழப்பு இடரே கடன் இடராகும். கடன் இடரானது பிரதானமாக வங்கியின் வசமுள்ள வைப்புக்கள், காசும் காசுக்குச் சமமானவையும் (கையிலுள்ள காசு நீங்கலாக) மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்தான வருமதிகள் என்பவற்றிலிருந்து எழுகின்றது. கடன் இடருக்கு உட்பட்ட நிதிச் சொத்துக்களின் ஆகக்கூடிய இடர் வெளிக்காட்டல்களானவை அவற்றின் கொண்டுசெல்லல் தொகைகளுக்குச் சமனாகும்.

2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு அறிக்கையிடப்பட்ட நிதிச் சொத்துக்களின்

ஆகக்கூடிய இடர் வெளிக்காட்டலை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | | 2021 | 2020 |
|---|---|---|---|
| | குறிப்புகள் | ரூபா. | ரூபா. |
| **நிதிச் சொத்துக்களுக்கான இடர் வெளிக்காட்டல்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 38.1.1 | 847,586,043 | 479,417,164 |
| வங்கிகளிடமுள்ள தவணை வைப்புக்கள் | | 24,839,609 | 24,107,923 |
| வியாபார வருமதிகள் | 38.1.2 | 1,829,796,029 | 3,049,370,999 |
| ஏனைய வருமதிகள் | | 136,091,334 | 126,199,148 |
| | | 2,838,313,016 | 3,679,095,234 |

**38.1.1 காசும் காசுக்குச் சமமானவையும்**

வங்கியிலுள்ள காசு (கையிலுள்ள காசு நீங்கலாக), கேள்வி வைப்புகள் மற்றும் மூன்று அல்லது அதற்குக் குறைவான மாதங்களைக் கொண்ட ஆரம்ப முதிர்வுகளுடன்கூடிய ஏனைய குறுங்கால உயர் திரவத்தன்மை பொருந்திய முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்கும் காசும் காசுக்குச் சமமானவையும் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

| | குறிப்புகள் | 2021 | 2020 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| வங்கியிலுள்ள காசு | | 847,586,043 | 479,417,164 |
| | 38.1 | 847,586,043 | 479,417,164 |

**38.1.2 வியாபார வருமதிகள்**

இக் கம்பனியானது பிரதானமாக கப்பல் முகவர்களுடனும் அரசாங்க நிறுவனங்களுடனும் வியாபாரம் செய்கின்றது. கடந்தகால அனுபவத்தின் அடிப்படையில் கப்பல் முகவர்களின் கடன் தரத்தினை முகாமையானது மதிப்பிடுகின்றது. மேலும், செலுத்தவேண்டிய மீதிகளானவை முகாமைத்துவக் குழுவிலும் சபையிலும் தொடர்ந்துசெல்லும் அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றது.

இக் கம்பனியின் வியாபார வருமதிப் பட்டியலின் கால முதிர்வுப் பகுப்பாய்வு பின்வருமாறு:

| | குறிப்புகள் | 2021 | 2020 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| **வியாபார வருமதிகளின் கால முதிர்வு** | | | |
| ஒரு வருடம் வரை | | 733,865,504 | 1,931,374,657 |
| 1 தொடக்கம் 4 வருடங்கள் வரை | | 346,677,041 | 532,088,212 |

| | | | |
|---|---|---|---|
| நான்கு வருடங்களுக்கு மேற்பட்டது | | 749,253,484 | 585,908,130 |
| | **38.1** | 1,829,796,029 | 3,049,370,999 |

வியாபார வருமதிகள் தொடர்பில் உறப்பட்ட நட்டங்களின் மதிப்பீட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாட்டிற்கான கொள்கையினை (நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 3.9.1 இனைப் பார்க்கவும்) இக் கம்பனி உருவாக்கியுள்ளது. உருவாக்கப்பட்ட பெறுமதிக்குறைவு கொள்கைக்கு இணங்க, பெறுமதிக்குறைவு நட்டத்தை அளவிடும் பொருட்டு வாடிக்கையாளர்கள் தனித்தனியாக மீளாய்வு செய்யப்படுகின்றனர். வியாபார வருமதிகள் மற்றும் பெறுமதிக்குறைவு நட்டத்திற்கான ஏற்பாடு ஆகியன தொடர்பில் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 18.1 இனை தயவுகூர்ந்து பார்க்கவும்.

### 38.1.3 ஏனைய நிதிச் சொத்துக்கள்

இக் கம்பனியின் ஏனைய நிதிச் சொத்துக்களிலிருந்து எழும் கடன் இடரானது வங்கிகளின் வசமுள்ள வைப்புக்களை உள்ளடக்குகின்றது. இந்நிதியியல் சாதனங்களின் கொண்டுசெல்லல் தொகைக்கு சமமாக ஆகக்கூடிய வெளிக்காட்டலுடன், ஒப்பந்த தரப்பினர்களின் ஒப்பந்தக் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்ய தவறுவதிலிருந்து கம்பனியின் கடன் இடருக்கான வெளிக்காட்டல் எழுகின்றது. கம்பனியானது இந்நிதியியல் சாதனங்கள் தொடர்பான அதன் கடன் இடர்களை, பிரதானமாக அதன் நிதியத்தை அரச வங்கிகளிலும் கடன் தரப்படுத்தல் வங்கிகளிலும் வைத்திருப்பதன் மூலம் முகாமிக்கின்றது.

### 38.2 திரவத்தன்மை இடர்

கம்பனியின் நிதிக் கடப்பாடுகள் நிலுவையாகவுள்ள போது அவற்றைப் பூர்த்திசெய்வதற்கு கம்பனியினால் இயலாதிருக்கும் இடரே திரவத்தன்மை இடராகும். இக்கம்பனியின் திரவத்தன்மையை முகாமிப்பதற்கான அணுகுமுறை என்பது, ஏற்றுக்கொள்ளமுடியாத நட்டங்களை ஏற்படுத்தாமல் சாதாரண மற்றும் எதிர்பார்க்காத நிலமைகள் ஆகிய இரண்டின் கீழும் நிலுவையாகவுள்ள போது அதன் பொறுப்புக்களைப் பூர்த்திசெய்வதற்குப் போதுமான காசை அது எப்போதுமே கொண்டிருக்கும் என்பதை எந்தளவுதூரம் சாத்தியப்படுகின்றதோ அந்தளவிற்கு உறுதிப்படுத்துவதே ஆகும்.

கம்பனியானது நிதிச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கண்காணிப்பதுடன் எதிர்வுகூறப்பட்ட செயற்பாட்டு காசுப் பாய்ச்சல்களை மாதாந்தம் தயாரிக்கின்றது. பிரிவுசார் செயற்றிறனை கண்காணிக்கும் பொருட்டு ஒவ்வொரு பிரிவிலும் வருடாந்த வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது. கம்பனியானது செயற்பாட்டுத்

தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குப் போதுமான காசைக் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மாதாந்த எதிர்வுகூறப்பட்ட செயற்பாட்டு காசுப் பாய்ச்சல்களையும் வருடாந்த வரவுசெலவுத்திட்டம் மற்றும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளையும் முகாமையானது கண்காணிக்கின்றது.

ஒப்பந்த முதிர்வுத் திகதி வரை அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் மீதமுள்ள காலப்பகுதியின் அடிப்படையில் 2021 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு கம்பனியின் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் முதிர்வுப் பகுப்பாய்வினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. இவ் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்ட தொகைகள் ஒப்பந்த கழிவிடப்படாத காசுப்பாய்ச்சல்கள் ஆகும்.

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**
**நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்**
**2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| **நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்** | **கொண்டு செல்லல் தொகை** | **6 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவானது** | **6-12 மாதங்கள்** | **1 வருடத்திற்கு மேற்பட்டது** |
|---|---|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| **நிதிச் சொத்துக்கள்** | | | | |
| விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்கள் | 19,621,054 | - | - | 19,621,054 |
| முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள் | 120,615,896 | 120,615,896 | - | - |
| குறுங்கால முதலீடுகள் | 24,839,609 | - | 1,945,051 | 22,894,559 |
| வியாபார வருமதிகள் | 1,829,796,029 | 1,829,796,029 | - | - |
| ஏனைய வருமதிகள் | 136,091,334 | 61,028,331 | 75,063,003 | - |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 847,586,043 | 847,586,043 | - | - |
| | 2,978,549,966 | 2,859,026,300 | 77,008,054 | 42,515,613 |
| **நிதிப் பொறுப்புக்கள்** | | | | |
| வியாபார சென்மதிகள் | 502,049,215 | 502,049,215 | - | - |
| ஏனைய சென்மதிகள் | 329,929,292 | 212,710,263 | 5,472,748 | - |
| | 831,978,507 | 714,759,478 | 5,472,748 | - |

## 38.3 சந்தை இடர் ( செலாவணி இடர் மற்றும் வட்டி வீத இடர்)

கம்பனியின் வருமானத்தை அல்லது நிதியியல் சாதனங்களின் உடமை வைத்திருப்புகளின் கொண்டுசெல்லல் பெறுமதியை பாதிக்கும் அந்நியச் செலாவணி வீதங்கள் மற்றும் வட்டி வீதங்கள் போன்ற சந்தை விலைகளை மாற்றும் இடரே சந்தை இடராகும்.

### 38.3.1 செலாவணி இடர்

இக் கம்பனியின் செலாவணி இடருக்கான வெளிக்காட்டலானது இலங்கை ரூபாவுக்கு எதிராக ஐக்கிய அமெரிக்க டொலரினதும் (USD) ஏனைய வெளிநாட்டு நாணயங்களினதும் பெறுமதியிலான தளம்பல்களிலிருந்து எழுகின்றது. வழங்கப்பட்ட சில சேவைகள் தொடர்பில் இக் கம்பனியின் தொழிற்பாட்டு நாணயமானது ஐக்கிய அமெரிக்க டொலரும் ஏனைய வெளிநாட்டு நாணயங்களும் ஆகும். சில வியாபார வருமதிகளும் சென்மதிகளும் வெளிநாட்டு நாணயங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

2020/21 ஆம் ஆண்டின் அறிக்கையிடல் காலப்பகுதி சார்பில் செயற்பாட்டுப் பெறுபேறுகளில் இக் கம்பனி அறிக்கையிட்டுள்ளதும் உள்ளடக்கியுள்ளதுமான தேறிய அந்நியச் செலாவணி நட்டம் 622,239,890/- ரூபா ஆகும்.

### 38.3.2 வட்டி இடர்

குறுங்கால வங்கி வைப்புகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் தவணை வைப்புகள் தொடர்பில் சந்தை வட்டி வீதங்களிலான மாற்றங்களே கம்பனியின் வட்டி இடருக்கான வெளிக்காட்டல் ஆகும்.

அரச வங்கிகளிலும் கடன் தரப்படுத்தல் வங்கிகளிலும் வைத்திருக்கப்படும் தவணை வைப்புகள் உள்ளடங்கலான வங்கி மீதிகளை இக்கம்பனி கொண்டுள்ளது. வட்டி வீத நகர்வுகளை முனைப்பாக கண்காணிப்பதன் மூலம் வட்டி வீத இடரை கம்பனி முகாமிக்கின்றது.

### 38.4 மூலதன முகாமைத்துவம்

பங்குதாரர்களுக்கு ஆகக்கூடிய வருவாய்களை வழங்கும் பொருட்டும் மூலதனச் செலவைக் குறைப்பதற்கு உத்தம மூலதனக் கட்டமைப்பொன்றைப் பேணும் பொருட்டும் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடர்ந்துசெல்வதற்கு கம்பனியின் ஆற்றலைப் பாதுகாப்பதற்காக அதன் மூலதனத்தை இக்கம்பனி முகாமிக்கின்றது. கடன், உரிமைமுதல் இணைப்பு விகிதத்தின் அடிப்படையில் மூலதனக் கட்டமைப்பை இக்கம்பனி கண்காணிக்கின்றது. கடன், உரிமைமுதல் இணைப்பு விகிதமானது மொத்த உரிமைமுதலினால் பிரிக்கப்படும் மொத்தக் கடன்பெறல்களாக கணிப்பிடப்படுகின்றது. நிதிநிலமைக் கூற்றில் காட்டப்பட்டவாறு நடைமுறையல்லா மற்றும் நடைமுறைக் கடன்பெறல்களை மொத்தக் கடன்பெறல்கள் உள்ளடக்குகின்றன. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு கம்பனியின் மொத்தக் கடன்பெறல் மற்றும் உரிமைமுதல் விகிதத்தை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | 2020/21 | 2019/20 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| **மூலதன வகுப்பு** | | |
| மொத்த கடன்பெறல்கள் | 12,139,697,919 | 12,434,283,858 |
| மொத்த உரிமைமுதல் | (2,041,613,494) | (1,275,502,117) |
| கடன், உரிமைமுதல் இணைப்பு விகிதம் (x) | -595% | -975% |

### 39 சரக்குக் காப்புறுதிச் செலவுகளை உள்ளீர்த்தல்

17/1791/129/023 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் 2019/06/17 ஆம் திகதியன்று அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் 2019/07/29 ஆம் திகதியன்று வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானம் என்பவற்றுக்கிணங்க, கப்பற்சரக்கு காப்புறுதிச் செலவுகள் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்கு உள்ளீர்க்கப்பட வேண்டியுள்ளதுடன் விபரங்கள் பின்வருமாறு

| நிதியாண்டு | தொகைகள் (ரூபா) |
|---|---|
| 2015/16 | 12,512,559.00 |
| 2016/17 | 21,447,333.00 |

| | |
|---|---|
| 2017/18 | 21,502,890.00 |
| 2018/19 | 22,571,307.28 |

மேலும், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) பட்டியல்கள், காப்புறுதி செய்வோரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் போன்ற மூல ஆவணங்களானவை கணக்கீட்டு பதிவுமுறைகளுக்காக தேவைப்படுவதுடன் 22,571,307.28 ரூபா தொகையானது 2019/03/31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகளில் ஏற்கனவே உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

10,808,348.62 ரூபா தொகையான கப்பற்சரக்கு காப்புறுதி மீளளிப்பானது தேவைப்படும் ஆவணங்கள் கிடைக்காமை காரணமாக கணக்குகளில் எடுக்கப்படவில்லை. 44,654,433.25 ரூபா தொகையான கப்பற்சரக்கு காப்புறுதியின் ஏனைய மீளளிப்புகள் 2019/20 மற்றும் 2020/21 நிதியாண்டுகளின் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகளுக்கு சீராக்கப்பட்டுள்ளன.

## 40 தீவிர மூலதன நட்டம்

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CSC) நிதிக் கூற்றுக்களானவை தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. 2021 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காக 813,320,485 ரூபா கொண்ட தேறிய நட்டமொன்று (2019/20 - 1,154,469,109 ரூபா) CSC இனால் உறப்பட்டுள்ளது. அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு, கம்பனியின் தேறிய சொத்துக்கள் 2,041,613,494 ரூபா கொண்ட எதிர்மறைப் பெறுமானமொன்றைக் காட்டுகின்றது (2019/20 - 1,275,502,117 ரூபா). மேற்போந்த நிதி விளைவுகளுக்கு பின்வருவன பிரதான காரணமாகும்;

- கப்பல் கடனுக்காக செலுத்தப்பட்டுவரும் உயர் வட்டிக் கூறு
- முழுமொத்த வருமானக் கூற்றுக்காக சாட்டுதல் செய்யப்பட்ட இரு கப்பல்களினதும் பெறுமானத்தேய்வு
- ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி தேய்வடைந்தமை காரணமாக முழுமொத்த வருமானக் கூற்றுக்கு சாட்டுதல் செய்யப்பட்ட விசேட செலாவணி நட்டங்கள்
- கப்பல் கடன் தவணைக்கட்டணம் நீங்கலாக நாளாந்த தொழிற்பாட்டுச் செலவுடன் ஒப்பிடுகையில் இரு கப்பல்களினதும் உழைப்புகள் எல்லை மட்டத்தில் உள்ளன
- கப்பல்களின் உயர் பராமரிப்புச் செலவுகள்
- 2016/17 ஆம் ஆண்டிலிருந்து 2020/21 ஆம் ஆண்டுவரை எழுந்த வரிக்குப் பின்னரான தேறிய நட்டங்கள்

மேலும் கப்பல் கடன்களின் மீள்கொடுப்பனவின் நிதிச் செயற்றிறனும் நிதிச் செலவும் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ஏற்ப செய்யப்படும்.

அதற்கிணங்க, 2021 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி நிலைமையின் தேறிய பெறுமதியானது (மொத்த உரிமைமுதலானது) எதிர்மறைப் பெறுமானமொன்றைக் காட்டுகின்றது.

மேலும், கம்பனியின் தேறிய சொத்துக்களின் பெறுமதியானது கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தை (50 மில்லியன் இலங்கை ரூபா) விஞ்சியுள்ளதுடன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 220 ஆம் பிரிவுக்கேற்ப தீவிரமான மூலதன நிலைமை நட்டமொன்று உள்ளது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 219 ஆம் பிரிவுக்கேற்ப, கம்பனியின் பணிப்பாளர்கள் இந்நிலமை பற்றி கலந்துரையாட வேண்டும் என்பதுடன் கம்பனியின் தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு நிலமையுடன் மதிநுட்பமாக செயலாற்ற வேண்டும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது முழுமையாக அரசுக்குடமையான வியாபார நிறுவனம் ஒன்றாவதுடன் 2034 யூன் 03 ஆம் திகதிவரை தொடரும் திறைசேரி உத்தரவாதத்துடன் 71,910,464.32 ஐக்கிய அமெரிக்க டொலர் தொகையான கப்பல் கடன்களும் வழங்கப்பட்டுள்ளன.

| வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்<br>பிரதான அட்டவணை<br>நிர்வாகச் செலவுகள் | | | |
|---|---|---|---|
| கணக்கு இல. | விவரம் | 2021 | 2020 |
| 50000 | அலுவலர் குழாமிற்கான பயிற்சி | 227,755 | 231,180 |
| 50030 | சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு | 14,050,798 | 12,918,595 |
| 50040 | நிறைவேற்று அலுவலர் குழாமின் சம்பளங்கள் | 66,470,465 | 68,820,367 |
| 50050 | எழுதுவினைஞர் மற்றும் இணை அலுவலர் குழாமின் சம்பளங்கள் | 40,606,871 | 38,007,197 |
| 50060 | தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களின் கூலிகள் | 1,169,596 | 954,631 |
| 50080 | மேலதிகநேரக் கொடுப்பனவு | 9,633,445 | 11,183,957 |
| 50090 | மிகையூதியம் | 338,995 | 2,726,942 |
| 50100 | மருத்துவ நிதியத்திற்கான பங்களிப்பு | 44,000 | - |
| 50110 | ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு | 2,810,160 | 2,582,595 |
| 50120 | மருத்துவ விடுமுறைக் கொடுப்பனவு | 4,568,835 | 3,773,043 |
| 50140 | பணிக்கொடைக் கொடுப்பனவுகள் | 6,525,934 | 13,451,893 |
| 50170 | கஸ்டப் படி – நுரைச்சோலை | 1,376,850 | 1,046,900 |
| 60010 | அலுவலக வாடகை | 18,798,180 | 18,254,880 |
| 60020 | அச்சிடலும் எழுதுபொருட்களும் | 1,373,209 | 1,622,390 |
| 60030 | அங்கத்துவ சந்தாப்பணம் | 1,409,553 | 248,743 |
| 60050 | காப்புறுதி | 6,896,863 | 7,907,244 |
| 60060 | அலுவலக மனையிடத்தையும் உபகரணங்களையும் பேணுதல் | 4,700,118 | 4,387,206 |
| 60070 | மின் கட்டணங்கள் - தலைமை அலுவலகம் | 1,354,857 | 1,793,010 |
| 60072 | மின் கட்டணங்கள் - விடுதிகள் | 24,949 | 26,450 |
| 60080 | அலுவலர் குழாத்து நலனோம்பல் | 4,762,216 | 4,954,163 |
| 60090 | பாதுகாவல் கட்டணங்கள் | 2,322,300 | 2,046,959 |
| 60110 | கணனிச் செலவுகள் | 520,190 | 813,331 |
| 60140 | விடுதிப் பராமரிப்பு - மோதர | 17,520 | 57,692 |
| 60170 | மொழிபெயர்ப்பு கட்டணங்கள் | 169,628 | 190,596 |
| 60210 | நீர்ப் பாவனை - தலைமை அலுவலகம் | 180,000 | 180,000 |

| | | | |
|---|---|---|---|
| 60220 | நீர்ப் பாவனை - விடுதி | 38,497 | 21,927 |
| 61010 | தொலைபேசிக் கட்டணங்கள் | 2,210,467 | 2,272,408 |
| 61020 | தபால் மற்றும் தந்தி | 5,065 | 25,370 |
| 61040 | இணையம் / மின்னஞ்சல் கட்டணங்கள் | 2,223,117 | 2,580,924 |
| 62000 | வெளிநாட்டுப் பயணமும் செலவுகளும் | - | 610,043 |
| 62010 | உள்நாட்டுப் பயணம் | 4,835,293 | 3,464,925 |
| 62030 | மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு | 3,597,727 | 4,247,781 |
| 62040 | பிரயாணம் மற்றும் பிழைப்பூதியம் | 54,700 | 83,400 |
| 63010 | கேளிக்கை | 134,976 | 190,669 |
| 63020 | விளம்பரம் | 2,670,056 | 2,664,015 |
| 63040 | அரசாங்கக் கண்காட்சிகளுக்கான செலவுகள் | - | 72,950 |
| 63060 | வருடாந்தப் பதிவு வரி | 41,000 | 271,860 |
| 64000 | பணிப்பாளர் கட்டணங்கள் | 1,097,000 | 225,560 |
| 64010 | கணக்காய்வுக் கட்டணங்கள் | 741,000 | - |
| 64020 | தொழில்நிபுணத்துவக் கட்டணங்களும் சட்டக் கட்டணங்களும் | 637,400 | 953,910 |
| 64060 | கேள்விக் குழு படியும் செலவுகளும் | 556,000 | 846,000 |
| 65010 | நானாவித செலவுகள் | 287,162 | 104,266 |
| 65040 | நன்கொடைகள் | 32,500 | 112,500 |
| 65800 | பெறுமானத் தேய்வு | 5,432,414 | 5,277,432 |
| 70000 | வங்கிக் கட்டணங்கள் | 3,552,427 | 3,981,429 |
| 70030 | மேலதிகப்பற்று வட்டி | 203 | - |
| 70050 | முத்திரைத் தீர்வைச் செலவுகள் கணக்கு | 41,925 | 50,100 |
| | இடர் கணிப்பீடுசார் எடுகோள்களின் மாற்றங்களிலிருந்து எழுகின்ற நட்டம் | (2,666,471.00) | (9,587,688) |
| | | 215,875,765 | 216,649,745 |